# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 307 புரட்டாதி 15ஆம் நாள் புதன்கிழமை 02 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


# தொடர் நெருக்கடிகளால் மகிந்த அணியில் குடிப்பம்

## தயார் நிலையில் தினேஷ் குணவர்த்தன!



கொழும்பு, ஒக்ரோபர் 2

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை இலங்கைக் குடிமகனாக ஏற்றுக்கொள்வதைத் தடுக்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட மனு இன்று புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. கோத்தபாய ராஜபக்ச தொடர்பான வழக்கின் தீர்ப்பு பாதகமாக அமைந்தால், தினேஷ் குணவர்த்தனவை வேட்பாளராகக் களமிறக்க மகிந்த ராஜபக்ச திட்டமிட்டுள்ளார் என்று அறிய முடிகின்றது. அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று தினேஷ் குணவர்த்தனவுக்கும் அவர் அறிவுறுத்தியுள்ளார் என்றும் தெரியவருகின்றது. 25

## இதுவரை 17 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

யாழ்ப்பாணம், ஒக்.2

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று மக்கள் விடுதலை முன்னணி உட்பட 4 பேர் கட்டுப்பணம் செலுத்தினர். நேற்று வரை 17 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். அரச தலைவர் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் 02

## நீதி கிடைக்கும்: கோத்தா நம்பிக்கை

கொழும்பு, ஒக். 2

இலங்கை குடியுரிமையை நான் 2015ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டேன். பின்னர் இந்த ஆண்டு அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிக் கொண்டேன். எந்த இடத்திலும் நான் தவறு செய்யவில்லை. 02

## பாம்பு தீண்டி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக்.2

பாம்பு தீண்டிய பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். உடுவில் ஆலடியைச் சேர்ந்த சு.சுதர்சினி (வயது-28) என்ற 5 பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார். 02

# அனைத்தும் முடிந்து விட்டன அப்படியே விடுவதே நல்லது

## நீராவியடி விவகாரம் தொடர்பில் ஞானசார தேரர் கருத்து



கொழும்பு, ஒக்.2

அனைத்தும் முடிந்து விட்டன. அதை அப்படியே விட்டு விட வேண்டும். தேவையின்றிப் போராட்டங்களை நடத்தும் அவசியம் இல்லை என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, நீராவிடியப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கேணிக்கு அருகே பௌத்த பிக்கு ஒருவரின் உடல் தகனம் செய் 25

## மைத்திரி-சஜித் திடீர் சந்திப்பு! பரபரப்பில் கொழும்பு அரசியல்

கொழும்பு, ஒக்.2

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச நேற்று இரவு அரச தலைவரும், சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் என்று தெரியவருகின்றது.

எதிர்வரும் தேர்தல் கூட்டணி தொடர்பாகவே பேசப்பட்டது 25

## சஜித்துக்கே வாய்ப்பு

### விக்டர் ஐவன் ஆருடம்

கொழும்பு, ஒக்.2

தாழ்த்தப்பட்ட மற்றும் ஏழைகளின் நாயகனாக சஜித்தை மக்கள் நினைக்கிறார்கள். அந்த மக்களின் தொகை அதிகமானது. இது மகிந்த மற்றும் கோத்தா தரப்புக்கும் பெரும் பாதிப்பை உண்டாக்கும். அத 25

## திருக்கேதீஸ்வர வீதி வளைவு: சபைத் தவிசாளர் மீது வழக்கு

மன்னார், ஒக்.2

திருக்கேதீஸ்வரத்தில் வீதி வளைவு அமைப்பதற்கு திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினருக்கு அனுமதி வழங்கியமை எதிர்த்து மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் முஜாஹிருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்த பிரதேச சபைத் தவிசாளர், கத்தோலிக்க மக்கள் சிலரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

திருக்கேதீச்சர வளைவை அமைப்பதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. 2016ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த அனுமதியைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பித்திருந்தனர். அதற்குத் தேவையான ஆவணங்களையும் சமர்ப்பித்திருந்தனர். அதனால் அனுமதி புதுப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

சர்ச்சைகளை 02

## காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு

### மகிந்த ஆதரவு எம்.பி. சரத் நிசாந் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் கொண்ட மாகாண சபையாக 13ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் நிசாந் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரை அலுவலகம் யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில் நேற்றுத் 02

## வவுனியா பம்பைமடுவில் வீதிச் சோதனைச் சாவடி!



வவுனியா, ஒக்.2

வவுனியா- மன்னார் முதன்மை வீதியில் பம்பைமடு சந்தியில் நேற்றுக் காலை புதிதாக இராணுவச் 25






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்வோம்

எலித் தொல்லையால் அவதிப்படாத நாடே இல்லை எனலாம். உலக மக்கள் தொகை எவ்வளவோ அவ்வளவு எலிகள் உலகில் உள்ளன. ஒரு நபருக்கு நாலு எலிகள் என்ற கணக்கில் உள்ளன. எலிகளால் நாம் படும்பாடு கொஞ்சம் நஞ்சமல்ல.

ஆனால், மிக மிக முக்கியமான காரணத்துக்கு எலிகள் பயன்படுகின்றன. எந்த மருந்தையும் கண்டுபிடிப்பதற்கு முன்பும், பின்பும் எலிகளை வைத்தே பரிசோதிக்கின்றனர். எலியின் பல உடல் உறுப்புகள் மனிதனின் உடல் உறுப்புகள்போல் இயங்குவதால், மனித உடலில் பயன்படுத்துவதற்கு முன்னர், இந்தச் சோதனை எலிகளுக்கு நடத்தப்படுகிறது. எத்தனையோ புதுப்புது மருந்துகள் எலிகள் மூலம் சோதிக்கப்பட்டு அதன்பிறகு மனிதனுக்குப் பயன்படுகின்றன.

## மரண அறிவித்தல்

### கணபதி நாகசுந்தரம் (நாகமணி)



தோற்றம் 14.12.1941 மறைவு 30.09.2019

கென்ஸ்மன் லேன், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நாகசுந்தரம் 30.09.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - தெய்வி தம்பதியரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகலக்ஷ்மி, நரேந்திரன், நாகராஜன், நாகநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான குண்டுமணி, நல்லப்பு பாக்கியம் மற்றும் நடராஜா ஆகியோரின் சகோதரரும் நிஷாந்தி, றேணு, பாலாலோஜனன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நாகேந்திரம் அவர்களின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (02.10.2019) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கென்ஸ்மன் வீதி,
சாவகச்சேரி

(CS/28427)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### இம்மானுவேல் மங்களதாஸ்

(ஓய்வு பெற்ற- யாழ் மாநகரசபை, நீர்வேலைப்பகுதி ஊழியர்)



யாழ்ப்பாணம் குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும் மருதடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட இம்மானுவேல் மங்களதாஸ் நேற்று (01.10.2019) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இம்மானுவேல் திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சறோ (முன்னாள் ஆசிரியை-கார்மேல் பாலர் பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும் அன்ரலின் றஜிதா (ஆசிரியை- யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), அனற் நேருஷா (ஆசிரியை- யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்) காலஞ்சென்ற அமலின் குயிலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சர்வேஸ்வரன் (புடைவை வர்த்தகர்), லியோன்(வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கொன்செப்ரா ( முன்னாள் அலுவலகர்- கத்தோலிக்க அச்சகம்), அன்ரனிதாஸ் காலஞ்சென்ற மேரி எட்மன்டா ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணேந்திரன் (யாழ் மாநகரசபை), விமலேந்திரன் (லண்டன்), பிறேமா, பாலேந்திரன் (கத்தோலிக்க அச்சகம்), பிறேமா ஆகியோரின் அன்பு மைத்துனரும் டெஸ்மன்- பபிதா (D.O- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை) அவர்களின் அன்புச் சிறிய தந்தையும், கார்த்திகன் (மாணவன்- யா/புனித ஜோண் பொஸ்கோ, வித்தியாலயம்), சுபேனா (மாணவி- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி நாளை (03.10.2019) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு றக்கா வீதியிலுள்ள புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

19/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்

CS28415(16/17)

தகவல்: குடும்பத்தினர்
077 691 6193
077 323 7415

## பொன்மொழிகள்

1. சிறந்தவனாக இரு, சிறந்ததைவைத்திரு, சிறந்ததை செய்.
2. ஓடாத நதியும், தேடாத மனமும் தெளிவுகொள்ளாது.
3. சிந்தனை செய், கோபப்படாதே.
4. நட்பையும் மகிழ்ச்சியையும்இரட்டிப்பாக்க அருகிலிருப்பவர்களுக்குகொடுத்துவிடுங்கள்.
5. தவறே செய்யாத மனிதன் இல்லை,தவறை திருத்திக் கொள்ளாதவன்மனிதனே இல்லை.
6. வாழ்க்கை எளிதாகிவிடும். மன்னிப்பைகேட்பதற்கும், கொடுப்பதற்கும் நாம்கற்றுக்கொண்டால்.
7. தலைகுனிந்து என்னைப் பார், தலைநிமிர்ந்து உன்னை நடக்க வைக்கிறேன். புத்தகம்.
8. இருளைத் தூற்றுவதற்குப் பதில் அகலைஏற்றுங்கள்.

### இதுவரை...

திகதி நடைபெறவுள்ளது. அதற்கான வேட்புமனு எதிர்வரும் 7ஆம் திகதி தாக்கல் செய்யப்படவுள்ளது.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான இதுவரை 17 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தினார். எனினும் தெற்கின் முக்கிய கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி இதுவரை கட்டுப்பணம் செலுத்தவில்லை. (எ-105)

### நீதி...

நான் ஏன் இவற்றில் மோசடி செய்ய வேண்டும்? தேர்தலுக்குப் பயந்து ஜனநாயக வழிமுறைகளை மீறி இவ்வாறான வேலைகளைச் சிலர் செய்கின்றனர். ஆனால், நீதி நிலைநாட்டப்படும் என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன்.

இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

கோத்தபாய ராஜபக்ச இரட்டைக்குடியுரிமை பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பித்த ஆவணங்கள் தொடர்பிலும், கோத்தபாய இலங்கைக்கு குடியுரிமையை தவறான வழிகளில் பெற்றுக் கொண்டார் என்பது தொடர்பிலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மீதான விசாரணை இடம்பெறவுள்ள சூழலில் அவர் இப்படிக் கூறியுள்ளார். (ஒ,5,22)

### பாம்பு...

கடந்த 25ஆம் திகதி வீட்டில் இவரைப் பாம்பு தீண்டியுள்ளது. அவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-7,26)

### திருக்கேதீஸ்வர...

அடுத்து, இரு தரப்பினரும் பேசித் தீர்த்துக் கொள்வதற்காக அனுமதியைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்று கோரப்பட்டது. மத நல்லிணக்கத்தைக் கருத்தில் கொண்டு அந்த அனுமதியை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தேன். தற்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏனைய விடயங்களை நீதிமன்றில் கூறுவேன் என்றும் பிரதேச சபைத் தவிசாளர் முஜாஹிர் தெரிவித்தார். (எ-213)

### காணி...

திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வடக்கு-கிழக்குக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்துக்குச் சென்று பணியாற்றும் போது தமிழ் மக்கள் தமக்கான தீர்வு என்ன என்று கேட்பார்கள். அதற்கு என்ன பதில் கூறுவது என்று நான் மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்சவிடம் நேரடியாகக் கேட்டேன். அதன்போது 13ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபை முறைமை காணி, பொலிஸ் அதிகாரங்கள் கொண்டதாக வழங்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிங்களத்தில் ஆற்றிய உரை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. மொழி பெயர்ப்பாளர் "காணி, பொலிஸ் அதிகாரம் உட்பட" என்ற சொற்பதத்தை விடுத்து மொழி பெயர்த்தார்.

நிகழ்வில் கலந்துகொண்டிருந்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, "காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உட்பட என்றே நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிக்கின்றார்." என்று அந்த இடத்தில் மொழி பெயர்ப்பைத் திருத்தினார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் றெஜினோல்ட் குரே, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் நிசாந், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரசிங்கா மற்றும் மருத்துவர் துஸ்யந்தன் மற்றும் மனோகரன், வணிக முகாமைத்துவ ஒன்றிய பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அதேவேளை, கோத்தபாய ராஜபக்சவுடனான சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், தமிழ் மக்களுக்கான தீர்வு விடயம் பற்றிக் குறிப்பிடும்போது காணி பொலிஸ் அதிகாரங்கள் தவிர ஏனைய விடயங்கள் குறித்து ஆராயலாம் என்று கோத்தபாய ராஜபக்ச கூறியிருந்தார் என்று தெரிவித்திருந்தார். (த-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை ஒன்று!

ஒரு நாள் உடல் உறுப்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்த வயிற்றைப் பற்றிக் குறைபேசிக்கொண்டிருந்தன. என்னடா இது நாமெல்லாம் உழைக்க இந்த வயிறு மட்டும் எந்த வேலையும் செய்யாமல் உண்டு உண்டு வயிறு வளர்க்கிறதே என்று. இந்தச் சத்தம் வயிற்றுக்கும் கேட்டது.

வயிறு உடல் உறுப்புகளைப் பார்த்துக் கேட்டது. "ஏம்பா என்னை எல்லோரும் சேர்ந்து திட்டுறீங்க? நான் என்ன எந்த வேலையுமே செய்யாமலா இருக்கிறேன். நானும்தான் வேலை செய்கிறேன்" என்றது..

அதற்கு எல்லா உறுப்புகளும் ஒன்று சேர்ந்து சத்தமிட்டன.. ஆமாமா... நீயும் உழைப்பது உன் தொப்பையைப் பார்த்தாலே தெரியுதே என்று..

நாங்களெல்லாம் சேர்ந்து ஒரு முடிவெடுத்திருக்கிறோம் என்றது தொண்டை என்ன என்று அச்சத்தோடு கேட்டது வயிறு.. உதடுகள் பேசின..

இனிமேல் நாங்களும் உனக்காக உழைக்கப்போவதில்லை! நீ எப்படி வயிறு வளர்க்கிறாய் என்பதைத்தான் பார்க்கப்போகிறோம் என்று.. வயிறு எதுவும் பேசவில்லை... அமைதியாக இருந்தது.

நாள்கள் சில சென்றன.

உணவு உட்கொள்ளாததால் கண்கள் ஒளி மங்கின!

நாக்கும் உதடுகள் உலர்ந்து போயின! கைகளும் கால்களும் அசைய மறுத்தன!

சீரண உறுப்புகள் உல்லாம் மரண ஓலமிட்டன! வயிறு மட்டும் உறுப்புகளைப் பார்த்துச் சத்தம் போட்டுச் சிரித்தது!

அப்போது மூளை வந்து கட்டளையிட்டது.. 'சரி சரி சண்டை போடாதீங்கப்பா' என்று. இந்தக் கதை சுட்டுவது ஒருவருக்கொருவர் போட்டி பொறாமைகளை தவிர்த்து ஒற்றுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## விழுவதற்கெல்லாம் அழுவதற்கில்லை

இலையுதிர் காலம்
மரம் மொட்டையாக நின்றது.
புல்மேய்ந்த மாடுகள் மரத்தை
இரக்கத்தோடு நோக்கின.
உன் இலைகள் விழுந்துகொண்டே
இருக்கின்றன.
உன்னைப் பார்த்தால்
அழவேண்டும்போல் இருக்கிறது
என்று..
ஒரு மாடு தழுதழுத்த குரலில்
கூறியது.
மரம் சொன்னது.
நான் அதைப்பற்றிக்
கவலைப்படவில்லை. புதிய
தளிர்களுக்காக அவை விழத்தான்
வேண்டும்.
நிமிர்ந்தே நின்றது மரம்.

## காணி குத்தகைக்கு

பளை, பருத்தித்துறை, குடத்தனை. ஆகிய இடங்களில் நீண்ட கால குத்தகைக்கு காணிகள் உண்டு

தொடர்பு: 0778435397

## நல்லூர் பிரதேச சபை

**நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொக்குவில் உப அலுவலக பிரதேசத்தில் அசைவற்ற ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு மக்களின் ஆட்சேபனை பெறும் பொருட்டு செய்யப்படும் அறிவித்தல்**

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 141 முதல் 146 வரையான பிரிவுகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேச சபை எல்லையினுள் கொக்குவில் உப அலுவலக பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் கொக்குவில் உப அலுவலகம் ரீதியாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பட்டியல்களை அசைவற்ற ஆதனங்கள் அமைந்துள்ள இடப்பரப்புக்கான கொக்குவில் உப அலுவலகத்தில் குறித்த ஆதனங்களின் சொந்தக்காரர் / வாடகைக் குடியிருப்பாளர் பரிசோதிக்கலாம்.

மீள் மதிப்பீடுசெய்யப்பட்ட இவ் அசைவற்ற ஆதனங்களின் சொந்தக்காரராயினும் சரி வாடகை குடியிருப்பாளராயினும் சரி குறித்த மதிப்பீடுகளில் ஆட்சேபனைகள் ஏதும் இருந்தால் எழுத்திலான ஆட்சேபனைகளை உரிய ஆவணங்களுடன் இந்த அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாள்களுக்குள் நல்லூர் பிரதேசசபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கலாம் என இத்தால் பகிரங்க அறிவித்தல் வழுங்கப்படுகிறது.

**தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.**

**2019.10.02**
**நல்லூர் பிரதேசசபை**

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்
## 197/04, மூளாய் வீதி, வட்டாரம் - 11

வலிகாமம் மேற்கு பிரதேசசபை, வட்டுக்கோட்டை உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 11 மூளாய் வீதியிலுள்ள இல.197/04 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் தம்பிமுத்து நடராஜா என்றே காணப்படுகின்றது.

பெயர்மாற்றத்துக்குட்படும் ஆதனத்தினை வீரப்பு மகாலிங்கமும், வீரப்பு வேலுப்பிள்ளையும் பெண் இராஜராஜேஸ்வரியும், சோமசுந்தரம் நாதனும், கமலவேலு பெண் சந்திராவும், சோமசுந்தரம் மகள் விமலாவும், சோமசுந்தரம் மகள் திலகமும், சோமசுந்தரம் உறரனும் ஆகியோரில் 1ஆம், 3 ஆம் பேரின் தந்தையாரும் ஏனையோரின் பேரனாருமாகிய கணபதி வீரப்பு என்பவரின் நன்கொடையும் ஆட்சியுமாக இருந்து அவர் இறக்க தம்மை வந்தடைந்த முதுசமும், ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட ஆட்சியும் என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2580/27.07.1986 ஆம் இலக்க உறுதியால் மேற்குறித்தவர்களிடமிருந்து மகாலிங்கம் பத்மராசாவும் பெண் சூரியதேவியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குலசேகரம்பிள்ளை சிவகுமாரும், திருவருள்நாதன் மகேஸ்வரன் பெண் குணாதிகாவும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினைப் பிரசித்த நொத்தாரிசு ச.செல்வராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1297/12.02.2019 ஆம் இலக்க உறுதியால் குறித்த மகாலிங்கம் பத்மராசாவும் பெண் சூரிய தேவியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்கள்.

குறித்த குலசேகரம்பிள்ளை சிவகுமாரும் பெண் நிசாந்தியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1664/ 21.03.2019 ஆம் இலக்க உறுதியால் ஏற்கனவே சொரியல் ஆதனமாகக் காணப்பட்ட ஆதனமானது நீண்டகாலமாக மேற்காக நிந்தப்படுத்தப்பட்டு ஆட்சி செய்யப்பட்டு வரப்படுகின்றது என வெளிப்படுத்தி குறித்த திருவருள்நாதன் மகேஸ்வரனும் பெண் குணாதிகா வும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்த மும் உரித்துமுடையவரானார்கள்.

குலசேகரம்பிள்ளை சிவகுமாரும் பெண் நிசாந்தியும் ஆகியவர்கள் ஆதனப்பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குலசேகரம்பிள்ளை சிவகுமாரும் பெண் நிசாந்தியும் ஆகியவர்களுக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு, பிரதேசசபை.**

(CS/28422)(11.17)

## வீடு / காரியாலயம் வாடகைக்கு

யாழ்ப்பாணத்தின் மையப்பகுதியில் சப்பல் வீதியில் யாழ் நூலகத்திற்கு முன்பாகவும் நீதிமன்றத்திற்கு அருகாமையிலும் அமைந்துள்ள வீடானது காரியாலய தேவைக்கோ அல்லது வீட்டுத்தேவைக்கோ உகந்த நிலையில் வாடகைக்கு உண்டு.

- பெரியளவிலான வரவேற்பு மண்டபத்துடன் கூடிய 07 அறைகள் கொண்டது.
- சமையலறை மற்றும் 03 குளியலறைகள் கொண்டது
- வாடகை ரூபா 75.000/ =

077 769 6443

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 01 . 1976 — மறைவு 30 . 09 . 2019

### திருஞானசம்பந்தர் கோடீஸ்வரன்

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானசம்பந்தர் கோடீஸ்வரன் கடந்த (30.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் மற்றும் கமலாம்பிகை (கோடீஸ் அன்றி) தம்பதிகளின் அன்பு மகனும் சிவசுந்தரம், திசையம்மா (பேபி) தம்பதிகளின் அன்பு மருமகனும், சுபாசினியின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரன் (ஆசிரியர், இளவாலை, சென். கென்றீஸ் கல்லூரி) காலஞ்சென்ற பரமேஸ்வரன், நகுலேஸ்வரன் (UK), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், தர்மவாணி (பிரான்ஸ்) பிரதீஸ்வரன் (பிரதேச அபிவிருத்தி வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2019) புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS28431(16/17)

193/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர் 077 419 9685

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 10 . 1972 — மறைவு 30 . 09 . 2019

### கந்தையா கேதீஸ்வரன்

(உரிமையாளர் லட்சுமி ஹாட்வெயார், உப்புமடச்சந்தி, கோண்டாவில் மேற்கு)

கோண்டாவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கேதீஸ்வரன் கடந்த (30.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மகனும் செல்வராசா (ஓய்வுநிலை அதிபர்.) நடேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவாநந்தினியின் (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி) அன்புக்கணவரும், அஸ்வினியின் (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி) பாசமிகு தந்தையும் தனபாக்கியலக்சுமி, யோகேஸ்வரி, ரதிரஞ்சிதம் (ஆசிரியை, யா/கோண்டாவில் சி.சி.த பாடசாலை), ஜெயலக்சுமி, (டென்மார்க்), சுபாஜினி, கணேஸ்வரன் (அமெரிக்கா) மற்றும் மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கமலேஸ்வரன், குலாகரன், பகீரதன், ஜெயக்குமார், கேதீஸ்வரன், கலையரசி, கோபிகரன் சுகந்தினி, ரம்யா (ஆசிரியை, யா/இணுவில் இந்துக் கல்லூரி) , தட்சாயினி (யா/மானிப்பாய் சென்ரான்ஸ்) மற்றும் அருணன் (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும் நந்தன், சுரேஸ்குமார், மலர்வேந்தன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2019) வியாழக் கிழமை மு.ப 11.00 மணிக்கு இணுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்

தகவல் : குடும்பத்தினர் 077 989 8751

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்
# Kids Park Pre School & Day Care Campus

528 பலாலி வீதி, திருநெல்வேலி.

**2020 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களைப் பதிவு செய்தலும் விஜயதசமி பூசையும், ஏடு தொடக்குதலும்**

**2+ Play Group, 3+ Montessori, 4+ Pre School**

சிறுவர்களுக்கே உகந்த மிகப்பாதுகாப்பான சூழலில், சுதந்திரத்துடன் கூடிய மகிழ்ச்சிகரமான விளையாட்டு வழிக்கற்றல்!

முப்பெரும் தேவிகளுடன் தமிழ்த்தாய்...



அமெரிக்க ஆங்கில மொழி நிபுணரின் செயலமர்வு



முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளரின் பங்குபற்றல்



இங்கிலாந்து பொறியியலாளரின் வழிகாட்டல்



யுனிசெவ் கல்வி நிபுணரின் பங்கு பற்றல்



தேசிய கல்வி நிறுவக சிரேஸ்ட விரிவுரையாளரின் ஆலோசனை



தொண்டுநாத சுவாமிகளின் தாயாரது ஆசீர்வாதம்



களிமண் பிசைவிலிருந்து கணினிக் கற்கைவரை பயிற்சி பெற்ற ஆசிரிய அம்மாக்களின் அரவணைப்பு! அர்ப்பணிப்பு!

உலகத்தரம்வாய்ந்த பன்முக நுண்மதி விருத்தியுடன் கூடிய முன்பள்ளிப் பயில்வுகள், சுதந்திரமான கற்றல் வட்டக்கற்கைகள், விளையாட்டின் மூலம் செயல் வழிக்கல்வி, ஒப்பனை, ஆடல், பாடல், ஓவியம், பொம்மலாட்டம், நாடகம், மணல் - நீர் விளையாட்டுக் கற்கைகள், ஆங்கிலம், சிங்களம், தகவல் தொழில்நுட்ப ஆற்றுகைகள், சுற்றாடலும் பங்கேற்றுக் கற்றலும், ஆரம்பக் கல்விப் பாடசாலைக்குச் செல்வதற்கான அனைத்துத் தேர்ச்சிகளும் வழங்கப்படுகின்றன.....

**புதிய சிறார்களுக்கான பதிவுகளும், ஏடு தொடக்குதலும், கலாநிதி பா.தனபாலன் அவர்களால் விஜயதசமி அன்று (08.10.2019) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மேற்கொள்ளப்படும். உரியவர்கள் முன்கூட்டியே பதிவு செய்யவும்.**

கல்வியால் உயர்வோம் காலத்தை வெல்வோம்!
கல்விப் பணியே கடவுள் பணி - Service to Education in Service to God

**கலாநிதி பா.தனபாலன் (நிபுணத்துவ ஆலோசகர்)**
**(Pre School Education Specialist)**
**M.Phil in Pre School Education, PhD Pre School & Primary Education**

**திருமதி கர்ணி தனபாலன்**
**Dip. in Pre School Education (Distinction)**
**Dip. in Guidance & Counselling (1st Class)**

(SS28404)(11.17)



**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்



**Sampath DOUBLE S**
சேமிப்புக் கணக்கு

இப்பொழுது **100%** வரை
**போனஸ் வட்டி**

இப்பொழுது சம்பத் டபள் S போனஸ் கணக்கின் சேமிப்புகளுக்கு, ஒவ்வொரு மாதமும் வட்டிக்கு மேலதிகமான 100% வரை போனஸ் வட்டி.

மேலும் பல அனுகூலங்கள்!
- ஒன்லைன் வங்கிச்சேவை வசதி மற்றும் கணக்கில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் குறித்த உடனடி SMS Alerts.
- Cardless Cash சேவை மூலம் பணம் மீளப்பெறல்.
- ATM கொடுக்கல் வாங்கல் மற்றும் கணக்கை ஆரம்பிக்கும்போதே ஏனைய கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடிய சர்வதேச மாஸ்டர் கார்ட்/வீசா டெபிட் அட்டை.
- நாடு முழுவதும் பரந்திருக்கும், 365 நாட்களும் இயங்கும் சூப்பர் கிளைகள் உட்பட 229 கிளைகள்.

இன்றே சம்பத் டபள் S கணக்கொன்றினை ஆரம்பித்து 100% போனஸ் வட்டியை பெறுங்கள்!

3% வருடாந்த வட்டி

Sampath Bank Fitch Ratings A+(lka)
DentsuGrant


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இப்பிரசுரமானது மக்களிடையே பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றது. தொடர்ந்து 5 நாட்கள் வெளியிடப்படும் இப்பிரசுரிப்பை வாசித்து பயன்பெறுவதோடு இறுதியில் தரப்படும் போட்டி நிகழ்சியிலும் கலந்து கொண்டு பரிசில்களை வெல்லுங்கள்**

# பாதுகாப்பான வெளிநாட்டு பயணம்

புலம் பெயர்தல் என்ற எண்ணக்கருவானது இடம்விட்டு இடம்நகருதலைக் குறித்து நிற்கின்றது. இது தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ, உள்நாட்டிலோ அன்றில் வெளிநாடுகளுக்கிடை யிலோ நிகழலாம். உள்நாட்டுக்குள் நகர்வினை ஏற்படுத்தும் நபர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவராகவும் வெளிநாடுகளுக்கிடையில் புலம் பெயர்பவர் அகதி, தஞ்சம் கோருபவர், சுற்றுலாப்பயணி, புலம் பெயர் தொழிலாளி என அவரது புலம்பெயர்வு நோக்கங்களைப் பொறுத்து வேறுபட்ட சொற்பதங்க ளால் குறிக்கப்படுவார். புலம்பெயர்வாளர்கள் தமது பூர்வீக இடத்துக்கு திரும்புவதுமுண்டு அல்லாமல் புலம்பெயர் பிரதேசத்தை தமது வாழ்விடமாகக் கொள்வதும் உண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவை சட்டபூர்வமானதாகவும் நாடுகளுக்கிடையே அனுமதிக்கப்படுகின்ற ஒன்றாகுவும் அமையும் பட்சத்தில் அது மனிதனுக்கு நன்மை பயக்கின்ற / பாதுகாப்பான புலம்பெயர்வாக அமைகின்றது.

சரி நாம் விடயத்துக்கு வருவோம். பாதுகாப்பான புலம்பெயர்தல் என்பது இரு நாடுகளின் குடியகல்வு குடிவரவு திணைக்கள அனுமதியுடன் முறையான பயண ஆவணங்களைப் பெற்று பிறிதொரு நாட்டுக்கு குடிபெயர்தலாகும். முறையான பயண ஆவணங்களாவன கடவுச்சீட்டு, வீசா, வேலைக்கான அனுமதி (தொழில் ஒப்பந்தம்) கல்வி வாய்ப்புக்கான ஆவணம் போன்றனவாக அமையும். இவ்வாறான புலம்பெயர்தல் முறையான புலம்பெயர்வு என்ற பதத்தால் அழைக்கப்படும். மாறாக சட்டவிதிகள் மீறப்பட்டு உரிய பயண ஆவணங்கள் இன்றி நடைபெறும் புலம்பெயர்வானது முறையற்ற புலம் பெயர்வு என்றழைக்கப்படும்.

முறையான புலம்பெயர்வானது புலம்பெயர்வாளனுக்கும் அவனைச் சார்ந்திருப்பவர்களுக்கும் பெரிதும் நன்மையை ஈட்டித் தருகின்ற ஒன்றாக காணப்படுகின்றது. சட்ட ரீதியான புலம்பெயர்வு எனப்படுவது உறவினர், நண்பர்களால் ஏற்றுக்கொளப்படக்கூடியது மட்டுமல்ல முறையற்ற புலம்பெயர்விலும் பார்க்க செலவு குறைந்த ஒன்றாக காணப்படுகின்றது. மேலும் புலம்பெயர்பவரது புலம்பெயர்வு முறை உறவி னர் நண்பர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருக்க வேண்டும் என்பது மட்டுமன்றி இரண்டு தேசங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவும் அமைகின்றது. மேலும் புலம்பெயர்வாளர் உரிய அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளதால் உழைப்புச் சுரண்டலுக்குரிய வாய்ப்புகள் மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. உதாரணமாக ஐக்கிய இராச்சியத்தில் வதிவுரிமை அற்ற ஒருவர் அங்கு தொழில் செய்யமுடியாது. எனவே அவர் உழைப்புக்காக பிறர் அறியாமல் மிகக்குறைந்த சம்பளத்தில் பணி புரிய நிர்ப்பந்திக்கப்படுகிறார். அதனால் அங்கு வதிவுரிமை பெற்ற ஒருவர் மணித்தியாலம் ஒன்றுக்கு எட்டு பவுண்ட்களை பெற்றுக்கொள்ளும் சமசந்தர்ப்பத்தில் வதிவுரிமை அற்ற இந்நபர் மணித்தியாலத் துக்கு இரண்டு அல்லது மூன்று பவுண்ட்களையே பெற்றுக் கொள்ளமுடியும். இவ்வாறான நிலமை உழைப்புச் சுரண்டல் நிலமை ஆகும்.

மேலும் முறையான புலம்பெயர்வு முறையானது பாதுகாப்பானது மட்டுமன்றி ஆபத்துக்கள் குறைந்த தாகவும் தோல்வி சாத்தியங்கள் குறைந்த ஒன்றாகவும் காணப்படுகின்றது.

ஆபத்துக்கள் பெரும்பாலும் வெளிநாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்ட முகவரால் ஏற்படுத்தப்பட லாம், இடைத்தங்கல் நாடு ஒன்றில் ஏற்படுத்தப்படலாம். சென்றடையும் நாட்டில் உள்ள மக்களாலும் ஏற்படுத்தப்படலாம். இவை உயிராபத்துக்களாகவோ, அங்கவீனம் உள சமூக பிரச்சினைகளாகவோ ஏற்படுத்தப்படும். தவிர முறையற்ற பயணத்தை மேற்கொள்ளும் நபர் சிறைத்தண்டனைக்கு ஆளாவதற் கான சந்தர்ப்பம், உடல் உறுப்புக்கள் களவாடப்படல், சுகாதார ரீதியான பாதிப்புகள், உளவியல் ரீதியான பாதிப்புகள், சித்திரவதை மேலும் தற்கொலை முடிவை நாடுதல், தனக்கும் குடும்பத்துக்கும் அவமானத்தை பெற்றுக்கொடுத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்

பணம் இன்றி வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி நபர்களை ஏமாற்றி இடைத்தங்கல் நாடுகளில் நிர்க்கதிக்கு ஆளாக்கி விட்டு செல்லும் முகவர்கள் பற்றி நீங்கள் கேள்விப்படிருக்கக்கூடும். அதனால் ஏற்படும் பாதூரமான விளைவுகள் தொடர்பாக நாம் அறிந்திருக்கின்றோமா? உதாரணமாக நபர் ஒருவருக்கு கனடா நாட்டில் தொழில்வாய்ப்பு பெற்று தருவதாக உறுதி அளித்து முகவர் ஒருவர் அவரை மேற்காபிரிக்கா போன்ற வீசாவை சென்றடையும் நாட்டில் பெற்றுக்கொள்ளக்கூடிய நாடுகளிற்கு (on arrival visas) முதலில் எடுத்துச் செல்வார் அவ்வாறான நாடுகள் இடைத் தங்கல் நாடு எனப்படும். அங்கு சென்றடைந்ததும் தான் அழைத்து வந்த நபரின் பயண ஆவணங்கள் மற்றும் தொலைபேசிகளை பறிமுதல் செய்தபின், அவர்கள் சிறிய அறையொன்றில் தடுத்து வைக்கப்படுவர். தொடர்ந்து சில தினங்களில் குடும்பத்துடன் தொடர்பு கொள்ள அவர்களுக்கு தொலைபேசி வழங்கப்பட்டு கனடா நாட்டை இன்னும் சில நாட்களில் சென்றடைந்து விடுவோம் என கூறி ஒரு தொகைப் பணத்தை குடும்பத்தினரிடம் இருந்து பறிமுதல் செய்வார். இச்சூட்சுமங்களை அறியாத குடும்பத்தவர் முகவருக்கு தம்மால் இயன்றளவு பணத்தை வழங்கி மேலும் அவர்களிடம் இருந்த பணம் புரட்ட முடியாது என்று அறிய நேரும் போது அவர் தனது தொடர்பை துண்டித்து தன்னுடன் அழைத்த வந்தவர்களை இடைத்தங்கல் நாட்டில் நிர்க்கதிக்கு ஆளாக்கி விட்டு தலைமறைவாகி விடுவார். நீங்கள் இவ்வாறான பல கதைகளை கேட்டிருக்கக்கூடும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நிர்க்கதிக்கு ஆளாக்கப்படும் நபரது உயிருக்கு உத்தரவாதமின்றி போகின்றது. மேலும் சட்டரீதியாக எந்த உதவியையும் கோர முடியாதவராகி விடுகிறார். அவ்வாறாக ஆட்களைக் கடத்தும் நபர் ஆட்கடத்தல்காரர் என அழைக்கப்படுவார். ஆட்கடத்தல் ஒரு தண்டனைக் குரிய குற்றமாகும்


இவ்வாறாக பாதிக்கப்பட்ட நபர்கள் குறிப்பாக கனடா நாட்டுக்கு பயணப்பட்டு நாடு திரும்பமுடியாமல் நிர்க்கதிக்கு ஆளாக்கப்பட்டால் அவர்களுக்கு IOM நிறுவனம் உதவமுடியும். அதற்காக உதவிகள் கோருபவர் அல்லது அவர் சார்பாக உதவி கோருபவரோ தனது தொடர்பு முகவரியை சரியாக தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களை மீட்டு நாடு திரும்பலுக்குரிய நடவடிக்கைகளையும் அவர்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நடவடிக்கைகளையும் கனடா அரசாங்கத்தின் நிதியுதவியுடன் IOM நிறுவனம் மேற்கொள்ளும்.

அவையாவன:

- பாதிக்கப்பட்டவரை அணுகி அவருக்கு மீள் திரும்பல் திட்டம் தொடர்பாக சொந்த மொழியில் விளக்கமளிக்கப்படும்.
- நபரிடம் தன்னிச்சையாக நாடு திரும்பலுக்கான சம்மதம் பெற்றுக்கொள்ளப்படும்
- இலங்கையில் உள்ள அவரது குடும்பத்துக்கு அது தொடர்பில் தகவல் வழங்கப்படும்.
- சுகாதார பரிசோதனை மேற்கொள்ளப்படும்.
- தேவையெனின் தற்காலிக பயண ஆவணங்கள் தயாரிக்கும் வரை அவரை தங்குமிடம், உணவு, உடை என்பன வழங்கப்படும்.
- விமான டிக்கட் ஏற்பாடு செய்யப்படும்
- மீள் திரும்பலுக்கு முன்னரான உதவி தொகை வழங்கப்படும்.
- பாதிக்கப்பட்டவருக்கு விமானப்பயணத்தில் உதவி தேவை என்று கருதினால் துணை நபர் ஒழுங்கு செய்யப்படுவார்.
- விமான நிலையத்தில் அவரை வரவேற்று மீள் திரும்பலுக்கு பின்னரான உதவி தொகை வழங்கப்படும்.
- விமான நிலையத்தில் இருந்து அவரது வீடு வரை போக்குவரத்து ஏற்பாடு செய்யப்படும்.
- IOM இன் கிளை அலுவலகத்தில் அவருக்குரிய வியாபார திட்டம் தயாரிக்கப்படும்
- அவரது தொழில் தகமை, அனுபவம், கல்வி மற்றும் அவரது விருப்பம் என்பனவற்றை கொண்டு பொருத்தமான தொழில் வாய்ப்புக்கான உதவி வழங்கப்படும்.
- மேற்கூறப்பட்ட அனைத்தும் தகுதி நிலை சோதித்தறியப்பட்ட பின்னரே வழங்கப்படும் என்பதை கவனத்தில் கொள்க.

இச்செயற்றிட்டமானது தன்னிச்சையிலான நாடு திரும்புதலுக்கான செயற்றிட்டம் என அழைக்கப்படும்.

**பாதுகாப்பான புலம் பெயர்தல் தொடர்பான குறுக்கெழுத்துப் போட்டி**




**இடமிருந்து வலம்**

2. பாதுகாப்பான பிரயாணத்துக்கு இது அவசியம்
6. இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட கனடா நாட்டுக்கு அனுப்புவதாக கூறி முகவர் முதலில் அனுப்பும் நாடுகளின் வலயம்
8. நபர் ஒருவரை வெளிநாட்டுக்கு கொண்டு செல்வதாக கூறி முதலில் முகவர் அனுப்பி தடுத்து வைக்கும் நாடு எவ்வாறு அழைக்கப்படும்
10. நபர் ஒருவருக்கு வதிவுரிமை இன்மை காரணமாக ஒரு நாட்டில் மிகக் குறைவான சம்பளத்துக்கு பணிக்கமர்த்தல் உழைப்பு ............... என அழைக்கப்படும்

**மேலிருந்து கீழ்**

1. IOM ன் மீள் திரும்பலுக்கு உதவும் திட்டம் ............ .யான நாடு திரும்பல் திட்டம் என அழைக்கப்படும்
2. இத்திட்டத்துக்கான நிதி உதவியை ...........அரசாங்கம் வழங்குகின்றது.
3. நபர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி ஏமாற்றும் நபர் எவ்வாறு அழைக்கப்படுவார்
4. சட்ட ரீதியற்ற அல்லது உரிய ஆவணங்களின்றி ஏற்படுத்தப்படும் புலம்பெயர்வானது.................... புலம்பெயர்வு என அழைக்கப்படும்.
5. இடைத்தங்கல் நாட்டில் நீங்கள் ........................க்கு உள்ளாக்கப்படலாம்
7. துறைமுகங்கள் ஊடான பயணத்துக்கு கடவுச்சீட்டு அவசியமில்லை இக் கூற்று சரி / பிழை

குறுக்கெழுத்து போட்டிக்கான விடைகள் வந்து சேரவேண்டிய இறுதி திகதி 11.10.2019

குறுக்கெழுத்துப்போட்டிக்கான விடைகள் புத்திரிகையில் கட்டத்தினை வெட்டி அனுப்பலாம் அல்லது சுயமாகத் தயாரிக்கப்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்

ஏந்த வயதுப்பிரிவினரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்

கடித உறையின் இடது மூலையில் குறுக்கெழுத்துப்போட்டிக்கான விடைகள் - (அன்றைய திகதி) என குறிப்பிட்டு அனுப்பவும்

பின்வரும் விபரங்களையும் விடைகளுடன் இணைத்து அனுப்பவும்

பெயர்:
வயது:
பால்:
முகவரி
தொலைபேசி இலக்கம் (சிறுவர்களாயின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம்)
அனுப்ப வேண்டிய முகவரி :

**IOM**
**இலக்கம் 139,கோயில் வீதி**
**நல்லூர்.**

இன்றைய விடயப்பரப்பு நிச்சயமாக உங்களுக்கு பிரயோசனமான ஒன்றாக அமைந்திருக்கும் என்ற நம்பிக்கையோடு நாளை பாதுகாப்பான புலம் பெயர்வும் அதில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சி னால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாகவும் தெரிந்துகொள்ளலாம். தொடர்ந்து இந்த ஒருவாரமும் எம்முடன் இணைந்திருப்பதனூடாக ஒவ்வொரு வாரமும் பெறுமதியான பரிசில்களை வெல்லும் வாய்ப்பை பெறுவதோடு, கீழே தரப்படும் குறுக்கெழுத்து புதிருக்குரிய விடைகளை கீழ்வரும் முகவ ரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்புவதனூடாக, நாளொன்றுக்கு தெரிவுசெய் யப்படும் 20 அதிஷ்ட சாலிகள் வெற்றியாளர்கள் 500 ருபா பெறுமதியான பரிசினை வெல்லும் சந் தர்ப்பத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், கீழே கட்டமிட்ட பகுதியில் காணப்படும் கேள்விக்கான விடையை கீழ்க் காட்டப்பட்ட SMS வடிவத்தில் தரப்பட்ட தொலை பேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் சரி யான விடைக்குரியவர்கள் 200 ருபா பெறுமதி யான தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளை வெல்ல முடியும். போட்டி இறுதித்திகதியின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள் பத்திரிகையில் அறியத்தரப்படுவார்கள்.

வெளிநாடு செல்வது தொடர்பாக அல்லது முறையற்ற பயணத்தால் பாதிக்கப்பட்ட நபர் தொடர்பான உதவித் திட்டங்கள் தொடர்பில் தங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருந்தால் பின்வரும் தொலை பேசி இலக்கத்தினூடாக அழைத்து விபரங்களை பெறமுடியும் 0774410086

தங்கள் நெருங்கிய நண்பரோ அல்லது குடும்ப உறுப்பினரோ தங்களை வெளிநாடு ஒன்றுக்கு சுற்றுலா வீசாவில் செல்லுமாறும் அங்கு கிடைக்கக் கூடிய ஏதாவது வேலையை கொஞ்ச நாட்கள் வேலைக்கான அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக செய்யுமாறும் கூறுகிறார்? இது ஒரு முறையான / பாதுகாப்பான புலம்பெயர்வு என தாங்கள் நினைக்கின்றீர்களா?

ஆம்
இல்லை

**இக்கேள்விக்கான பதிலை கீழ்க்குறிப்பிட்ட முறையில் IOM ன் நேரடி தொலைபேசி இலக்கமான 0774410086 க்கு SMS குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக ருபா 200 பெறுமதியான தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளை குலுக்கல் முறையில் வெல்லவும்.**

**SMS குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய வடிவம்**
**பால், வயது, இடம், விடை ....... 0774410086**
**உதாரணம்:**
**M_14_Jaffna_Answer**
**ஆன்_14_யாழ்ப்பாணம்_சரியான விடை**


# 10 ஆவது ஆண்டு நினைவுகள்



## அமரர் லதாமலர் நவரத்தினராசா

(குமுதெணி அல்வாய் வடமத்தி)

பத்தாண்டுகள் கழிந்தாலும்
பத்திரமாய் உன் நினைவுகள் எம் மனதில்
உத்தமனோடும் உன் உயிர் பிள்ளைகளோடும்
முத்தான வாழ்க்கையில் நீ பதித்த தடங்கள்
எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் என்றும்
எம் நினைவில்
பத்தாண்டின் நினைவாய் குமுதெணி
விநாயகப் பெருமானின் பெருவிருட்சம்
உன் பெயரை தாங்கி நிற்கின்றது இன்று
என்றும் உன் நினைவுகளுடன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

மலர்வு 20.04.1959
உதிர்வு 22.09.2009

கணவர் - க.நவரத்தினராசா
பிள்ளைகள் - ந.மேகரூபன், ந.[illegible]
மருமகள் - மே.திவி[illegible]
பேரப்பிள்ளை - மே.குகன்.

(CS 28405)(04.17)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 02.09.2019 திங்கட்கிழமை
இறைவனடி எய்திய

## அமரர் கிருஸ்ணராசா (மாயவர்) வள்ளிநாயகம்

அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (02.10.2019) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறு வுள்ளது. ஆகவே அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அதனைத் தொடந்து நடைபெறும் மதியபோசன விருந்துப சாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2 ஆம் வட்டராம்,
சல்லி,சாம்பல் தீவு,
திருகோணமலை.
075 498 1348

அன்பு மகள்
திருமதி
ஆனந்தஜோதி
(சுவிஸ்)

(cs.28426) (13.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
**கிறிஸ்தோத்திரம் அந்தோனியாப்பிள்ளை**

மண்ணில் 10.06.1935 — விண்ணில் 02.09.2019



கடந்த 02.09.2019 திங்கட்கிழமை இறைபதம் எய்திய எமது அன்னையின் ஆத்மசாந்தி பிரார்த்தனை 02.10.2019 புதன்கிழமை காலை 6.30 மணியளவில் ஊர்காவற்றுறை புனித சூசையப்பர் தேவாலயத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.


தயவு செய்து இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

எமது அன்னையின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறி துயர் பகிர்ந்தோருக்கும் எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும், உள்நாட்டு, வெளிநாடுகளிலிருந்தும் எமது துயரங்களில் பங்கு கொண்டு தொலைபேசிகள், சமூகவலைத்தளங்கள் ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மண்குழி வீதி,
ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்.

அமரன் (அப்பு), பிரமிளா
அபித்தா, அபிஷேக்,
அபினு (சுவிஸ்)

# மரண அறிவித்தல்



## தாமோதரம்பிள்ளை இராமச்சந்திரன்

யாழ். உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை மற்றும் இல.44, வில்சன் வீதி, இரணைமடு, கிளிநொச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை இராமச்சந்திரன் 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பகவதி மற்றும் சிவலோகநாயகி, புஸ்பதேவி, காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தப்பிள்ளை, காலஞ்சென்ற மார்க்கண்டு, காலஞ்சென்ற குமாரசுவாமி, ஜெகதீஸ்வரி, வாசுகிதேவி, காலஞ்சென்ற பாஸ்கர சிவாஜி, காலஞ்சென்ற ஈஸ்வரசிவாஜி, விஜயலட்சுமி, பாக்கியநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கெங்காதரன் (டென்மார்க்), சாந்தி (இலங்கை), ஆனந்தராசா (கனடா), ரவீந்திரன் (பெல்ஜியம்), செல்வச்சந்திரன் (லண்டன்), திருச்செல்வம் (பெல்ஜியம்), சத்தியசீலன் (லண்டன்), வரதவராஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருந்ததி, (டென்மார்க்), மோகனத்தரசு (மலேசியா), கமலினி (கனடா), தயாளினி (பெல்ஜியம்), பிரதீபா (லண்டன்), சியாமளா (லண்டன்), சுகணியா (லண்டன்), அபிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லின்சிகா, லக்சிகா, ஷர்மிகா, குகதர்மிகா, ஆஷா, ஜெரமி, ஜெசிகா, ஜஜிந்திரன், கிருசிகன், லக்சிகன், வருண், தருண், யதுசன், நிதுசன், திருசியா, திலக்சியா, சாணியா, சுவேதகா, சுஜித், யசிகா, வருணன், வர்சா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2019) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை, கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.39, சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

(CS/28420)

தகவல்:
குடும்பத்தினர்.
சாந்தி -0769166905
0762615535

# மரண அறிவித்தல்கள்



தோற்றம் 27 . 12 . 1946 — மறைவு 01 . 10 . 2019

## திருமதி பூலோகம் நல்லம்மா

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூலோகம் நல்லம்மா 01.10.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரு - செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பூலோகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினம்மா, காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் பரமேஸ்வரி, பூலோகம், பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் வள்ளியம்மை, காலஞ்சென்ற முருகையா மற்றும் செல்வராணி, இராசாத்தியம்மா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை, சுந்தரம்பிள்ளை, சின்னத்தம்பி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயலலிதா (ஜேர்மனி), சசிகலா(பிரான்ஸ்), சிவாஜினி(கொழும்பு), முருகானந்தன் (பிரான்ஸ்), கணேசானந்தன் (சுழிபுரம் - இலங்கை), தணிகைக்குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வைரவநாதன் (ஜேர்மனி), வடிவேலு (பிரான்ஸ்), பரமசிவம் (கொழும்பு), நிர்மலா (பிரான்ஸ்), சுதாமதி(சுழிபுரம் - இலங்கை), பிரியங்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வீரமாறன், வேணுகா, வேல்மாறன் (ஜேர்மனி), வைஷ்ணவி, வாசுகி(பிரான்ஸ்), பவிதா, பிருத்திகா(கொழும்பு), முகுந்தன், மதன், மதுரியா (பிரான்ஸ்), கஜல்விழி, கஸ்தூரி, கனிமொழி, சக்திவேல், கருணவேல்(சுழிபுரம் - இலங்கை), தாரிக்கா, தஷ்வின், தாமிரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின் பூதவுடல் திருவடிநிலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 28425) (14.17)

தகவல் :
குடும்பத்தினர்.



## திருமதி யோண் மேரி மாகிறேட்

குளமங்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோண் மேரி மாகிறேட் 28. 09.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறகரி யோணின் மனைவியும், அல்போன்ஷா, நோபட், றொபின்சன், ஆன் வசந்தா, விக்டோரியா, மக்டலின் கலிஸ்ரா கொன்சன்றைன், றொகான் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற J.தேவதாஸ் மற்றும் பேனடேற், விஜிதா, ஆனந்தராஜா, செல்வரட்ணம், தேவதாஸ், ஞானப்பிரகாசம், றேவதி, நித்தியா ஆகியோரின் மாமியும், டெஸ்லின், தர்மினி, மேவின், ரிட்டோ, சமீரா, சிந்துஜா, நிரூஷியா, தர்ஷிகா, தட்ஷாயினி, ஜெறிக்ஷன், ஸ்ரெபிக்கா, ரக்ஷா, கௌதம், மிதுஷா, அருண், கெவின், சபீனா, ஸ்ரெபான், ஷிறோன், அஸ்வின்,சயந்திகா ஆகியோரின் பேர்த்தியும், தீக்ஷா, நைலா, எஸ்ரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (03.10.2019) வியாழக்கிழமை யாழ். மரியன்னை பேராலயத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

135, 2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(cs 28424) (13.17)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்வி சுசிலாதேவி அருளானந்தம்

(யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியற்துறை முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளரும்)



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி சுசிலாதேவி அருளானந்தம் (யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியற்துறை முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளரும்) கடந்த 26.09.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ் சென்ற செல்வி ராதா அருளானந்தம் (யாழ் தாதியர் கல்லூரி சிரேஷ்ட போதனாசிரியர்), செல்வி மனோறதி அருளானந்தம் (ஓய்வுநிலை குடும்பநல உத்தியோகத்தர் சாவகச்சேரி வைத்திய சாலை), தவமணி தேவி, கமலா, அற்புத அருந்தவராசா, கலா நாதன், கணேந் திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற தபோதினி (பிரான்ஸ்), சுமித்திரன் (இத்தாலி), சுபோதினி (இந்தியா), உதயகுமார் (பிரான்ஸ்), ஹரிகரன் (இலங்கை), ஆகியோரின் சிறிய தாயாரும், லோகீஷன், நிதீசன், தனுஷன் ஆகியோரின் பாசமிகு அன்புப் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03.10.2019 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை பத்து மணிக்கு இடம்பெற்று நுணாவில் மேற்கு காந்தாளம்புட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி
021 - 2270183

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

வடமராட்சி யாழ் இந்து கௌரவ குடும்பம் 35 வயது குற்றமற்ற மகம் 3 ஆம் பாதம் யாழ் நகரில் பிரபல ஹோட்டலில் முகாமையாளராக பணிபுரிபவருக்கு 31 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. மகம் பொருத்தமுடையது

077 471 0814

## வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. படிக்கும் வேலைபார்க்கும் பெண்கள் விரும்பத்தக்கது. Rooms ஆகவும் தனியறையாகவும் கொடுக்கப்படும்.

தொடர்பு:- 077 051 4385

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 021 493 1111



# CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online form filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Blance 100%
- குறைந்த தகைமை O/L

Swiss, France
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 077 791 1649
Office : 0113 020 892


## என்றும் நெஞ்சை விட்டு நீங்காத நினைவுகள்

16 ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு





**அமரர் முருகேசபிள்ளை கதிர்காமசேகரம்**
(ஓய்வுநிலை அதிபர்)
அன்னை மடியில் 20.05.1920
இறைவன் அடியில் 30.08.2003
திதி:- திருதிலை

**அமரர் திலகவதி கதிர்காமசேகரம்**
(ஓய்வுநிலை ஆசிரியர்)
அன்னை மடியில் 13.06.1926
இறைவன் அடியில் 12.10.2018
திதி:- சதுர்த்தி

பாசத்துடனும், பண்புடனும் எம்முடன் வாழ்ந்து, வாழ்வு சிறக்க வழிகாட்டிய எமது தெய்வங்களுக்கு நீங்கா நினைவுகளுடன் எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

"சாந்தினிகேதன்", அளவெட்டி மேற்கு. குடும்பத்தினர்.

## பதினைந்து ஆண்டுகள் நீங்கா நினைவுகளுடன்....



அமரர்
**திலகவதி குமரவேல்**
(முன்னாள் பொது முகாமையாளர் - ப.நோ.கூ. சங்கம், சுன்னாகம்)

தோற்றம் 17.04.1953
மறைவு 18.09.2004
திதி: சதுர்த்தி (02.10.2019)

நிலையில்லா உலகில்
நிதம் நிதம் நாமிங்கே
நிழலாய் தொடரும் உங்கள்
நீங்கா நினைவுகளுடன்....
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம். குடும்பத்தினர்.

(cs.2876) (13.17)

This project is funded by: European Union
யුරෝපා සංගමය ஐரோப்பிய ஒன்றியம்

This project is Implemented by: Habitat for Humanity Sri Lanka, World Vision

## விலைமனுக் கோரலுக்கான அழைப்பு

### அமுக்கி நிலைப்படுத்தப்பட்ட கற்கள் (CSEB) தயாரிப்பதற்கான கிறவல் மண் கொள்வனவு

ஹபிட்டாட் போ ஹியுமானிட்டி மற்றும் வேல்ட் விஷன் லங்கா ஆகியன கிறிஸ்தவ அரசசார்பற்ற நிறுவனங்களாகும். இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களான கிளிநொச்சி முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஒரு நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக "வீடு அல்ல வாழ்விடம்" என்ற தொனிப்பொருளின் கீழான ஒரு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியதவியுடன் ஹபிட்டாட் மற்றும் வேல்ட் விஷன் என்பன இணைந்து செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஒரு தொகை வீடுகள் அமுக்கி நிலைப்படுத்தப்பட்ட கற்களைப் (CSEBs) பயன்படுத்தி சூழல் நேய வீடுகள் நிர்மாணித்துக் கொண்டு வருகின்றன. இவற்றில் இன்னும் 600 சூழல் நேய வீடுகள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பொருத்தமான கிறவலை கீழ்குறிப்பிடப்பட்ட உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு விநியோகிப்பதற்கு தகுதியுடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலை கோரப்படுகின்றது.

| பொருள் | விபரம் | அளவு | தொகை (நிலை 1) | விநியோகிக்கப்பட வேண்டிய இடங்கள் |
|---|---|---|---|---|
| கிறவல் | குறைவான களி. வண்டல் கொண்டதும் மற்றும் தாவரப் பகுதிகளற்ற அங்கிகீரிக்கப்பட்ட கட்டுமான தரத்திலான கிறவல் மண். | கியூப் | 500.00 | தேவிபுரம். புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு. |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 10.10.2019 இலங்கை நேரப்படி மதியம் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மூடிய கடித உறையிலிட்டு மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கவும்.

கேள்வி மனுக்கோரல் சம்மந்தமாக ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் மாவட்ட திட்ட முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.

| தேசிய அலுவலகம் | கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் | முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் |
|---|---|---|
| 42/14. ஆனந்தகுமாரசாமி மாவத்தை. கொழும்பு – 03 | 27. கிருஷ்ணன் கோயில் வீதி. கிளிநொச்சி | வட்டாரம் - 01. புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு. |
| தொ.இல : 0112577102-10 | தொ.இல : 021 228 3290. 077 232 0957 | தொ.இல : 021 229 0389. 076 352 5493 |

**நிறுவனங்களின் திட்ட தலைமை அதிகாரி,**
**ஹபிட்டாட் போ ஹியுமானிட்டி சிறிலங்கா,**
**கொழும்பு.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 07 . 1941



மறைவு 30 . 09 . 2019

## திருமதி. தயாரதி சீவரட்ணம்

கொழும்பை வசிப்பிடமாக கொண்ட திருமதி. தயாரதி சீவரட்ணம் அவர்கள் 30.09.2019 அன்று திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சீவரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மேர்வின் சீனித்தம்பி – மீனாட்சி பொன்னையா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான S.V பொன்னம்பலம் தம்பதியினரின் ( ஆலடி காரைநகர் ) பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான தயாநிதி செல்வநாயகம், பொன்னையா தயாபரன், பொன்னையா தயாநேசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரினது பூதவுடல் அன்னாரினது இல்லத்தில் ( இல.15 பாம்குரோவ் ) புதன்கிழமை (02.10.2019) காலை 10 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் வியாழக்கிழமை ( 03.10.2019 ) காலை 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புதிய கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு 12.30 மணியவில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல். Dr.செல்வநாயகம் நிரஞ்சன் (பாபு)
No.15,Palm Grove,Colombo - 03. Tel : 0112 573496

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## இராஜலக்ஷ்மி சண்முகநாதன்



| வையத்துள் | தெய்வத்துள் |
|---|---|
| 21.06.1933 | 28.09.2019 |

சுதுமலையை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது சென்னை, இந்தியாவில் வசித்து வந்த இராஜலக்ஷ்மி சண்முகநாதன் கடந்த சனிக்கிழமை (28.09.2019) இறைபத மடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - அன்னம்மா தம்பதி களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகநாதனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான துரைராஜா, நடராஜா மற்றும் இரத் தினபூபதி காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் அம்பிகாநிதி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மலராஜினி (இந்தியா) காலஞ்சென்றவர் களான பத்மாஜினி, உமாகாந்தன் மற்றும் சந்திரமோகன் (இலண்டன்), காலஞ்சென்ற கலாமோகினி மற்றும் கலாரஜினி (இந்தியா), கமலினி (பிரான்ஸ்), கலைச்செல்வி (பிரான்ஸ்), கலைவாணி (இலண்டன்), கௌரி காந்தன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணசிங்கம் (இந்தியா), விஜயரட்ணம் (இந்தியா), தயாளினி (இலண்டன்), ராஜ்குமார் (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), பிரான்சிஸ் கிறிஸ்டோபர் (பிரான்ஸ்), நர்மதா (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அகிலன், அபிராமி, அபிஷா, அக்ஷரா காலஞ்சென்ற அபிநயா மற்றும் கௌதமன், அபிதா, அர்விந்த், அப்சரா, அபிஷேக், அர்வின், அஷ்மிகா, தேவகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ராகவியின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2019) வியாழக் கிழமை நண்பகல் 12.30 மணியளவில் சென்னை, இந்தியாவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வளசரவாக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS24073(16/17)

சந்திர மோகன் (மகன்)- 00447 8466 12436
கௌரிகாந்தன் (மகன்)- 00447 7570 75757
அகிலன் (பேரன்)- 00919 8408 04010

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## தில்லையம்பலம் இராசேந்திரம்

**காரைநகர் தனியார் பஸ் உரிமையாளரும் இளைப்பாறிய தனியார் சிற்றூர்தி சங்க நேரக் கண்காணிப்பாளர்- காரைநகர் சாலை)**



கொட்டைப்புலம், களபூமி, காரைநகரை பிறப்பிடமாகவும் 119/14, பலாலி வீதி முன் ஒழுங்கை திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் இராசேந்திரம் கடந்த (30.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா- காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் இந்திராணியின் அன்பு கணவரும் சிவலிங்கராசா காலஞ்சென்ற இராசபூபதி மற்றும் தியாகராசா, வையந்திமாலா, லலிதாதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும் மகேஸ்வரி காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மணிமேகலை, பாலசிங்கம், மகாராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் லவநேசன் (சிறீ சிவராம் றேடர்ஸ் , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.), திருக்குமரன் (சிறீ சிவராம் றேடர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), அரவிந்தன் (பிரான்ஸ்), கமலக்கண்ணன் (லண்டன்), கல்யாணி ஆகியோரின் அன்பு தகப்பனாரும் சர்மிளா, இராசலட்சுமி, ருசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் முத்துலிங்கம்- சத்தியபவானி காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் நன்னிப்பிள்ளை, செல்வரத்தினம்- உதயகுமாரி ஆகியோரின் சம்பந்தியும் சகிசரண், அஞ்சனா, தேவசஞ்ஜெய், கிருஷிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2019) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு 119/14, பலாலி வீதி, முன் ஒழுங்கை திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**நேசன்- 077 756 0760 ,[illegible] 077 307 6917**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தேர்தல் அறிக்கையென்பது எழுத்துமூல உடன்பாடல்ல!

இனப்பிரச்சினைக்கான தீர்வை எழுத்துமூலம் முன்வைக்கும் அரசதலைவர்வேட்பாளருக்கே தனது ஆதரவு என்று தெரிவித்திருந்ததமிழ்த்தேசியக் கூட்டமைப்பு,தற்போதுதன்னிலையில்இருந்துபின் வாங்க ஆரம்பித்துள்ளது.

அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் கூட்டமைப்பின் ஆதரவு எவருக்கு என்பதில் பெரும் எதிர்பார்ப்புநிலவியது.சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரான கோத்தபாய ராஜபக்ச, ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ இருவருமே கூட்டமைப்பின் வாக்குவங்கியை இலக்குவைத்து காய்களைநகர்த்தினர். மற்றுமொருபேரம்பேசல்வாய்ப்பு இந்தத் தேர்தலில் கூட்டமைப்புக்குக் கிடைத்தது. இந்தப்பின்னணியிலேயே அரசதலைவர்தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளர் இனப் பிரச்சினைக்கான தீர்வை எழுத்தில் முன்வைக்கின்றாரோ அவருக்கே தமது ஆதரவு என்று தெரிவித்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தற்போது, 'எழுத்துமூல உடன்படிக்கை' என்ற நிலையில் இருந்து 'தேர்தல் அறிக்கை' என்ற நிலைப்பாட்டுக்கு பின்தங்கியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமானரணில், அந்தக்கட்சியின்அரசதலைவர் வேட்பாளரும் அமைச்சருமான சஜித் மற்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அதன் பேச்சாளர்ஏபிரகாம்சுமந்திரன்ஆகியோருக்கு இடையில்நேற்றுமுன்தினம்நடைபெற்றபேச்சைஅடுத்தே இந்தப் பின்வாங்கலை நிகழ்த்தியிருக்கிறது கூட்டமைப்பு. எழுத்துமூலமான உடன்படிக்கையை மேற்கொள்வதற்குத் தயாரில்லை என்று வேட்பாளர்களான கோத்தபாய, சஜித் இருவரும் முன்னதாக அறிவித்திருந்தமையும் கூட்டமைப்பின் பின்வாங்கலில் கனதியான தாக்கத்தைச் செலுத்தியிருக்கலாம். அதற்கு வாய்ப்புக்கள் அதிகம்.

ஒரு கட்சியின் தேர்தல் அறிக்கையை நம்பி அந்தக் கட்சிக்கு வழங்கும் ஆதரவானது சுத்த மடைமைத்தனமே அன்றி வேறொன்றும் இல்லை. இந்தநிலைப்பாடானது கடற்கரை மணலில் எழுதப்படும் எழுத்துக்களுக்குச் சமானமானது. நிரந்தரத்தன்மை, நம்பகத்தன்மை அற்றது.

2015ஆம் ஆண்டு அரசதலைவர்தேர்தலில் பொதுச் சின்னமாகிய அன்னத்தின்கீழ்களமிறங்கிய அப்போதைய அரச தலைவர் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் அறிக்கையில் என்னவெல்லாம் தெரிவித்திருந்தார் என்பதை தமிழர்கள் இன்னமும் மறக்கவில்லை. அதை நம்பியே மைத்திரியை கூட்டமைப்பு ஆதரித்தது. அந்த அறிக்கையை நம்பியே தமிழர்களும் ஆதரித்தனர். இறுதியில் நடத்தது என்ன? மைத்திரி எம்மை ஏமாற்றிவிட்டார், முதுகில் குத்திவிட்டார், கொலைகாரக் கும்பலிடம் இருந்து தமிழர்களால் காப்பாற்றப்பட்ட மைத்திரி தமிழர்களுக்கு செய்த பதிலுதவி என்ன? என்று மாவட்டம் மாவட்டமாக புலம்பித் திரிந்ததுதான் மிச்சம்.

எனவே கூட்டமைப்பினர் தாம் கடந்துவந்த பாதையைக் கருத்தில்கொண்டு, நிலமையைச் சீராக ஆராய்ந்து சிறப்பானதும் காத்திரமானதும் கனதியானதுமான ஒரு முடிவை எடுக்க வேண்டும். ஜாலக் கருத்துக்களால்ஏமாந்துவிட்டு பின்னர் 'ஏமாற்றிவிட்டார் ஏமாற்றிவிட்டார்' என்று புலம்புவதில் பயன் ஏது?. ஒரு தடவை செய்தால் அது தவறு. பல தவறுகளைச் செய்தால் அது முட்டாள்தனம்.

# சீனத்துவத்துக்கு இன்று வயது 70



ஒக்ரோபர் முதல் வாரத்தைச் சீனர்கள் ஆவலோடு எதிர்நோக்குவார்கள். ஒக்ரோபர் முதலாம் நாள் சீனாவின் தேசிய தினம். இந்த வாரம் முழுவதும் விடுமுறை இருக்கும். பெப்ரவரியில் வரும் சீனப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டும், மே முதல் வாரத்தில் வரும் உழைப்பாளர் தினத்தை முன்னிட்டும் இப்படியான ஒரு வாரகால விடுமுறைகள் வரும். ஆலைகளில் பணியாற்றும் கணவனும் மனைவியும் கிராமங்களில் இருக்கும் வீடு நோக்கிச் செல்வார்கள். அவர்களது பெற்றோர்களும் பெரும்பாலும் ஒற்றைப் பிள்ளையும் அவர்களுக்காக ஆவலோடு காத்திருப்பார்கள்.

ஒக்ரோபர் முதல் நாள் புகழ்பெற்ற தியானன்மென் சதுக்கத்தில் நடைபெறும் கொண்டாட்டத்தில் சீன அதிபர் ஜி ஜின்பிங் உரையாற்றுவார். இதே இடத்திலிருந்துதான் 70 ஆண்டுகளுக்கு முன்னால், 1949ஆம் ஆண்டில் மாவோ சே துங் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியை நிறுவினார். இன்று வாண வேடிக்கைகள் இருக்கும். இராணுவ அணிவகுப்புகள் இருக்கும். அதில் 12 ஆயிரம் கி.மீ. தூரத்தைத் துல்லியமாயும் துச்சமாயும் கடக்கவல்ல ஏவுகணைகள் பவனிவரும். இராணுவ வீரர்களின் சாகசங்கள் கண்ணைக் கவரும். 70 ஆண்டுகளுக்கு முன்னால் தியானன்மென் சதுக்கத்தில் செங்கொடியைப் பறக்கவிடுவது மாவோ சே துங்குக்கு எளிதாக இல்லை. இன்று சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக வளர்ந்திருக்கிறது. இந்த இடத்துக்கு வந்துசேர்வது ஜி ஜின் பிங்குக்கும் அவரது முன்னோடிகளுக்கும் அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

**ஜப்பானிய ஆக்கிரமிப்பு**

இன்றளவும் இரண்டாம் உலகப் போரின் வரலாற்றாசிரியர்கள் அமெரிக்காவையும் ரஷ்யாவையும் பிரிட்டனையுமே நேச நாடுகள் என்று வர்ணிக்கிறார்கள். எனில், ஹிட்லரின் ஜேர்மனிக்குக் கூட்டாக நின்ற ஜப்பானின் ஆக்கிரமிப்பை 1937ஆம் ஆண்டு முதல் 1945ஆம் ஆண்டு வரை எட்டாண்டுகள் எதிர்கொண்டது சீனா. அன்று பலவீனமாக இருந்தது சீனா. ஆனால், விடாமல் போராடியது. இந்தப் போரில் மாண்டவர்கள் ஒன்றரைக் கோடிப் பேர். அகதிகளானோர் எட்டு கோடிப் பேர். இந்தச் சாம்பல் துகள்களின் மீதுதான் உள்நாட்டுப் போரை நடத்தி, 1949ஆம் ஆண்டில் ஆட்சி அமைத்தார் மாவோ.

**பெரும் பாய்ச்சல்**

புதிய அரசு நிலங்களைப் படிப்படியாக அரசுடமையாக்கியது. கூட்டுப் பண்ணைகளை உருவாக்குவதும் நாட்டைத் தொழில் மயமாக்குவதுமே சீனாவை உய்விக்கும் என்று நம்பினார் மாவோ. 1958ஆம் ஆண்டில் முன்மொழிந்த தனது திட்டத்துக்கு 'பெரும் பாய்ச்சல்' என்று பெயரிட்டார். ஆனால், அப்படியான பாய்ச்சல் எதுவும் நிகழவில்லை. மாறாக, தொழில் துறை பின்தங்கியது. விளைச்சல் வெகுவாகக் குறைந்தது. பஞ்சமும் நோயும் சீனாவைப் பீடித்தன. இந்தக் காலகட்டத்தில் இரண்டு கோடி மக்கள் மாண்டிருப்பார்கள் என்று கருதப்படுகிறது. நான்காண்டுகளில் திட்டம் பின்வாங்கிக்கொள்ளப்பட்டது.

**கலாசாரப் புரட்சி**

மக்கள் கசந்தனர். கட்சிக்குள் மாவோ விமர்சிக்கப்பட்டார். நாட்டில் புரட்சிகரச் சிந்தனை குறைந்துவருவதாகக் கருதினார் மாவோ. ரஷ்யாவின் போக்கிலும் அவர் அதிருப்தியுற்றார். இதற்குத் தீர்வாக 1966ஆம் ஆண்டில் அவர் கொண்டுவந்துதான் 'கலாசாரப் புரட்சி'. பழைய மதிப்பீடுகள் தகர்க்கப்பட வேண்டும் என்பதே முழக்கமானது. செம்படைக் காவலர் எனும் பெயரில் குழுக்கள் அமைக்கப்பட்டன. இளைஞர்கள் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் தொழிற்சாலைகளையும் புறக்கணித்து செம்படையில் இணைந்தனர். பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் முதியவர்களும் அறிவுஜீவிகளும் தாக்கப்பட்டதாகவும், பழமையான கலாசாரச் சின்னங்கள் தகர்க்கப்பட்டதாகவும் பதிவுகள் கூறுகின்றன. இதற்கிடையில் செம்படைகளுக்குள்ளே அதிகாரப் போட்டி ஏற்பட்டது. அதை அடக்க இராணுவம் வந்தது. தேசத்தில் உற்பத்தி குறைந்தது. கலாசாரப் புரட்சி மாவோவின் சாவு (1976) வரை நீடித்தது. 1981ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியானது கலாசாரப் புரட்சி ஒரு தவறான முன்னெடுப்பு என்று அறிவித்தது. மாவோவின் நெருங்கிய சகாக்கள் சிறை வைக்கப்பட்டனர். எனினும், மாவோவே சீனாவின் திருவுருவாக நீடிக்கிறார். அவரது குணமும் குற்றமும் நாடியதில் குணமே மிகையானது என்றார் டெங் சியோ பிங். மாவோவுக்குப் பிறகு கட்சிக்கும் ஆட்சிக்கும் தலைமை ஏற்றார் டெங்.

### சீனாவின் வளர்ச்சி

1978ஆம் ஆண்டில் அந்நிய முதலீடுகளுக்கு வாசல் திறந்தார் டெங். இந்த முதலீடு சீனாவில் தொழிற்சாலைகளை உருவாக்கியது. சீனாவை நகரமயமாக்கியது. வேலைவாய்ப்பு பெருகியது. புதிய தொழில்நுட்பங்கள் புயலெனப் புகுந்தன. சீனா தனது உட்கட்டமைப்பைப் பன்மடங்கு மேம்படுத்திக்கொண்டது. புதிய சாலைகளும் தொடருந்து தடங்களும் துறைமுகங்களும் பன்னாட்டுத் தரத்தில் உருவாகின. முக்கியமாக, கல்வியறிவு பெற்ற சமூகத்துக்குத் தத்தமது ஆலைகளுக்குத் தேவையான தொழிற்கல்வி பயில்வது எளிதாக இருந்தது. அவர்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் புலம்பெயர்ந்து தொழிற்சாலைகளின் உண்டுஉறைவிடக்கூடங்களில் தங்கிக்கொண்டனர். நேரங்காலம் பார்க்காமல் கடுமையாக உழைத்தனர். உலகம் முழுமைக்குமான உற்பத்திக்கூடமாக சீனா மாறியது. இப்படித்தான் கடந்த 40 ஆண்டுகளில் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருந்த 70 கோடிக்கும் மேற்பட்ட சீனர்கள் வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இது உலக வரலாற்றில் முன்னுதாரணம் இல்லாதது.

### பின்னடைவுகள்

இந்த வளர்ச்சியைப் பெறுவதற்கு சீனா கொடுத்த விலையும் அதிகம்தான். சூழலுக்குக் கேடு விளைவிக்கும் வாயுக்களை வெளியேற்றுவதில் சீனாதான் உலகில் முதலிடத்தில் இருக்கிறது. அடுத்ததாக, சீனாதான் உலகில் மக்கள்தொகை அதிகமுள்ள நாடு. மக்கள்தொகை வளர்ச்சி பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்காக 1980ஆம் ஆண்டில் ஒற்றைக் குழந்தைத் திட்டதைக் கொண்டுவந்தது அரசு. அது கடுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டது. இதனால், ஆண் மோகமிக்க சமூகத்தில் பல பெண் சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்பட்டன. இன்று பாலியல் சமநிலை இல்லாத நாடாக இருக்கிறது சீனா. 2015ஆம் ஆண்டில் அரசு ஒற்றைக் குழந்தைத் திட்டத்தை நிறுத்திக்கொண்டது என்றாலும் மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட சிலகாலம் பிடிக்கலாம். மூன்றாவதாக, கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தினரை அழைத்துச்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. கடந்த சில ஆண்டுகளாக நகர நிர்வாகங்கள், புலம்பெயரும் தொழிலாளர்கள் தத்தமது குடும்பத்தினரையும் அழைத்துவருவதற்கு ஏற்ற விதமாக நகரங்களின் உட்கட்டமைப்பையும் கல்விச்சாலைகளையும் மருத்துவமனைகளையும் மேம்படுத்திவருகின்றன.




கடைசியாக, சீனா எதிர்கொள்ளும் பிரதான விமர்சனம் எதிர்க்குரல்களும் ஜனநாயகமும் அனுமதிக்கப்படுவதில்லை என்பது. 1989ஆம் ஆண்டில் தியானன்மென் சதுக்கத்தில் நிகழ்ந்த மாணவர் போராட்டம் ஒடுக்கப்பட்டது. இப்போதும் வடிகட்டப்பட்ட பின்னரே இணையம் பயனர்களுக்குக் கிடைக்கிறது. ஹாங்காங் கடந்த நான்கு மாதங்களாக ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடிவருகிறது.

### எதிர்காலம்

சீனா பொருளாதாரத்திலும் இராணுவப் பலத்திலும் இன்று முன்வரிசையில் நிற்கிறது. போர்களையும் பஞ்சங்களையும் வறுமையையும் படுகொலைகளையும் சதிகளையும் கடந்துதான் சீனா இந்நிலையை எட்டியிருக்கிறது. சீன அதிபர் ஜி ஜின்பிங் நேற்று தியானன்மென் சதுக்கத்தில் ஏற்றும் செங்கொடியில் அந்தப் பெருமிதம் தெரிகிறது. அதேவேளையில், முன்னேறும் ஒரு நாடு வரலாறு ஏற்படுத்திய காயங்களுக்கு மருந்திடவும் வேண்டும் என்கிறார் ஹாங்காங் செய்தியாளர் கேரி ஹுவாங். 1989ஆம் ஆண்டில் நடந்த தியானன்மென் அடக்குமுறைக்குக் கட்சி மன்னிப்புக் கோர வேண்டும் என்கிறார் அவர். பொது விவாதங்கள் அனுமதிக்கப்பட வேண்டும், படிப்படியாக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் மாற்றங்களுக்கும் கட்சி முன்வர வேண்டும் என்கிறார். அப்போது மக்களின் நேரடிப் பங்களிப்புடன் சீனச் சமூகம் முன்னேறும்!




### சீனாவின் வர்த்தகம்

சீனாவின் வர்த்தகம் கடந்த ஐந்து ஆண்டுகளில் வரலாற்றில் என்றுமே இல்லாத அளவுக்குச் சரிவு கண்டுள்ளது என்கின்றனர் வல்லுநர்கள். தற்போதைய மந்தத்துக்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உள்ளன. சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போய்க்கொண்டிருக்கும் வர்த்தகப் போர் காரணமாக ஜூன் மாதம் ஏற்பட்ட மந்தநிலை முதல் காரணம். அடுத்ததாக, முதலீட்டாளர்களின் நம்பிக்கைக் குறைவு காரணமாகக் கட்டடத் துறையில் ஏற்பட்டிருக்கும் சரிவு. வருகிற காலாண்டுகளில் நிலமை மேலும் மோசமாகும் என்றும் பெரும்பாலான பொருளியலாளர்கள் கருதுகிறார்கள்.

வளர்ச்சி தடுமாறிக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், அதிக ஏற்றுமதி வரிகள் காரணமாக வீழ்ச்சிய டைந்திருக்கும் சீன ஏற்றுமதியை உள்நாட்டுத் தேவைகள் ஈடுகட்டிக்கொண்டிருக்கின்றன என்று தரவுகள் கூறுகின்றன. ஆனால், ஏற்றுமதியையே சீனா பெரிதும் நம்பியிருப்பதாலும், அமெரிக்காவுடனான அதன் வர்த்தகப் போருக்கு முடிவு ஏதும் கண்ணுக்கு எட்டிய தொலைவில் தெரியவில்லை என்பதாலும், சீனாவின் வளர்ச்சி மீதான நெருக்கடி இன்னும் சில காலத்துக்கு இருக்கவே செய்யும்.

சீனாவின் முன் பெரிய சவால்கள் பல இருக்கின்றன. அதில் முக்கியமானது சீனப் பொருள்தாரத்தையே மறுகட்டமைப்பு செய்வது. அரசை மையப்படுத்திய முதலீடுகள், ஏற்றுமதிகள் போன்றவற்றிலிருந்து சந்தை மையப்படுத்தியதாகப் பொருளாதாரம் மாற வேண்டும். பொருளாதாரத்தில் சீன வளர்ச்சியின் வசந்த காலம் அந்த அரசால் தாராளமாகக் கொடுக்கப்பட்ட நிதியாலும் மாபெரும் தொழிலாளர் திரளாலும், குறிப்பாக குறைந்த ஊதியத்துக்கு உழைப்பைச் செலுத்திய அந்தத் திரளாலும், சாத்தியமானது. இதனால்தான், ஏற்றுமதியில் உலக அளவில் பெரும் சாம்ராஜ்ஜிமாக சீனா உருவெடுத்திருந்தது. இந்தச் சரிவில் இருந்து சீனா எப்படி அடுத்த அடியை எடுத்து வைக்கப் போகின்றது என்பதை தியானன்மென்தான் முடிவுசெய்யும். அதன் இயல்பான உந்துதலே சீனாவின் எதிர்காலம். ஆசியாவினதும்கூட.

## ஆசிரியருக்கான கடிதம்

# இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுமா?

கடந்த 26ஆம் 27ஆம் திகதிகளில் ஆசிரியர்களின் சுகவீன விடுப்புப் போராட்டம் காரணமாக நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் இயங்கவில்லை என்பதும் யாவரும் அறிந்ததே.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம், வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம் உட்பட ஏறக்குறைய முப்பத்தியொரு தொழிற்சங்கங்கள் ஊடகங்கள் மூலமாக இப்போராட்டம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை முன்னேற்பாடாக வெளிப்படையாக அறிக்கைகள் மூலம் தெரியப்படுத்தியிருந்தன. ஆனால் வடக்கு மாகாணத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் மத்தியில் இந்தப் போராட்டம் தொடர்பாக ஒரு குழப்பநிலையே காணப்பட்டது.

காரணம் வடமாகாணத்தின் பெரும்பாலான ஆசிரியர்களை அங்கத்தவராகக் கொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்படிப் போராட்டம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படையகத் தெரிவிக்காது நீண்ட மௌன விரதத்தை மேற்கொண்டமையே ஆகும். "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்ற நிலையே இந்த மௌன விரதத்துக்கான காரணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகம் மனதில் ஏற்படுகின்றது. நானும் ஒரு ஓய்வுநிலை ஆசிரியர் என்ற முறையில் இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினரிடம் இருந்து "உதயன்" ஊடாக பதிலை எதிர்பார்க்கின்றேன்.

*த.இராசலிங்கம், ஓய்வுநிலை ஆசிரியர்.*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவ[illegible]ரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், [illegible] பயன்படுத்துபவராக இருந்தால் மின்ன[illegible] தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த [illegible] மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசாரரைக் கைது செய்யக் கோரி சனியன்று யாழ். நகரில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.2

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளையை அவமதித்து சட்டத்தைக் கையில் எடுத்த ஞானசார தேரரையும், அவரின் தலைமையிலான இனவெறிக்குழுவின் உறுப்பினர்களையும் கைது செய்யக் கோரி, எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் போராட்டம் இடம்பெறும்.

எந்தவித கட்சி அரசியலையும் கலக்காமல் ஒன்றுபட்ட தமிழினத்தின் உணர்வலைகளை அரசுக்கு உணர்த்தும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் செயற்படும் சகல சமய, சமூக பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழகச் சமூகம் உட்பட அனைத்துத் தரப்பினரும் போராட்டத்தில் பங்கேற்று ஆதரவளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (க-ரி1,26)

## மழலைகள் மகிழ்களம்

சண்டிலிப்பாய், ஒக். 2

சண்டிலிப்பாய் ஆலங்குளாய் முன்பள்ளியின் மழலைகள் மகிழ்களம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி உப தலைவர் சி.கஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் கலந்து கொண்டார்.

சிறப்புவிருந்தினர்களாக சண்டிலிப்பாய் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் கணேசன் கார்த்திகேயன், உயர் தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் வே.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலைத்தேய வாத்திய இசையுடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதுடன் மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கான நிதி அனுசரணையை சண்டிலிப்பாய் ஐக்கிய மக்கள் மன்றத்தின் கனடா கிளையினர் வழங்கியிருந்தனர். (ஜ-104)

## காந்தி ஜெயந்தி தின நிகழ்வு

150 ஆவது காந்தி ஜெயந்தி தின நிகழ்வு இன்று புதன்கிழமை கிளிநொச்சி காந்தி சிறுவர் இல்லத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் கிளிநொச்சி காந்தி சிறுவர் இல்லமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பதில் இந்திய கொன்சியூலர் ஆர். பக்ரா, சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், கிளிநொச்சி மாவட்டச் செயலக மேலதிக செயலர் ச.சத்தியசீலன், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் த.முகுந்தன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-159,9)

## வாணி விழா

யாழ்ப்பாணம்,ஒக்.2

வேலணை, சரவணை கிழக்கு, பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வாணி விழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பள்ளம்புலம் முருகமூர்த்தி திருக்கோயில் நால்வர் மணி மண்டபத்தில் நடைபெறும்.

நிலைய சமயப் பொறுப்பாளர் பஞ்சாட்சரம் ஞானபண்டிதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (க)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் பிராந்திய அஞ்சல் பரிவர்த்தனை தலைமையகத்தின் ஏற்பாட்டில் நேற்று குருதிக் கொடை முகாம் இடம்பெற்றது. (க)

### கந்தர்மடத்தில்

## 9 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பிரதேசத்தில் சுகாதாரப் பிரிவினர் நேற்று முன்தினம் வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது 122 குடியிருப்புக்கள் சோதனை செய்யப்பட்டன. அவற்றில் 9 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள் அடையாளம் காணப்பட்டன. சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு எதிராகக் சிவப்பு அறிவித்தல்களும் விடுக்கப்பட்டன.

குடியிருப்புக்களின் சுற்றாடல்கள் யாவும் உடனடியாக இரண்டு வாரத்துக்குள் துப்புரவு செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

அன்னசத்திர வீதியில் ஒருவர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அங்கும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்தப் பகுதிக்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான புகையும் அடிக்கப்பட்டது. (க-17)

## வித்தியா கொலையாளி உட்பட இருவருக்கு மற்றொரு வழக்கிலும் தூக்குத் தண்டனை

### யாழ்ப்பாண மேல்நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வுப் படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பூபாலசிங்கம் ஜெயக்குமாருக்கு பிறிதொரு கொலை வழக்கிலும் யாழ்ப்பாண மேல்நீதிமன்று நேற்றுமுன்தினம் தூக்குத் தண்டனை தீர்த்தது. இவருடன் சேர்த்து மற்றொருவருக்கும் தூக்கு விதிக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி புங்குடுதீவில் சோமசுந்தரம் சுப்பிரமணியம் மது அருந்துவதற்காகச் சென்ற பின்னர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் ஜெயக்குமார், செல்வராசா கிருபாகரன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் இணைந்து சோமசுந்தரம் சுப்பிரமணியத்திடமிருந்த 10 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் நடைபெற்றன. வழக்குக் கோவைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டன. இருவருக்கும் எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் 2018ஆம் ஆண்டு டிசெம்பரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

தண்டனைச் சட்டக்கோவை 296ஆம் பிரிவின் கீழ் முதலாவது குற்றச்சாட்டும் கொல்லப்பட்டவரின் உடைமையிலிருந்து 10 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்தமைக்காக தண்டனைச் சட்டக்கோவை 380ஆம் பிரிவின் கீழ் இரண்டாவது குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டது.

யாழ்ப்பாணமேல் நீதிமன்ற நீதிபதி அ. பிரேமசங்கர் முன்னிலையில் விளக்கம் நடைபெற்றது.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார்.

இறுதியில் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்ட மேல்நீதிமன்று இருவருக்கும் நேற்றுமுன்தினம் தூக்குத் தண்டனைத் தீர்ப்பு விதித்தது.

திருட்டுக் குற்றத்துக்காக 10ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. தலா 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. தண்டம் செலுத்தத் தவறின் மேலும் 10 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் மேல்நீதிமன்று தீர்ப்பில் தெரிவித்தது. (த-37,106)

## வடக்கு மாகாணத்தில் சிறந்த விவசாயிகள் தெரிவு

### 4 பிரிவுகளில் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.2

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தால் 2019 ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள், சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்கள், சிறந்த தேனீ வளர்ப்பாளர்கள், சிறந்த விவசாயச் செயன்முறைத் தொழில்நுட்பங்களை மரக்கறிச் செய்கையில் நடைமுறைப்படுத்துபவர் என்ற அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும்.

போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்தி செயயப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விவசாயப் போதனாசிரியருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது மாவட்ட காரியாலயத்தில் சமர்ப்பிக்கலாம்.

சிறந்த ஏனைய செய்கையாளர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் விவசாயத்திணைக்களத்தால் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் கௌரவிக்கப்பட்டவர்கள், போட்டியில் கலந்து கொள்ளவதைத் தவிர்க்குமாறு யாழ்ப்பாணம் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிறி ரங்கன் அறிவித்துள்ளார். (க-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்படைக்கப்பட்ட சிறார்களுக்கு என்ன நடந்தது எனப் போராட்டம்

## யாழ்ப்பாண ஒ.எம்.பி. அலுவலகம் முன்பாக நடந்தது

யாழ்ப்பாணம், ஒக். 2

இறுதிப் போரில் படைகளிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுடன் கையளிக்கப்பட்ட சிறார்கள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டு யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.



பன்னாட்டுச் சிறுவர் தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு செம்மணி வீதியிலுள்ள பிள்ளையார் கோவில் முன்பாக போராட்டம் ஆரம்பித்து, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வரை நடைபவனியாகச் சென்று அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2009 இல் இராணுவத்திடம் சரணடைந்த போராளிகளின் பிள்ளைகள் எங்கே? போர்க்காலத்தில் இலங்கை இராணுவத்தினரால், காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு அரசே பதில் கூறு? குற்றவாளி நீதிபதியா? குற்றம் செய்தவன் நீதிபதியாகலாமா? எமது பிள்ளைகளுக்கு நீதி வேண்டும், காணாமல் ஆக்கப்பட்ட எமது சிறுவர்கள் எங்கே? போன்ற கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்களைக் கையாளும் அலுவலக பெயர்ப் பலகை மீது சாணம் வீசி, அலுவலகத்தை விட்டு வெளியேறுமாறும் கோசம் எழுப்பினர்.

(த-7,106,ரி1)



## சரணடைந்த சிறுவர்கள் எங்கே? முல்லைத்தீவில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு,ஒக்.2

பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதிப்போரின்போது படையினரிடம் ஒப்படைத்து காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்கள் எங்கே என்ற கோரிக்கையை முன்வைத்து, நீதியைப் பெற்றுத்தர வலியுறுத்தி வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், "இறுதிப் போரின் போது பெற்றோருடன் சரணடைந்த சிறுவர்கள் எங்கே?, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பெற்றோரைத் தேடும் பிள்ளைகள் பெற்றோருடன் வாழும் உரிமை மறுக்கப்படுவதால் பெரும் உளத்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்,

ஆயிரக்கணக்கான சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் இதற்கு நீதி எங்கே?, சிறுமிகள் பாலியல் ரீதியாகத் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள் நீதி எங்கே? உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களின் உரிமைக்காகவும், பெற்றோரைத் தொலைத்த சிறுவர்களின் உரிமைக்காகவும் குரல் கொடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (க-ரி3)

சிறுவர் தினத்தை முன்னிட்டு

## மாணவர்களை ஒன்றிணைத்து வவுனியாவில் ஈருருளி ஊர்வலம்

வவுனியா,ஒக்.2

பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு "பிள்ளைகளின்வெற்றிக்கான நடப்பான நாடு" எனும் தொனிப்பொருளில்பாடசாலைமாணவர்களை ஒன்றிணைத்து ஈருருளி ஊர்வலம், வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

வவுனியாமாவட்டச்செயலகத்தின் ஏற்பாட்டில் நடந்த ஊர்வலம் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. ஊர்வலத்தை வவுனியா மாவட்டமேலதிகசெயலர் தி.திரேஸ்குமார்கொடியை அசைத்து ஆரம்பித்து வைத்தார்.

ஊர்வலம்ஏ-9வீதியூடாகச் சென்று, மணிக்கூட்டு கோபுரம் வழியாகத் திரும்பி, கந்தசுவாமி கோவில் வீதியூடாக வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், ஹொரப்பொத்தானை வீதியூடாக வவுனியா இலங்கை திருச்சபைதமிழ்க்கலவன்பாடசாலை, மன்னார் வீதியூடாக வவுனியா காமினி மகாவித்தியாலயம்,பட்டாணிச்சூர் முஸ்லிம் மகா வித்தியாலயம், பண்டாரிக்குளம் விபுலானந்த கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆகியவற்றைக் கடந்து மாணவர்களை ஒன்றிணைத்து மீண்டும் மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தது.

வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில், மாவட்டச் செயலர் ஜ.எம். ஹனிபாசிறுவர்தினஆசியுரை வழங்கினார். தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கானசிறுவர் திறன் விருத்திச் செயலமர்வும் இடம்பெற்றது. வவுனியா மாவட்டச்செயலக சிறுவர் மேம்பாட்டு அலுவலர் ஜெ.ஜெயகெனடி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வவுனியா மாவட்ட உதவிச்செயலர் நா.கமலதாசன், ஓமேகா நிறுவனத்தின் அதிகாரிகள், வர்த்தகசங்கஉறுப்பினர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் அலுவலர்கள், பாடசாலைஅதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

(க-ரி4,110,222)





## காணாமலாக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதிகோரி வவுனியாவில் போராட்டம்

வவுனியா,ஒக்.2

காணாமலாக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதிகோரி வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு, வவுனியா மாவட்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'பன்னாடே எமக்காக குரல் கொடுக்க எழுந்திரு', 'கையளிக்கப்பட்ட மாணவர்கள் எங்கே?', 'குடும்பமாக ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் எங்கே?', 'பத்து வருடங்கள் காத்திருந்தோம் இன்னும் எத்தனை வருடங்கள் வேண்டும்?' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பினர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் சிறுவர் மற்றும் குழந்தைகளின் ஒளிப்படங்களையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் மயில்வாகனம் தியாகராஜா, பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுமக்கள், சிறுவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை - ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைப்பதற்கான மனுவும் இதன்போது வாசிக்கப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(க-ரி4,110)

## காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்கள் விவரங்களுடன் நூல் வெளியீடு



வவுனியா,ஒக்.2

போர்க்காலத்தில் குடும்பத்தினருடன் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்கள் சிலரது விவரங்கள் அடங்கிய நூல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று வெளியிடப்பட்டது.

பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதிகோரி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வட்டுவாகல், ஓமந்தை மற்றும் பல்வேறு இடங்களிலும் தாய், தந்தையருடன் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இராணுவத்திடம் சரணடைந்த சிறுவர்கள் பலர் காணாமற் போயிருந்தனர். அந்தச் சிறுவர்கள் சிலரது தகவல்கள் அடங்கிய நூல் போராட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்டது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தலைவி எஸ். சரோஜினி நூலை வெளியிட்டு வைக்க பாடசாலை மாணவனொருவர் பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபைமுன்னாள் உறுப்பினர் எம். தியாகராசா, இந்து மதகுரு வானபிரபாகரக்குருக்கள் ஆகியோரும் நூலைப் பெற்றுக் கொண்டனர்.

(க-110,ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்,முதியோர் தின நிகழ்வு

கொடிகாமம்,ஒக்.2
யாழ்ப்பாணம், கச்சாய் மகா வித்தியாலயத்தின் சிறுவர் முதியோர் தின நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது.நிகழ்வில் சிறு வர் மற்றும் முதியோர் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-159)



## சிறார்களின் மாதிரிச் சந்தை



யாழ்ப்பாணம்,ஒக்.2
பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பா ணம் வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி பாலர் பாடசாலை சிறார்களின் மாதிரிச் சந்தை நேற்று இடம்பெற்றது.
நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

## சிறுவர் தின நிகழ்வு

முல்லைத்தீவு,ஒக்.2
பன்னாட்டு சிறுவர் தின நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயல கத்தில் நேற்று விமர்சையாக கொண்டாடப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக முல்லை வலயக்கல் விப்பணிப்பாளர் உமாநிதி புவனராயா மற்றும் மேலதி மாவட்ட செயலர் ம.பிரதீபன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.
இதன்போது பாடசாலை சிறுவர்களின் கலை நிகழ்வுகள் சிறப் பாக நடைபெற்றன. (ஐ-ரி3,7)















## சிறுவர் தின நிகழ்வு

மன்னார்,ஒக்.2
பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு மன்னார் பேசாலைப் பகுதியில் நேற்றுச் சிறப்பாகச் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது.
ஆரம்ப நிகழ்வாக பேசாலை புனித வெற்றி அன் னையின் ஆலயத்தில் பங்கு தந்தை அருட்பணி தேவராஜ் தலைமையில் அருட்பணி ரவ்வாயல் , அருட்பணி ரஞ்சன் சேவியர் ஆகியோர் இணைந்து சிறுவர்களுக்கான சிறப்பு திருப்பலி ஒப்புக் கொடுக் கப்பட்டது.
இவ் திருப்பலியில் பேசாலை பகுதியில் இயங்கி வரும் புனித பாத்திமா கல்லூரி, சென். மேரிஸ் பாட சாலை, விக்ரரிஸ், சென்.மேரிஸ் மற்றும் அமலதா சன் சிறுவர் பாடசாலைகளின் பல நூற்றுக் கணக் கான சிறுவர்கள் கலந்துகொண்டனர்.
இதைத் தொடர்ந்து சென்.மேரிஸ் பாடசாலை சிறார் கள் 'வடலிகள் வளர்ந்து வானுயரும் நாளை, 'மகிழ் வான சிறுவர் உலகை காப்பதற்காக நாம் கைகொ டுப்போம்' போன்ற பதாகைகளையும் சுலோகங்க ளையும் ஏந்தியவாறு வீதி வலம் வந்தனர். (ஐ-60)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரசபை பொது நூலகத்தில் இலத்திரனியல் பிரிவு திறப்பு



வவுனியா, ஒக். 2

வவுனியா நகரசபைபொதுநூலகத்தில் இலத்திரனியல் நூலகப்பிரிவுநேற்றுத்திறக்கப்பட்டது.

இலத்திரனியல் நூலகப்பிரிவை நகரசபைத்தவிசாளர், உபதவிசாளர், நகரசபைஉறுப்பினர்கள்இணைந்துநாடா வெட்டித் திறந்து வைத்தனர். இலத்திரனியல் நூலகப்பிரிவுக்கு நகரசபையின் நிதியொதுக்கீட்டில்கணினிகள்மற்றும்தளபாடங்கள்கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. நகரசபைத்தவிசாளர் இ.கௌதமனின்தனிப்பட்டநிதியில்கணினியொன்றும் அன்பளிப்புச்செய்யப்பட்டது.

வவுனியா நகரசபைச் செயலர் இராசையா தயாபரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நகரசபை உறுப்பினர்கள் , நூலக அலுவலர்கள் , ஊழியர்கள் , பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். (க-ரி4)

## நீராவியடிப்பிள்ளையார் சூழலில்
# சடலம் எரித்தமை தொடர்பில் சான்றுகளைச் சமர்ப்பிக்கவும்
## முல்லைத்தீவு நீதிமன்று கட்டளை

யாழ்ப்பாணம், ஒக். 2

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் அருகில் நீதிமன்ற உத்தரவைமீறி பிக்குவின் சடலத்தைத் தகனம் செய்தமை தொடர்பில் தேவையானோரை விசாரணை செய்யவும், சட்டத்தரணி மீது தாக்குதல் மேற்கொண்டததை உறுதி செய்யும் வகையில் கிடைக்கப்பெற்ற ஒளிப்படம் மற்றும் சான்றுகளை மன்றில் சமர்ப்பிக்குமாறும் முல்லைத்தீவு நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய சூழலில் விகாரை அமைத்து தங்கியிருந்த பிக்குவின் சடலத்தை ஆலய சூழலில் தகனம் செய்ய முற்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. குறிக்கப்பட்ட பகுதியில் சடலம் தகனம் செய்வதற்கு எதிராக கடந்த 22ஆம் திகதி இடைக்காலக் கட்டளை நீதிமன்று பிறப்பித்திருந்தது. அதனையும் மீறி மறுநாள் ஆலய சூழலில் சடலம் தகனம் செய்யப்பட்டது. அதைத் தட்டிக்கேட்டநிலையில் சட்டத்தரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

சம்பவங்கள் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் இரண்டு அறிக்கைகளை மன்றில் தாக்கல் செய்திருந்தனர். இவை தொடர்பில் தனித்தனியே இடம்பெற்ற விசாரணையின்போதே மேற்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

சடலம் தகனம் செய்ய இடைக்காலத் தடை உத்தரவு தமிழிலும் சிங்களத்திலும் வழங்கிய நிலையில் அதனையும் மீறி அந்தப்பகுதியில் தகனம் செய்த பிக்குவுக்கு எதிராவும் இடுகாட்டுச் சட்டத்தை மீறியதான குற்றச் சாட்டுத் தொடர்பில் பிரதேச சபைத்தவிசாளரிடமும் விசாரணை மேற்கொள்ள மன்று அனுமதி வழங்கியது.

இதேநேரம் மன்றின் கட்டளைக்கமைய தகனம் செய்ய வேண்டிய இடத்தை அடையாளம் காட்டுவதற்காகச் சென்ற சட்டத்தரணிகளில் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் அந்தப் பகுதிகளில் பதிவு செய்த ஒளிப்படங்கள், காணொலிகளை மன்றுக்குச் சமர்ப்பிக்கவும் நீதிவான் எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

குறித்த வழக்கில் ஆலயம் சார்பில் மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில் மூத்த சட்டத்தரணிகளான பரஞ்சோதி, கனகேஸ்வரன், கங்காதரன் ஆகியோருடன் சட்டத்தரணிகளான இளங்குமரன், நேரோஜினி, ருஜிக்கா, ஜமால், துஸ்யந்தி, ராதிகா, சுபாவிதுரன் ஆகியோர் மன்றில் முற்பட்டனர். (த-105)

## நல்லூர் வீதிகளுக்கு குவிவு வில்லைகள்

யாழ்ப்பாணம், ஒக். 2

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட முதன்மை வீதிகளின் சந்திகளில் குவிவு வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளன. முதன்மை வீதிகளின் சந்தியின் திருப்பு முனைப் பக்கமாக இந்த குவிவு வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளன என்று சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

சந்திகளின் திருப்பு முனைப் பக்கமாக வாகனங்கள் திரும்பிச் செல்ல வசதியாக இந்த குவிவு வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளன.

பரமேஸ்வரா சந்தி, ஆடிய பாதம் வீதி சந்தி, பலாலி வீதியில் கோண்டாவில் சந்தி, பாற்பண்ணை வீதி சந்தி, பொற்பதி வீதி சந்தி, கோண்டாவில் டிப்போ சந்தி, கோண்டாவில் இராமகிருஷ்ண வீதி சந்தி, கலாசாலை வீதி சந்தி, திருநெல்வேலியில் அம்மாச்சி உணவகத்துக்கு அருகில், கொக்குவில்சந்தி உள்ளிட்டவைகளுக்கு வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் 5 குவிவு வில்லைகளைப் பொருத்த சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சபைக்கு உட்பட்ட பகுதியில் பொருத்தி வைக்கப்பட்ட இந்தக் குவிவு வில்லைகளைச் சேதப்படாமல் பாதுகாப்பதற்கு பொது மக்கள் முன்வர வேண்டும் என்று தவிசாளர் தெரிவித்துள்ளார். (க-17)



முல்லைத்தீவு, நெடுங்கேணிவீதியில்களிகாட்டில் ஓணான் வடிவத்திலான அதிசய விலங்கு ஒன்று இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு அவர்களது பராமரிப்பில் வைக்கப்பட்டுள்ளது. (க-70)

## மணல் அகழ்வைத் தடுக்க சிறப்புப் பொலிஸ் குழுக்கள்

கொடிகாமம், ஒக். 2

தென்மராட்சி தெற்கு தனன்கிளப்பு மற்றும் மறவன்புலவு பகுதிகளில் அனுமதி பெறாது இடம்பெறும் மணல் அகழ்வைத் தடுப்பதற்கு சிறப்புப் பொலிஸ் பிரிவை ஈடுபடுத்துவோம் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையப் புதிய பொறுப்பதிகாரி எஸ்.ஆர்.ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

டிப்பர் மற்றும் உழவியந்திர வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களை சட்டவிரோத மணல் அகழ்வுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். சில சாரதிகள் ஒரு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டு ஒரே நாளில் பல முறை மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர். அனுமதிபெறாத மணல் அகழ்வு உள்ளிட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக பொதுமக்கள் எமக்கு தகவல் வழங்கி வருகின்றனர்.

ஆகவே பொதுமக்கள் பொலிஸாருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும். குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸ் ரோந்துப் பணிகளை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம். கொள்ளை மற்றும் வழிப்பறி தொடர்பிலும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

மேலும் வீதி விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமானால் போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் பொலிஸாரின் அறிவுரைகளை மதிக்க வேண்டும். பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை உந்துருளிகளில் பாடசாலைகளுக்கு அழைத்து வரும்போது, தாம் தலைக்கவசம் அணிந்து வருகின்ற போதிலும்பிள்ளைகளுக்குத் தலைக்கவசம் அணிவிப்பதில்லை. இது தொடர்பாக ஒவ்வொரு பாடசாலை அதிபர் ஊடாகவும் பெற்றோருக்கு தகவல் வழங்கவுள்ளோம் -என்றார்.

குறித்த பகுதிகளில் பொலி ஸாரைப் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னைய பொலிஸ் பொறுப்பதிகாரியும் இவ்வாறு கூறியிருந்தார். எனினும் நடைமுறைக்கு வரவில்லை என்று சம்பவ இடங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (த-159)

## மணல்அகழ்வுதொடர்கின்றது செயலக நடவடிக்கை என்ன?
### நானாட்டான் சபைத் தவிசாளர் கேள்வி

மன்னார், ஒக். 2

மன்னார் கூராய் ஆற்றுப்பகுதி மணல் அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி நானாட்டான்ஆத்திமோட்டைப்பகுதியில் மணல் அகழ்வு தொடர்கின்றது. தடுக்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றுமன்னார் மாவட்டச்செயலரிடம் நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 26ஆம்திகதி மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற மணல் மற்றும் கிரவல் அகழ்வுகளுக்கு அனுமதி கொடுப்பது தொடர்பான கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மன்னார்மாவட்டத்துவளங்களைப்பாதுகாப்பது தொடர்பாக மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் தலைமையில் கடந்த ஓகஸ்ட் பத்தொன்பதாம் திகதி பிரதேச சபைத்தவிசாளர்கள்பிரதேசசெயலர்கள் பொலிஸ்சுற்றுச்சூழல்அதிகாரிகள்கனிமவள திணைக்க ளத்தினர் அடங்கிய குழு அமைக்கப்பட்டிருந்தது.

இதில்மன்னார்மாவட்டத்தில்கிரவல்மற்றும் மணல்அகழ்வுகளுக்குஅனுமதிவழங்குவதற்கு முன் குறித்த இடங்களைப் பார்வையிட்டுஆய்வுசெய்து அனுமதிவழங்குவதே இந்த குழுவின் செயற்பாடு.

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேசம் கூராய்ஆற்றின்மணல்அகழ்வுஅனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி நானாட்டான் ஆத்திமோட்டைப் பகுதியில் கனரக வாகனங்கள்மூலம்மணல்அகழ்வுநடைபெறுகிறது. இதனால் புதிதாக அமைத்த பல வீதிகள் பழுதடைகின்றன. பொலிஸார் கண்டும் காணா[illegible] என்றுமேலும் தெரிவித்தார். (த-213)

## வினாடி வினா போட்டி

வவுனியா, ஒக். 2

வவுனியா மாவட்டத்தில் உள்ள முதியோர் சங்கங்களுக்கிடையில் பொது அறிவு வினாடி வினாப்போட்டி அண்மையில் மாவட்ட சமூக சேவை அலுவலகத்தால் நடத்தப்பட்டது.

கந்தபுரம், மகாறம்பைக்குளம், செட்டிகுளம், வவுனியா நகரம், வைரவப் புளியங்குளம், பண்டாரிகுளம், நெளுக்குளம், வெளிக்குளம், நெடுங்கேணி, கூமாங்குளம், பூந்தோட்டம், சிதம்பரபுரம், தோணிக்கல் ஆகிய சங்கங்களில் இருந்து 8 அணிகள் காலிறுதிப்போட்டிக்கு தெரிவாகின. (ஐ-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாந்தை மாதா ஆலய பணிமனையில் திருட்டு

மன்னார் முதன்மை வீதிமாந்தையில்அமைந்துள்ள மாந்தை மாதா ஆலயத்தின் பங்கு பணிமனையின் கதவு உடைக்கப்பட்டு ஒரு தொகை பணம் திருடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

ஆலயத்தின் பங்குத் தந்தை இல்லாத நேரத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பங்குத்தந்தை உடனடியாக மன்னார் ஆயர் இல்லத்துக்குத் தெரியப்படுத்தினார்.

அருட்தந்தை எமிலியான்ஸ் பிள்ளை அடிகளார்மன்னார்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டைத் தொடர்ந்து மன்னார் பொலிஸார் ஆலயப்பகுதிக்குவருகை தந்து விசாரணைகளையும், சோதனைகளையும் மேற்கொண்டனர். (க-56)

# நடுக்கடலில் எம்மைப் பிடித்துவந்து பொதிகளை வைத்து படம் எடுத்தனர்

### ஹெரோய்ன் கடத்தல் வழக்கில் கடற்படையினரைச் சாடி இந்திய மீனவர்கள் சாட்சி

யாழ்ப்பாணம், ஒக். 2

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த எம்மைக் கைது செய்து , அழைத்து வந்து காங்கேசன்துறை முகாமில் வைத்து போதைப் பொருள்களுடன் வைத்துப் படம் எடுத்தனர் கடற்படையினர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தனர் இந்திய மீனவர்கள். 13.5 கிலோக் கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கடத்தி வருகையில் கைது செய்யப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 6 பேர் மீதான வழக்கின் சாட்சியப் பதிவுகள் யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தன.

2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இவர்கள் 6 பேரும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடமிருந்து 13.5 கிலோக் கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும், படகு ஒன்றும் மீட்கப்பட்டன என்றும் அறிக்கை தாக்கல் செய்த பொலிஸார் மல்லாகம் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். ஆரம்ப விசாரணைகளின் பின்னர் வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றுக்கு சட்டமா அதிபரால் பாரப்படுத்தப்பட்டது.

மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்குத் தொடுநர் சார்பில் மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார். வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியங்கள் முடிவுற்ற நிலையில் எதிரிகள் தமது தரப்பு சாட்சி யங்களைப் பதிவு செய்ய நேற்று முன்தினம் மன்று அனுமதியளித்தது.

எதிரிக் கூட்டில் நின்றபடியே தமது சாட்சியங்களைத் தெரிவிப்பதாக தமது சட்டத்தரணிகள் மூலம் எதிரிகள் தெரிவித்தனர். எதிரிகள் ஒவ்வொருவராகத் தமது சாட்சியத்தைப் பதிவு செய்தனர். அவர்கள் தெரிவித்ததாவது:

காரைக்கால் பகுதியிலிருந்து மீன்பிடி உபகரணங்களுடன் புறப்பட்டு இந்திய கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில்மீன்பிடித்துக்கொண்டிருந்தோம். சுமார் 40 கிலோ கிராமுக்கும் அதிகளவான மீன்களைப் பிடித்து விட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் எமது படகினுள் ஏறிச் சோதனையிட்டனர்.

படகின் முன் பக்கத்தில் கட்டப்பட்டு கடலில் பரப்பப்பட்டிருந்த வலையை அறுத்தனர். எம்மை கைதுசெய்து தமது கப்பலில் ஏற்றி கொண்டு சென்றனர். காங்கேசன்துறையில் சில பொதிகளை எம்முடன் வைத்து ஒளிப்படம் எடுத்தனர். பின்னர் கடற்படையினர் எம்மைத் தாக்கினர். அவர்கள் சமர்ப்பித்த சான்றுப் பொருள்களுக்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று அவர்கள் சாட்சியமளித்தனர்.

வழக்கு தொடுநர் தரப்புச் சாட்சியங்கள் யாவும் முடிவுற்றன என்று அரச சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார். இதனை அடுத்து இரு தரப்புகளினதும் தொகுப்புரைக்காக வழக்கு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (து-107)



## தொழில் உபகரணங்கள் கையளிப்பு

வவுனியா,ஒக்.2

மாவீரர்களையுடைய பெண் தலைமைத்துவ குடும்பங்கள் 4 பேருக்கு குழுவாக தொழில் செய்வதற்குமீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

மருதங்கேணியைச் சேர்ந்தகுடும்பங்களுக்கே 47 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன. புன்னகை அமைப்பின் பொருளாளர் மற்றும் அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-222)

## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஒக்.2

க.பொ.த. சாதாரன தரத்தில் நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 5,6 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இருநாளும் காலை 9 மணி தொடக்கம் 2.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிநெறியில்பங்குபற்றவிரும்பும் மாணவர்கள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர், விவரங்களைபதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள். (ஐ)

## தொடருந்து நிலையம் முன்பாக புதிதாக புத்தர்சிலை முளைத்தது



வவுனியா, ஒக். 2

மத நல்லிணக்கம் என்னும் பெயரில் வவுனியா, தொடருந்து நிலையம் முன்பாக புதிதாக புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. வவுனியா முச்சக்கர வண்டிச் சாரதிகளே இவ்வாறு செய்துள்ளனர் என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா தொடருந்து நிலையம் முன்பாக சிறிய கட்டடம் ஒன்று அமைத்து, அதில் பிள்ளையார், புத்தர் ஆகிய சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. மாதா சிலையும் வைக்கப்பட்டுள்ளது. முச்சக்கர வண்டிச் சாரதிகள் தமது வழிபாட்டுக்காக குறித்த வழிபாட்டு தலத்தை மத நல்லிணக்கம் என்னும் பெயரில் அமைத்துள்ளனர். இருப்பினும்,தொடருந்துநிலைய முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் புத்தரை வழிபடும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் இல்லை. இந்த நிலையில்தமிழ்மக்கள்வாழும் பகுதியில் புத்தரின் சிலை வைக்கப்பட்டுள்ளமை எதற்காக? இந்தச் செயற்பாடு எதிர்காலத்தில் பெரும் பிரச்சினைகளை உருவாக்கும் என்று அந்தப் பகுதி மக்கள் அதிருப்தி வெளியிடுகின்றனர்.

இது தொடர்பில் வவுனியா முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத் தலைவரிடம் கேட்டபோது, "குறித்த நிகழ்வு இடம்பெற்றுள்ளதாக நானும் அறிந்தேன். இந்த வழிபாட்டிடம் அந்தப் பகுதியிலுள்ள முச்சக்கர வண்டி தரிப்பிட சாரதிகளால் அமைக்கப்பட்டது. ஆனால் புத்தர் சிலை வைக்கப்பட்டதற்கும் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்துக்கும் தொடர்பில்லை." என்று தெரிவித்தார்.

வவுனியா நகரசபை உப தலைவர் சு.குமாரசாமியிடம் கேட்டபோது, "குறித்த விடயம் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது" என்று தெரிவித்தார். (து-ரி4)

# தேசிய மரநடுகைத் திட்டம் மன்னாரில் நேற்று ஆரம்பம்



மன்னார்,ஒக்.2

'வன ரோப' நிகழச்சி திட்டத்தின் கீழ் மர நடுகை வேலைத்திட்டம் மன்னார் வட்டக்கண்டல்அ.த.க.பாடசாலையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் மடுவட்டார வன அலுவலகத்தின் ஏற்பாட்டில், அதிபர்எஸ்.தேவதாஸ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான மரக்கன்றுகளை வழங்கி வைத்தார்.

பாடசாலைவளாகத்தில்'வனஅரணரெக்கவரண' நிகழ்சி திட்டத்துக்கு அமைவாக மரக்கன்றுகள் விருந்தினர்களால் நடப்பட்டன.

மன்னார் மாவட்ட வனப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள், பெற்றோர்கள் நிகழ்வில்கலந்து கொண்டனர். (க-56)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

வவுனியா,ஒக்.2

சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மடுகந்தை பகுதியில் வைத்து இவர் நேற்றுக்கைது செய்யப்பட்டார்.

சட்டவிரோதமாக பதிவுகள் எதுவுமின்றி துப்பாக்கி (சொட்கன் ) ஒன்றை வைத்திருப்பதாக கிடைத்த தகவலையடுத்து மடுகந்தை பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் வவுனியா நீதி மன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை மடுகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (ஐ-110)



நவராத்திரி விரதத்தின் மூன்றாம் நாள் துர்க்கையின் பூசை வழிபாடுகள் வவுனியா நகரசபைப் பொது நூலகத்தில் நேற்று இடம்பெற்றது. நகரசபை உறுப்பினர்கள்,நூலகஅலுவலர்கள்,ஊழியர்கள்வழிபாட்டில் பங்கேற்றனர். (க-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தஅணிக்கு கால அவகாசம்

## சு.க. மையச் செயற்குழுவில் முடிவு

கொழும்பு, ஒக். 2

மொட்டுச் சின்னம் தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்காக மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு எதிர்வரும் 5ஆம் திகதிவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சி கால அவகாசம் வழங்கியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு அவரது வதிவிடத்தில் கூடியது. சுமார் மூன்றரை மணிநேரம்வரை நீடித்த இந்தச் சந்திப்பில் அரச தலைவர் தேர்தல், பொதுமக்கள் முன்னணியுடன் அரசியல் கூட்டணி உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பாக "சின்னம் முக்கியமில்லை. ஒருமித்த எண்ணங்கள்தான் முக்கியம். எனவே, கோத்தபாய ராஜபக்சவையே ஆதரிக்க வேண்டும்" என்று ஒரு சிலரும், மொட்டுச் சின்னத்தில் தேர்தலை சந்தித்தால் சுதந்திரக் கட்சியின் தனித்துவம் இல்லாமல் போய்விடும் என்பதால் மாற்று வழி குறித்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று மேலும் சிலரும் கருத்துகளை முன்வைத்தனர்.

அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்துவத்தை ராஜபக்சாக் களுக்குச் சார்பான உறுப்பினர்கள் சிலர் எடுத்துரைக்கையில் அதற்கு சிலர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனால் கூட்டத்தில் சூடான வாதப்பிரதிவாதங்களும் இடம்பெற்றுள்ளன.

இறுதியில்மொட்டுச்சின்னத்தை மீள்பரிசீலனை செய்வதற்காக பொதுமக்கள் முன்னணிக்கு 5 ஆம் திகதிவரை அவகாசம் வழங்குவதற்கும், சுதந்திரக்கட்சியின் கோரிக்கைகளை கோத்தபாய தரப்புக்கு அனுப்பி வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டணி அமையும் பட்சத்தில் கைச்சாத்திட வேண்டிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் குறித்து சுதந்திரக் கட்சியால் அனுப்பி வைக்கப்படும் யோசனைகளுக்கு பொதுமக்கள் முன்னணியிலிருந்து இரு நாள்களில் அக்கட்சி பதிலை எதிர்பார்க்கின்றது.

அதன்பின்னர் 5 ஆம் திகதி கட்சியின் மையச் செயற்குழு மீண்டும்கூடி, அரச தலைவர் தேர்தல் தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் என்று சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஓ.5)

# சிங்கள வாக்குகளால் வெல்லக் கூடியவர்கள் தமிழர்களிடத்தில் ஏன் மண்டியிடுகின்றனர்?

## இப்படிக் கேட்கிறது ஐ.தே.க.



கருணாரத்ன பரணவித்தான

கொழும்பு, ஒக். 2

சிங்கள மக்களின் வாக்குகள் மட்டும் எமது வெற்றிக்குத் தாராளமாகப் போதும் என்று கூறுபவர்கள், வடக்கில் எதற்காக மண்டியிடுகின்றனர் என்பது புரியவில்லை. மொட்டுத் தரப்பினர் தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் ஒருவிதமாகவும், வடக்கு - கிழக்கில் வேறுவிதமாகவும் இரட்டை நாக்குகளில் பேசி வருகின்றனர்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து, அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில், பிரதிய மைச்சர் கருணாரத்ன பரணவித்தான தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கில் சிங்கள பௌத்த மக்கள் 73 சதவீதத்தினர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளிக்கின்றனர். வடக்கு தமிழ் மக்களும் கோத்தபாயவுக்கு வாக்களிக்க வேண்டுமென அச்சுறுத்தல் விடுக்கும் தொனியில் உரையாற்றியுள்ளார். இது சிறுபான்மை மக்களை அச்சமூட்டும் செயற்பாடுகளில் ஒன்றாகவே நாம் காண்கின்றோம்.

மொட்டுத் தரப்பினர் தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் ஒருவிதமாகவும், வடக்கு - கிழக்கில் வேறுவிதமாகவும் இரட்டை நாக்குகளில் பேசி வருகின்றனர். சிங்கள மக்களின் வாக்குகள் மட்டும் எமது வெற்றிக்குத் தாராளமாகப் போதும் என்று கூறுபவர்கள், வடக்கில் எதற்காக மண்டியிடுகின்றனர் என்பது புரியவில்லை.

2015ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கிய அதே தீர்ப்பைத் தான் நவம்பர் 16இல் கோத்தாவுக்கும் நாட்டு மக்கள் வழங்கவுள்ளனர். மொட்டுத் தரப்பிலிருந்து பலர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். வேட்புமனுதாக்கல் செய்த மறுதினமே பலர் எம்முடன் இணைய விருக்கின்றனர். மகிந்தவுக்கு ஆதரவளிக்கும் பலரும் இராணுவத்தினருக்கு ஆதரவளிக்க முடியாதென பகிரங்கமாகக் கூறிவருகின்றனர்.

வேட்புமனுதாக்கல் செய்வதற்கு முன்னரே தனது இராணுவ அதிகாரச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். அவரோடு இணைந்து ஓய்வு பெற்ற இராணுவத்தினர் அணியே பணிகளை முன்னெடுத்து வருகின்றது. ஜனநாயக அரசியல் செயற்பாடுகளை அவரிடம் காணமுடியாதுள்ளது. அடுத்து வரும் நாள்களில் அங்கிருந்து பலர் வெளியேறவிருக்கின்றனர்.

ஜனநாயக அரசியல் மீது நம்பிக்கை வைத்து செயற்படும் சஜித் பிரேமதாஸவின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது. 2015இல் ஐக்கிய தேசிய முன்னணியின் வெற்றிக்கு அணிதிரண்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களும் சஜித்தின் வெற்றிக்காக உத்தரவாதமளித்திருக்கின்றனர். ஜனநாயக விரோத சர்வாதிகாரப் போக்குடையவர்களை நிச்சயமாக மக்கள் நவம்பர் 16இல் மீண்டுமொரு தடவை படுதோல்வியடையச்செய்வார்கள் - என்றார். (ஓ.5)

# கோத்தாவைக் கைது செய்ய சூழ்ச்சிகள் செய்கிறது அரசு

## புலம்புகிறார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, ஒக். 2

முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத்தின் ஆலோசனைக்கு அமைய கோத்தபாய ராஜபக்சவை கைது செய்வதற்கு அரசியல் சூழ்ச்சி இடம்பெறுவது உறுதியாகியுள்ளதாக பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அலரி மாளிகையில் இருந்து வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமையவே கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ.5)



பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ்

# இலங்கையின் மனித உரிமைகள் நிலமை குறித்து அமெ. ஆராயும்

கொழும்பு, ஒக். 2

இலங்கை உள்ளிட்ட தெற்காசியநாடுகளின் மனித உரிமைகள் நிலை குறித்த கேள் அமர்வை அடுத்த மாதம் நடத்தவுள்ளதாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் தெற்காசியாவுக்கான உபகுழுவே இந்த அமர்வை நடத்தவுள்ளது.

அமெரிக்க காங்கிரசின் அயலுறவுத்துறைக் குழு உறுப்பினர்கள் மத்தியில், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ் கடந்த வாரம் பேசியிருந்தார். இதன்போது, ஒக்ரோபர் மாதம் தெற்காசியாவின் மனித உரிமைகள் நிலமைகள் குறித்த திறந்தகேள் அமர்வை நடத்துவது குறித்தும் தெரியப்படுத்தியுள்ளார். இந்த கேள் அமர்வில் இலங்கை, பாகிஸ்தான், இந்தியா, மியன்மார், உள்ளிட்ட நாடுகளின் மனித உரிமைகள் நிலை குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது. (ஓ.5)

# பெரிய வெங்காயத்தின் இறக்குமதி வரி குறைப்பு

கொழும்பு, ஒக். 2

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் கிலோகிராம் ஒன்றின் வரி 39 ரூபாவால் குறைக் கப்படுவதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் இந்த வரி குறைப்பு நடைமுறைக்கு வந்துள்ளது. (ஓ.5)

# சர்ச்சைக்குரிய அமெ. வானூர்தி மீண்டும் கட்டுநாயக்க வந்தது

கொழும்பு, ஒக். 2

அமெரிக்காவின் வெஸ்ரேன் குளோபல் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான சரக்கு வானூர்தி கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் தரையிறங்கியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு சேவை வழங்கும் இந்த வானூர்தி நிறுவனத்தின் வானூர்தி, பெல்ஜியம் லீஜ் நகரிலிருந்து கடந்த 28 ஆம் திகதி கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு வந்துள்ளது.

இந்த வானூர்தி நிறுவனத்தின் உரிமையாளர்களாக முன்னிற்கும் இருவரில் ஒருவர் அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவான சி.ஐ.ஏ. அமைப்பில் பணியாற்றிய முக்கிய மானவர்.

இதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் இந்த வானூர்தி நிறுவனத்தின் வானூர்திகள் இலங்கைக்கு வந்த சந்தர்ப்பங்களில் இலங்கையில் சேவை வழங்குநர்களின் தேவைகளுக்காகவே வந்ததாக குறிப்பிடப்பட்டது.

அத்துடன் மகிந்த அணி இது தொடர்பில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதுபான சாலைகள் நாளை மூடப்படும்

கொழும்பு, ஒக். 2

பன்னாட்டு நல்லொழுக்க தினத்தையும், மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டும் நாளை 3ஆம் திகதி நாடு முழுவதும் அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறி செயற்படும் மதுபான நிலையங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள நாடு முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிகாரிகள் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து உரிமம் பெற்ற கடைகளிலும் சோதனைகள் நடத்தப்படும் என்று மதுவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் கபில குமாரசிங்கக் கூறினார்.

அத்தோடு மதுபானத்தை கொண்டு செல்லல், உற்பத்தி மற்றும் சட்டவிரோதமாக சேமிப்பதில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (ஒ,5)





# கைதாகி 4 மணிநேரத்தில் விடுதலையாகிய பூஜித்

கொழும்பு, ஒக். 2

கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு 4 மணி நேரத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர், கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது 2 லட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

2017 ஆம் ஆண்டில் பொலிஸ் தலைமையகத்தில் மின்பளுத்தூக்கி இயந்திர பணியாளரான சமரக்கோனை அச்சுறுத்தியதற்காகவே அவர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் கடந்த ஜூன் மாதம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவு பிறப்பித்தது. (ஒ,5)

# சகலருடனும் பேசியே முடிவு இ.த.கவுக்கு வலியுறுத்துக

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

வவுனியா, ஒக். 2

அரசதலைவர் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தனித்து முடிவெடுக்காது, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடித் தீர்மானத்துக்கு வரவேண்டும். இதற்கு மதத் தலைவர்களும், துறைசார்ந்த நிபுணர்களும், பொது அமைப்புக்களும் அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலரும் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தன்னிச்சையாக முடிவு எடுக்கக்கூடாது. தமிழ்த் தேசிய இனத்தின் நலன்சார்ந்து சிந்திக்கும் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி பொதுமுடிவு எடுக்க முன்வர வேண்டும். தமிழ் தரப்பினர் அனைவரும் கூடி எடுக்கும் முடிவை அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகளுக்கும் தெரியப்படுத்தி அவர்களின் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சிக்க வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (த-110)

### தாக்குதல், உந்துருளி எரிப்புப் பற்றி

# கோப்பாய் பொலிஸார் விசாரிக்கப் பின்னடிப்பு

## வீட்டைவிட்டு வெளியேறியோர் இரு இடங்களில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ்ப்பாணம், கொக்குவிலில் வீடு புகுந்து தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும், உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றுகூறி பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் நேற்றுமுன்தின் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் முறைப்பாட்டில் கோரியுள்ளனர்.

கொக்குவில் கிழக்கில் பட்டப்பகலில் வீடு புகுந்த இளைஞரொருவர் வீட்டிலிருந்த வயோதிப தாய் மற்றும் தந்தை ஆகியோரைத் தாக்கியுள்ளார். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்தபோதும் விசாரணை நடக்கவில்லை. அந்த வீட்டின் மகன் மற்றும் மகள் வேலைக்குச் சென்றுவருகின்றனர். அங்கிருந்த உந்துருளியும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பொலிஸார் உரி நடவடிக்கை எடுக்கவில்லையென்பதால், அங்கு வசிக்க அச்சம் காரணமாக அவர்கள் வேறு இடத்துக்குச் சென்று தங்கியுள்ளனர். தாக்குதல் சம்பவத்துக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதியைப் பெற்றுத் தருவதுடன் மீண்டும் தமது சொந்த வீட்டுக்குச் செல்வதற்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிலும் கோப்பாய் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர். தாக்குதல் சம்பவம் தொடர்பான மறைகாணி ஒன்றையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். (த-ரி1)



# சஜினுக்கு எதிரான வழக்கு தினந்தோறும் விசாரணை

கொழும்பு, ஒக். 2

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்தனவுக்கு எதிராக நிதி தூய் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி தொடக்கம் நாளாந்தம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 30 கோடியே 62 இலட்சத்துக்கும் அதிக நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை, நிதி தூய்தாக்கல் சட்டத்தின் கீழ் குற்றமிழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, சஜின் டி வாஸ் குணவர்தனவுக்கு எதிராக சட்டமா அதிபரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் சாட்சியாளர்கள் ஐவரையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்தல் பிறப்பித்துள்ளது. (ஒ,5)

# கோத்தாவின் வழக்கை விசாரிக்க ஒக். 14வரை இடைக்காலத் தடை

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக கொழும்பு சிறப்பு நீதாய நீதிமன்றில் இடம்பெறும் வழக்கு விசாரணையை நிறுத்த பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி வரை நீடிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்சவால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்றுச் செவ்வாய்க்கிழமை எல்.டீ.பீ.தெஹிதெனிய தலைமையில் எஸ்.துரைராஜா மற்றும் காமினி அமரசேகர ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன் விசாரணைக்கு வந்தது.

இதன்போது மனுவை பரிசீலித்த நீதியரசர்கள் குழாம் மனு விசாரணையை ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி வரை ஒத்திவைத்தனர். அத்தோடு கொழும்பு சிறப்பு நீதாய நீதிமன்றில் இடம்பெறும் வழக்கு விசாரணையை நிறுத்த பிறப்பிக் கப்பட்ட தடை உத்தரவை ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி வரையில் நீடிக்க நீதியரசர்கள் தீர்மானித்துள்ளனர்.

டீ.ஏ.ராஜபக்ச நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு 33.9 மில்லியன் ரூபாய் அரச நிதியைப் பயன்படுத்தியதாக கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 7 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு நிரந்தர நீதாய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு நிரந்தர நீதாய நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்து கோத்தபாய ராஜபக்சவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனு அந்த நீதி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு நிராகரிக்கப்பட்டமை சட்ட விரோதமானது என்று தெரிவித்து கோத்தபாய ராஜபக்சவால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கோத்தபாய ராஜபக்சவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை தங்களுக்கு விசாரணை செய்ய அதிகாரம் இல்லை என்று தெரிவித்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் மனுவை விசாரணைக்கு எடுக்காமல் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
@UthayanPrint
புதன் பொய்கை
ஒக்ரோபர் 02, 2019

இராமநாதபுரத்தூர் நிஷாந்தன்

# பண்பாட்டுப் பெருவிழா கிளிநொச்சியில் எழுச்சி

கலை, பண்பாட்டு அம்சங்கள் இழை யோடுகின்ற கிளிநொச்சி நகரில் மாபெரும் பண்பாட்டுப் பெருவிழா அரங்கேறியுள்ளது. கரைச்சிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி நகரின் மத்தியில் அதாவது டிப்போ சந்திக்கு அருகில் அமைந்துள்ள பசுமைப் பூங்கா வளாகத்தில் இந்த நிகழ்வு பேரெழுச்சியுடன் இடம்பெற்றது. குறிப்பாக போருக்குப் பின்னர் கிளிநொச்சி மண்ணில் நடைபெற்ற ஓர் அருமையான கலை, பண்பாட்டு அம்சங்கள் நிறைந்த பெரு விழாவாக இந்தப் பண்பாட்டுப் பெருவிழா பதிவாகியிருக்கின்றது என்றால் மிகையில்லை.



**ஊர்வலப் பவனி**

பண்பாட்டு விழாவில் ஆரம்ப நிகழ்வாகப் பாரம்பரிய பண்பாட்டம்சங்கள் நிறைந்த பண்பாட்டு ஊர்வலம் அரங்கேறியது. நிகழ்வின் அதிதிகளை வரவேற்று வரும் வகையில் இத்தகு பண்பாட்டுப் பவனி இடம்பெற்றிருந்தது. கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலய முன்றிலில் இருந்து இந்தப் பண்பாட்டுப் பவனி ஆரம்பமாகியது. மங்கல வாத்திய இசை மற்றும் பாரம்பரிய பறை இசை முழங்கிட எம் தமிழ் இனத்தின் அடையாளங்களான காவடி, கரகம், நாட்டியம், பொம்மலாட்டம், மயிலாட்டம், பொய்கால் குதிரையாட்டம், சிலம்பாட்டம் என்பவற்றோடு எம் தமிழரின் வீரத்தைப் பறைசாற்றும் தமிழ் மன்னர்களின் வேட ஒப்பனையுடன் கூடிய பவனி என்பனவும் முதன்மை வீதி வழியே அணி சேர்த்திருந்ததுடன் பார்ப்பவர் மனங்களைக் கொள்ளை கொண்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**அரங்கிலே ஆற்றுகையான நிகழ்வுகளின் வரிசை**

கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான சிறப்பு மேடையிலே பல்வேறு கலை நிகழ்வுகள் அரங்கேறின. அந்த வகையில் மங்கல விளக்கேற்றல் நிகழ்வுடன் விழா இனிதே ஆரம்பமாகி மங்கல வாத்திய மற்றும் பறை இசை, தமிழ்மொழி வாழ்த்து, வரவேற்புரை, வரவேற்பு நடனம், ஆசியுரை, தலைமையுரை முதலிய ஆரம்பக் கட்ட நிகழ்வுகளைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் அரங்கேறின. அந்த வகையில் 'மருதக்கிளி' எனும் பண்பாட்டு நூல் வெளியீடு, சிறப்புக் கவியரங்கம், நடனங்கள், வாளாட்ட ஆற்றுகை, வழக்காடு மன்றம், நாடக ஆற்றுகை, இசைச்சங்கமம் என அத்தனை நிகழ்வுகளும் பார்ப்பவர் கண்களுக்கு விருந்தளித்ததுடன் ஈழத்தில் கலை மரபு வீழ்ந்து விடாமல் அதற்கு உயிர் கொடுத்திருந்தது என்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

குறிப்பாக, இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவிலே அரங்கேறிய வழக்காடு மன்றம் 'குற்றவாளிக் கூண்டில் இன்றைய பெற்றோர்' எனும் தலைப்பில் இடம்பெற்றிருந்தது. இந்த வழக்காடு மன்றம் பார்வையாளர் அனைவரது கவனத்தையும் பெரிதும் பெற்றிருந்தது எனலாம். அதுபோல 'மண்வாசம்' எனும் தலைப்பில் இடம்பெற்ற கவியரங்கமும் எல்லோர் மனங்களிலும் நிறைந்திருந்தது. மேலும் திறந்த வெளி அரங்கில் இடம்பெற்ற நாடக ஆற்றுகை அனைவருக்கும் களிப்பைக் கொடுத்தது. அத்தோடு நிகழ்வின் இறுதியில் இடம்பெற்ற அமுதகானங்கள் இசை நிகழ்வும் அனைவர் மனங்களிலும் மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது எனலாம்.

> இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவிலே அரங்கேறிய வழக்காடு மன்றம் குற்றவாளிக் கூண்டில் இன்றைய பெற்றோர் எனும் தலைப்பில் இடம்பெற்றிருந்தது. இந்த வழக்காடு மன்றம் பார்வையாளர் அனைவரது கவனத்தையும் பெரிதும் பெற்றிருந்தது எனலாம். அதுபோல மண் வாசம் எனும் தலைப்பில் இடம்பெற்ற கவியரங்கமும் எல்லோர் மனங்களிலும் நிறைந்திருந்தது.

**மருதக் கிளி நூல் வெளியீடு**

பண்பாட்டுப் பெருவிழாவில் மண்வாசனை வீசுகின்ற 'மருதக் கிளி' எனும் ஓர் ஆவணப் படைப்பாக்க நூல் வெளியீடு செய்யப்பட்டது. மருதவளம் கொண்ட கிளிநொச்சி மண்ணின் பெருமை தாங்கியதாக ஈழத்தின் இலக்கியப் படைப்பாளர்களின் பல்வேறுபட்ட ஆக்கங்களை தன்னகத்தே சுமந்து அழகிய நூலாக்கமான இந்த மருதக்கிளி எனும் நூல் எல்லோர் கைகளிலும் தவழ்ந்து கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

**உயர் விருது**

பண்பாடிய பண்பாட்டு விழாவில் பதிவாகியிருந்த சிறப்பு நிகழ்வாக அதி உயர் விருது வழங்கல் செயற்பாட்டைக் குறிப்பிடலாம். ஈழத்தில் பல்வேறுபட்ட துறைகள் சார்ந்து தியாகத்துடனும், கண்ணியத்துடனும், பொறுப்புடனும் தமது சேவைகளை ஆற்றிக் கொண்டிருக்கின்ற கலைஞர்கள், கல்விமான்கள், பெரியோர்கள் எனத் தேர்ந்தெடுத்தவர்களுக்கான அதி உயர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. அந்த வகையில் ஆன்மிகத்துறை, ஊடகத்துறை, விவசாயம், கலை இலக்கியம்,






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









பழந்தமிழ் இலக்கியம், விளையாட்டுத் துறை, மருத்துவத்துறை, நாட்டுப்பற்றாளர், தமிழ் மொழித்துறை, சிறந்த தலைமைத்துவம், இசைத்துறை, நிர்வாகத்துறை, உள்ளூராட்சிச் சேவை எனவாறு பல்வேறுபட்ட துறைகள் சார்ந்து தமது சேவைகளை பல காலமாக அர்ப்பணிப்புடன் ஆற்றிக் கொண்டிருக்கின்றவர்களுக்கு இந்த அதி உயர் விருது வழங்கல் மதிப்பளிப்பு நிகழ்வு மேடையிலே அரங்கேறியது.



**அதிதிகளாக கலந்தோர்**

இந்தப் பண்பாட்டு விழாவுக்கு கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமை தாங்கிட, முதன்மை அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டார், மேலும் சிறப்பு அதிதிகளாக, கிளிநொச்சி-மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம், உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் மற்றும் கிளிநொச்சி சட்டத்தரணி விஜயராணி சதீஸ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் மதிப்புறு அதிதிகளாக, கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன், கண்டாவளைப் பிரதேச செயலர் த.பிருந்தா கரன், கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் த.பிரபாகரன், பூநகரி பிரதேச சபை தவிசாளர் த.ஐயம்பிள்ளை, பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன், பூநகரிப் பிரதேச சபை செயலர் க.கம்சநாதன், கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனை மருத்துவர் மா.குகராஜா, கிளிநொச்சி கமநலசேவைத் திணைக்கள ஆணையாளர் வே.ஆயகுலன், வடக்கு மாகாண மேனாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, வை.தவநாதன் ஆகியோருடன், மாவட்டச் செயலக கலாசார அலுவலர் அ.கார்த்திகேயன், கிளிநொச்சிப் பிரஜைகள் குழுத் தலைவர் கி.சின்னராசா, கிளிநொச்சிக் கல்வி வலய ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், மகாதேவ ஆச்சிரம தலைவர் பொன்.நித்தியானந்தம், கரைச்சிக் கோட்டக்கல்வி அலுவலர் அ.அமிர்தலிங்கம் எனப் பலரும் நிகழ்வில் அணி சேர்த்து நிகழ்வைச் சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



**மக்கள் நிறை அரங்கு**

போரின் பின்னர் கிளிநொச்சி மண்ணில் இடம்பெற்ற இந்தப் பண்பாட்டு விழாவில் தமிழ் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டிருந்ததைக் கண்ணுற முடிந்தது. தமிழ் மீது என்றும் பற்றுடையவர் தமிழர் என்பதை மீண்டுமொரு முறை நிரூபித்துள்ளனர் நம் மக்கள். கல்விமான்கள், கலைஞர்கள், சட்டத்தரணிகள், மருத்துவ அதிகாரிகள், மாணவர்கள், சமூக அலுவலர்கள், பொதுமக்கள் என அத்தனை பேரும் பண்பாட்டு உடைகளுடன் விழாவுக்கு வருகை தந்திருந்தமை மனதுக்கு இனிமை கொடுத்தது எனலாம். தமிழ்ப் பண்பாடு இன்னமும் உயிர்பெற்று வாழ்கின்றது என்பதை இந்தப் பண்பாட்டுப் பெருவிழா எடுத்தியம்பியிருக்கின்றது. இதுபோல மேலும் பல பண்பாட்டு விழாக்கள் எம் ஈழத்திருநாட்டில் நடைபெற வேண்டும். வளர்ந்து வரும் எமது இளம் சந்ததியினருக்கு எங்கள் கலை மற்றும் பண்பாட்டம்சங்களை கற்றுக் கொடுத்திடுவோம். எங்கள் கலையும், பண்பாடும், மொழியும், மதமும் என்றென்றும் யாருக்கும் அடிபணிந்திடாது இருந்திட தமிழர்களாகிய நாம் வழிவகை செய்திடல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழப் படைப்பாளிகளின் நூல்கள் கம்போடிய மாநாட்டில் வெளியீடு

■ குமுதன்

கம்போடியாவின் சியாம் ரீப் நகரில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகிய இரண்டு நாள் உலகக் கவிஞர்கள் மாநாட்டில் ஈழத்துப் படைப்பாளிகள் இருவரது புதிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எழுத்தாளரும் கவிஞருமாகிய வெற்றிச்செல்வியின் குப்பி என்ற சிறுகதை நூலும், ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகத்தின் 'வாழத்துடிக்கும் வன்னி' என்ற நூலுமே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன.

'குப்பி' சிறுகதை நூலை நூலாசிரியர் நிகழ்வில் கலந்து கொண்ட ஈழத்து கவிஞர்கள் படைப்பாளிகள் சார்பில் வெளியிட்டு வைக்க கம்போடிய அங்கோர் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் செயலர் ஆகியோர் நூலின்; பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

'வாழத் துடிக்கும் வன்னி' நூலை வவுனியாவைச் சேர்ந்த எழுத்தாளர் மேழிக்குமரன் அருந்தவராசா நிகழ்வில் கலந்துகொண்ட ஈழத்து கவிஞர்கள், படைப்பாளிகள் சார்பில் வெளியிட்டு வைக்க தமிழ்ச் சங்கத்தின் தலைவர், செயலர் ஆகியோர் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

போர்க்கால வாழ்க்கையைப் பற்றிய 30 சிறுகதைகளை 'குப்பி' சிறுகதைத் தொகுப்பு உள்ளடக்கி உள்ளது. 'வாழத் துடிக்கும் வன்னி' என்ற நூல் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று மறுவாழ்வுக்காகத் துடிக்கும் ஏக்கம் நிறைந்த வன்னி மக்களின் வாழ்க்கை பற்றிய பதிவாக வெளிவந்துள்ளது. 'குப்பி' மற்றும் 'வாழத் துடிக்கும் வன்னி' ஆகிய இரு நூல்களும் விரைவில் இலங்கையில் வெளியிடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.







# 'பிக்பொஸ்' எதிர் 'சுணைக்கேடு'

தேவநாயகம் தேவானந்த்



ஜேர்மனிய நாடகமான கிறீப்ஸ் இளையோரை மையப்படுத்தி எழுதப்பட்ட நாடகம். இதனை ஜேர்மன் மொழியில் எழுதியவர் லூட்ஸ் ஹப்னர் (2000). ஜேர்மன் மொழியல் இருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்தவர் வென் ஜி யொட்டிக் காடலஸ் (2003). ஆங்கில வடிவத்திலிருந்து அதனை தமிழுக்கு மொழிபெயர்த்தவர் குழந்தை ம.சண்முகலிங்கம் (2012). தமிழில் இதற்கு சுணைக்கேடு என்று தலைப்பிடப்பட்டது. இதனை செயல்திறன் அரங்க இயக்கம் தயாரித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 2012ஆம் ஆண்டில் மேடையேற்றியிருந்தது.

✦ ✦ ✦ ✦

மனிதர்களுக்கு சுரணை இருப்பதால்தான் அவர்கள் ஆறறிவு படைத்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஐம்புலன்களும் சீர்மையாக வேலைசெய்தால் கூர் உணர்வுத் திறன் கிடைக்கிறது. அதன் வழி சுரணையுள்ளவர்களாகிறோம். இந்த உணர்திறன் (சென்சிரிவிற்றி) இல்லாது போனால் எந்தப் பற்றுக்கோடும் இல்லாது எப்படியும் வாழ்ந்துவிட்டுப் போகலாம் என்ற நினைப்பு வந்திடும். அதனை சுரணைகெட்ட தன்மை என்று சொல்லலாம். இதனையே 'சுணைக்கேடு' அர்த்தப்படுத்துகிறது எனலாம்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அதில் ஈடுபடுபவர்களை சுரணையில்லாதவர்களாக ஆக்குவதன் மூலம் தமது பார்வையாளர்களை அதிகரித்துக் கொள்கிறார்கள். அல்லது தக்கவைத்துக் கொள்கிறார்கள். அதற்கு அண்மைய உதாரணம்தான் பிக்பொஸ் என்ற தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி. மனிதர்களை பரிசோதனைக்கூட எலிகள் போன்று உணவு போட்டு வீட்டில் அடைத்துவைத்து வேடிக்கை பார்ப்பதாகும். தாம் விரும்பியபடியெல்லாம் ஆட்டுவித்து சுணைக்கேட்டை ஏற்படுத்துகின்றார்கள். அதன்வழி தமது தொலைக் காட்சிப் பார்வையாளர்களை அதிகரித்துப் பிழைப்பு நடத்துகிறார்கள் எனலாம். கமல் ஹாசன் என்ற மூத்த மிகப்பிரபல்யமான நடிகன் தொகுத்து நடத்துகின்ற இந்த நிகழ்ச்சி அதில் பங்குபற்றிய பலரைத் தற்கொலை முயற்சிக்கு இட்டுச் சொன்றிருக்கிறது. இருந்தாலும் அதன் சீசன் 3 வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கிறது. தொடர்ந்து நடத்தத் தீர்மானிக்கிறார்கள். உலகின் பலமொழிகளில் பல கண்டங்களில் பரிசோதிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி தற்போது இந்திய துணைக்கண்டத்தில் 130 கோடி மக்களின் மீது பரிசோதிக்கப்படுகிறது. இதில் எட்டுக்கோடிக்குமேலே இருக்கின்ற தமிழர்கள் மீது இந்த பல்தேசிய தொலைக்காட்சிகளின் பார்வை விழுந்திருக்கிறது.

✦ ✦ ✦

பிக்பொஸ் நிகழ்ச்சி பிக்பிறதர் நிகழ்ச்சியின் இந்திய வடிவம். இது கமல் ஹாசன் சொல்வதுபோன்று, ஒரு மனோதத்துவத்தை புரிந்து கொள்வதற்கானதல்ல. மனித மனோதத்துவத்தை புரிந்துகொண்டு, அதனைப் பணமாக்கும் தத்துவம். இதில் உலகெங்கும் வாழும் ஈழத்தமிர்களிடம் பணம் பண்ணும் தத்துவம் நடந்து வருகின்றது. ஏமாறுபவர்கள் இருந்தால் ஏமாற்றப்படுபவர்களும் இருப்பார்கள். புலம்பெயர்ந்துவாழும் தமிழர்கள் இந்தியத் தொலைக்காட்சிகள் மற்றும் சினிமா மீது காட்டுகின்ற அளவுக்கதிகமான ஆர்வம் தான் இதற்குக் காரணம் எனலாம். இது கமல் ஈழத் தமிழர்களுக்காக தெனாலி திரைப்படத்தை தயாரித்து வியாபாரம் செய்ததோடு ஆரம்பமாகிறது எனலாம். தெனாலி திரைப்படம் ஈழத்தவர்களை அடிப்படையில் கொச்சைப்படுத்தியிருந்தது. தெனாலி போன்று புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தவர்களின் பணத்தை சூறையாடும் நோக்கம் கொண்டதுதான் பிக்பொஸ் நிகழ்ச்சியும். ஈழத்தவர்களுக்கு வாய்ப்பளிப்பதாகக் கூறி இரண்டு ஈழத்தவர்களை பரிசோதனைக்கூட எலிகளாக்கி பரிசோதித்து ஈழத்தவர்களை கொச்சைப் படுத்தப்படுகிறார்கள். பிக்பொஸ் வீட்டிலிருந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட தர்சனினன் வெளியேற்றத்தின் பின்னரான சமூகவலைத்தளப் புலம்பல் புலப்படுத்துகிறது.



தர்சன் என்கின்ற யாழ்ப்பாணத்து இளைஞர் லாஸ்லியா என்ற திருகோணமலையில் வசிக்கும் கிளிநொச்சப் பெண் இந்த இரு ஈழத்தவர்களை பரிசோதனைக்கூட எலிகளாக்கி பணம் ஈட்டும் கைங்கரியத்தை செய்வது மிகப்பெரிய பல்தேசிய ஊடக நிறுவனமான எண்டெமால் சைன் குறூப். இது இந்தியாவைத் தளமாகக் கொண்டு இயங்குகிறது. இதுவே பிக்பொஸ் நிகழ்ச்சியை இந்திய மொழிகளில் நடத்துகிறது. இந்த நிறுவனத்தில் உலகெங்கும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களில் மனோதத்துவ நிபுணர்கள் பலர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் பிக்பொஸ் வீட்டுக்குள் இருந்த 16 பேரைமட்டும் அல்ல.... பார்க்கின்ற அத்தனை கோடி மக்களையும் மனோதத்துவ ரீதியில் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்ற ஒரு உளவியல் அமைப்பாகப் பணியாற்றுகிறார்கள். ஆரம்பத்தில் இந்த வீட்டுக்குள் உள்வாங்கப்பட்டநபர்கள் அனைவரையும் அவர்களின் மனோநிலைகளை நன்கு கற்றுத் தெளிந்த பின்னரே நிகழ்ச்சிக்குள் இணைத்துள்ளனர். யாருக்கு யார் தேவை என்று பார்த்துப் பார்த்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இது வெறும் விளையாட்டல்ல. முழுக்க முழுக்க உணர்வுகளுடன் விளையாடும் விளையாட்டு.



எழுதப்படாத நாடக வரலாறு 22

✦ ✦ ✦ ✦

பங்குபற்றுனர்களுக்குத் தெரியாமல் அவர்களின் உடலில் சுரக்கக்கூடிய ஹோமோனின் அளவுகள் மாற்றப்படுவதற்குரிய உளவியல் நகர்வுகள் திரைமறைவில் மேற்கொள்ளப்படுகிறது. நிகழ்ச்சிக்குத் தேவைப்படும் உணர்ச்சிகளுக்காக அவர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. கண்ணுக்குப் புலனாகா ரிமோட் சிகிச்சைகள் மூலம் அவர்களிடையே நட்பு, காதல், கோபம், பழிஉணர்ச்சிகள் தூண்டப்படுகின்றன. தேவையான பொழுதுகளில் நட்புகள் பிரிக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தப்பட்டன. சில நட்புகள் காதலாக மலரச் செய்யப்பட்டன. சில மனக்கசப்புகள் கடும் பகைமைகளாக மாற்றப்பட்டன. சில பகைமைகள் தேவையில்லை என்று நினைக்கும்போது டாஸ்க் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதும், சில பகைமைகளைத் தூண்டிவிட டாஸ்கின் நேரம் அதிகரிக்கப்படுவதும், அடிபிடிக்கு இழுத்துவிட நினைக்கும் நபர்களை எதிரெதிர் அணிகளில் நிறுத்திவைப்பதும் கனகச்சிதமாக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளே. ஒரு பார்வையாளராக நான் யாரை விரும்பவேண்டும், யாரை வெறுக்க வேண்டும் என்பதுகூட அவர்களின் திட்டமிடப்பட்ட செயற்பாடு எனலாம். இந்த மொத்தத்தில் பல்தேசிய நிறுவனங்கள் தமிழர்களிடம் பணம் பிடுங்கும் நோக்கம் கருதிய நிகழ்ச்சி, இதில் கைதேர்ந்த கமலை கனகச்சிதமாகப் பயன்படுத்துகிறார்கள். இந்த அத்தனை விடயங்களையும் சுணைக்கேடு நாடகம் அடையாளப்படுத்தி அதன் பாதிப்பபை உணர்த்திச் சென்றிருக்கிறது. இது மூன்று பெண் பாத்திரங்களையும் ஒரு புறக்குரலையும் கொண்டு நகர்த்தப்படும் நாடகம். பெட்ரா (வயது-16) மரென் (வயது-17) லில்லி (வயது -17) இவர்கள் வெவ்வேறு சமூகப் பின்னணி களோடு ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக ஸ்ரூடியோ ஒன்றுக்குள் அடைக்கப்படுகிறார்கள். புறக்குரலின் கட்டளைகளுக்கமைய செயற்படுகிறார்கள். பிக்போஸ் குரல் போன்றதொரு குரல் அவர்களை வழிநடத்துகிறது. சுணைக்கேடு நாடக ஆரம்பத்தில் புறக்குரல் சொல்லுவது இங்கு கவனிக்கத்தக்கது.

✦ ✦ ✦ ✦

புறக்குரல்: கமரா முன்பக்கத்தில மேல இருக்கு அங்க பார்த்துத் தான் நீங்கள் கதைக்கவேணும். இது உங்கட நிகழ்ச்சி நாங்கள் வெறுமனே சுவிச்சுக்களை அமர்த்துவம் எல்லாம் உங்கட அலுவல்தான். எங்களுக்கு பெரிய எடுப்பான 'மொடல்' வகையள் தேவையில்லை எங்களுக்குத் தேவை நிஜவாழ்க்கை தங்கடை சொந்த ஸ்ரைலை பளிச்சென்று காட்டிறாக்கள், சொந்தமா நினைக்கத் தெரிஞ்சாக்கள் பிளாஸ்ரிக் கவர்ச்சியும் போலிப் புன்னகையும் நிறைஞ்ச விருந்துப் பகட்டும் வேண்டாம். எங்களுக்குத் தேவை ஆளுமையும் இருப்பும்தான். நாடகத்தின் ஆரம்பம் மூன்று பெண்களையும் புறக்குரல் சுய அறிமுகம் செய்யக் கேட்பதிலிருந்து தொடங்குகிறது.

அந்த அறிமுகத்தில் அவர்களைப்பற்றி அவர்களின் குடும்பம்பற்றி அவர்களை ஒளிவுமறைவில்லாது கூறுவதற்கு புறக்குரல் தூண்டுகிறது.

**புறக்குரல்** : ஓகேபேக்காட்டல் இனிக்காணும் இனிசீரியஸ்சா இருக்கும், முசுப்பாத்தி முடிஞ்சுது, உங்கள் எல்லாராலையும் ஆற்றுகைசெய்ய இயலுமா இருக்கு. இப்ப ஒரு ஆளுமைச் சுற்றுக்குப் போவம். பயம் வேண்டாம், அது எவரையும் காயப்படுத்தாது. நீங்கள் ஆர்? சும்மா தகவல், செய்திகள் அல்ல, எங்களுக்கு உண்மையான உரையாடல், கதைத்தல் வேணும், உண்மையான மனப்பாங்குகள், போக்குகள், உங்களுக்கு எப்பிடி இருக்கு எப்பிடி உணர்ரீங்கள் எனக்குச் சொல்லுங்கோ என்று சுணைக்கெடு நாடகத்தின் புறக்குரல் ஒலிக்கிறது. இதன் பின்னர் பெட்ராபாத்திரம் தன்னை அறிமுகம் செய்யும் போதுதான் ஒரு அழகிப்போட்டியில் வெற்றிபெற்றனான். பிஸ் பிக் அப்பிள் என்று குறிப்பிடுகிறார். இதனைக் கேட்ட புறக்குரல்,

**புறக்குரல்** : அதுநல்லா இருக்கும் போல தெரியுது. தொடருங்கோ என்று குறிப்பிடுகிறார்.

பெட்ரா: சொல்லுறதக்கு கனக்க ஒன்றுமில்லை, உண்மையில் நாங்கள் டான்ஸ் பண்ணினம். அப்படித்தான்

புறக்குரல் : அப்பிடிஅப்பிடித் தான் ...அங்கதான் திறமான கதைகள் இருக்கும். அந்த அப்பிடியில் குளியலாடையில பாலத்தின்ர நடைபாதையல அதைப்போல ஏதுமோ, அல்லது திரும்ப இயற்கை நிலைக்குப் போனது போல, உண்மையான இயற்கைநிலை அடியத்திவார நிலை, குமிழிக்குளியல் கொண்டாட்டம்.

**பெட்ரா:** இங்க அப்படி ஒண்டும் நடக்கவேயில்லை.

**புறக்குரல்** : ஓகே, சும்மாபகிடிக்குத் தான் இப்பிடிப்பட்ட சம்பவங்களை நான் கிண்டிப்பார்க்கிறனான் என்று அந்த உரையாடல் நீள்கிறது. வாழ்க்கையில் நாகரிகமானதாக கருதிய விடயங்களை இப்படியானவற்றை பங்குகொள்பவர்களிடமிருந்து கிண்டியெடுப்பதையே சுணைக்கேடு நாடகத்தில் அந்த புறக்குரல் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனையே பிக்பொஸ் குரலும் செய்கிறது எனலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லண்டனில் சிறப்புற்ற அரங்கேற்றம்

லண்டனில் வசிக்கும் சிவகுமாரன் சிவானுஜன், சிவகுமாரன் வராகி ஆகியோரது இசை அரங்கேற்ற நிகழ்வு கடந்த சனிக்கிழமை லண்டனில் உள்ள வோட்டர்ஸ்மீற் கலையரங்கத்தில் சிறப்புற இடம்பெற்றது.

சிவானுஜன் மிருதங்கம், வீணை ஆகிய இசை அரங்கேற்றங்களையும் வராகி வாய்ப்பாட்டு, புல்லாங்குழல் ஆகிய இசை அரங்கேற்றங்களையும் மேற்கொண்டிருந்தனர். தாயாரான இசையாசிரியர் ராஜினி சிவகுமாரன் குருவாக இருந்து இவர்களது அரங்கப்பிரவேசத்துக்கு வழிகாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமாதான நீதிவான்கள்



இளவாலை வாழ்வகத்தைச் சேர்ந்த அன்ரனி குழந்தையேசு கிறிஸ்டோபர் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் அண்மையில் தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாக பதவியேற்றார்.

தலவாக்கலை நுகிறேட் வெஸ்டன் தமிழ் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியை பயின்ற இவர், புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்கல்வியைப் பயின்றார். தலவாக்கலையை பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், வாழ்வக நலன்புரி ஒன்றியம் மற்றும் இளவாலை வடமேற்கு கிராம சக்தி அமைப்பின் வாழ்வாதார குழுவின் தலைவராகவும் செயற்படும் அதேவேளை, இளவாலை புனித வளனார் முன்பள்ளியின் முன்னாள் தலைவருமாவார்.




விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரும், நிர்வாகசபை உறுப்பினருமாகிய சின்னதம்பி நிறைஞ்சன் சமாதான நீதிவானாக பதவியேற்றார்.

மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி பிரேம்சங்கர் முன்னிலையில் அண்மையில் அவர் பதவியேற்றார். (21)

## கிழக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா









கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் நடைபெறும் தமிழ் இலக்கிய விழா வின் இவ்வருடத்துக்கான நிகழ்வுகள் மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்றன.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவண முத்து நவநீதன் தலைமையில் விழா இடம்பெற்றது.

# பச்சிலைப்பள்ளி செயலகத்தில் கலைஞர்கள் மதிப்பளிப்பு





பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிலுள்ள பாரம்பரிய கலைஞர்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஏற்பாட்டில் மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

தமிழர்களுடைய பாரம்பரிய கலை, பண்பாட்டு விழுமியங்கள் அழிவடைந்து செல்கின்ற தற்காலகட்டத்தில் அந்தக் கலைகளை பாதுகாக்கின்ற கலைஞர்கள் போற்றப்பட வேண்டியவர்கள் மதிப்பளிக்க படவேண்டியவர்கள் என்கின்ற எண்ணப்பாட்டில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் குறித்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனின் தலைமையில் இயக்கச்சி முள்ளிப்பற்று உப அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோருடன் முன்னாள் வடக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிறைஞ்சன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரபாகரன், கரைச்சி, பூநகரி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பொது அமைப்பினர் ஏனைய கிராம மட்ட அமைப்பினர் பல்துறை ஆற்றல்சார் கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுதந்து மனிதராக்கும் அறிவாலயத்தில் அற்புதமான கண்காட்சி

கே.எஸ்.சிவஞானராஜா

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" எனும் தாரக மந்திரம் பாடசாலையில் மகுடவாசகமாகிறது. மாதா பராசக்தி ஆனவள் அல்லைப்பிட்டியில்வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஒரு பாடசாலையே அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயமாகும். இயற்கை வனப்பு எம்மை வசீகரிக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏழு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்து அறிவுதந்து எமை மனிதராக்கும் பீடமாக அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் தன் ஆற்றலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஊடாக வியாபிக்கத் தவமிருக்கும் கோலத்தில் அன்னை பராசக்தி வாசலில் கொலு இருக்கின்றாள். அருள் பாலிக்கும் அழகொழுகு சிற்பத்தை பெரியார் மாணிக்கம் தர்மலிங்கம் நினைவாக அவரது பாசமகன் தயாபரமூர்த்தியால் உபகாரம் செய்யப்பட்டுள்ளது. எனது வணக்கத்தை ஏற்றுக் கொண்டாள் அன்னை சரஸ்வதி. அப்பால் நான் தொடர்ந்தேன். நாடும் பொருட்சுவை சொற்சுவை மிளிர, காலம் கருதிய கல்வி தோய்தர நாற்கவியும் ஓங்கி ஒலிக்க மாணவர்கள் பாடும் பணியில் பணித்து அருளும்படியாக அல்லைப்பிட்டி கவியோகியார் ஆறுமுகமால் இயற்றி அருளப்பட்ட பாடசாலைக் கீதத்தை அதிபர் கோ.பத்மநாதன் மிகவும் பயபக்தியாக என்னிடம் கையளித்தார். அற்புதமான பொக்கிசம். கீதம் படித்தேன். பாடினேன். பரவசமானேன்.

அல்லையூரெம் பராசக்தி கல்விக்கூடம் வாழ்க நீ. அறிவு தந்து எமை மனிதராக்கும் பீடம் வாழ்க நீ. கம்பரவ்வை பாரதி போல் கவிஞரை உன் கருவிலே நன்கு ஒருவாக்கியுந்தன் நாமமென்றும் வாழச் செய். வள்ளுவர் போல் சங்கரர் போல் பெரியாரண்ணா போலொரு நல்லறிஞர் தன்னையெங்கள் நாட்டுக்கு நீ தந்திடு! அறிவுக் கண்ணைத் திறந்தெமக்கு அகிலப் பார்வை அறிவித்திடும் அம்பிகையின் பேரைக் கொண்ட தெய்வக் கோயில் வாழ்க நீ! கண்களாக சைவம் தமிழ் இரண்டையுமே காப்பதும் காலத்துக்கு ஏற்ற கல்வி ஒழுக்கம் கற்றுத் தருவதும் அல்லையூரெம் பராசக்தி அறிவாலயம் ஆன நீ எல்லையில்லாக் காலம் வாழ்ந்து எமக்குப் பணி ஆற்றுக! எங்கள் பள்ளி வாழ்கவென்று இனிய கீதம் பாடுவோம். எம்முயிருக்கு உயிர் இதென்று இதயம் பூரித்தாடுவோம்.

அல்லையூர் பண்டிதரின் முதுசொமாக அவரது ஆக்கங்கள் இந்தப் பாடசாலை சமூகத்தால் வெளிக்கொணரப்பட வேண்டும். முக்கியமாக இவரது படம் பாடசாலையில் மாட்டப்பட வேண்டும். எந்தவொரு பாடசாலையிலும் இது கவனிக்கப்படுவதில்லை.

**கண்காட்சி**

ஊடங்களில் வெளிப்படுத்தப்பட்டவாறு விஞ்ஞான விவசாய தொழில்நுட்பக் கண்காட்சி கடந்த 25ஆம் திகதி புதன்கிழமை கல்லூரியின் அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் முதன்மை விருந்தினர் அல்லைப்பிட்டி இயற்கை வழி விவசாய வழித்துநர் ம.கிரிஷனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ம.கிரிஷன் இயற்கை வழி விவசாய விழிப்புணர்வை இலங்கையில் கொழும்பு வரை ஏற்படுத்தி வருகின்றார். விஞ்ஞான, விவசாயத் தொழில்நுட்ப கட்புல, செவிப்புல, தெட்டதென விளங்கும் ஆய்வுகூடப் பரிசோதனைகள். அதனை விளக்கமளிக்கும் ஆளுமையான மாணவர்கள். நெறிப்படுத்தும் ஆசிரியர்கள், பொறுப்பான அதிபர் என்றவாறு பூரண ஒத்துழைப்புடன் மேற்படி கண்காட்சியானது வெற்றி கண்டுள்ளது. சிறப்பாக விஞ்ஞான ஆய்வுகூடத்தை முழுமையாகப் பயன்படுத்தியுள்ளனர். எலுமிச்சைப் பழத்திலிருந்து மின்சார உற்பத்தி தரம் ஏழு மாணவன் பு.தனுஜன் விளக்கமளித்தமை எம்மைக் கவர்ந்தது.

> "அறிவுக் கண்ணைத் திறந்தெமக்கு அகிலப் பார்வை அறிவித்திடும் அம்பிகையின் பேரைக் கொண்ட தெய்வக் கோயில் வாழ்க நீ! கண்களாகச் சைவம் தமிழ் இரண்டையுமே காப்பதும் காலத்துக்கு ஏற்ற கல்வி ஒழுக்கம் கற்றுத் தருவதும் அல்லையூரெம் பராசக்தி அறிவாலயம் ஆன நீ எல்லையில்லாக் காலம் வாழ்ந்து எமக்குப் பணி ஆற்றுக!

டாக்டர் அப்துல் கலாம் சிந்தனைகளுக்கு இடமளித்திருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். ஒளித்தொகுப்பு, காந்தப் புலங்கள், மனிதஉடல், விலங்கு, தாவரக் கலங்கள், வளிமண்டலம், கோள்களின் நகர்வுகள், அளவுமானிகள், அளவீட்டுக் கருவிகள் மற்றும் பொலித்தீன் பாவனையை ஒழிக்கும் தடுப்பு நடவடிக்கை, திண்மக் கழிவகற்றல், பயிர்ச் செய்கையும் இயற்கை உரப்பாவனையும், திரவப் பசளை பயன்பாடு நீர்வடிகட்டி, பூச்சி கொல்லி இயற்கைத் தயாரிப்புக்கள், வெள்ளைப்பூண்டுச்சாறு, புகையிலைச் சாறு, சவர்க்கார மண்ணெண்ணெய்க் கலவை, வேப்பஞ்சாறு ஆகியவை கண்களை வசீகரித்தன. கழிவுப் பொலித்தீன் மீள்பாவனையில் ஆரோக்கியமான தளபாடங்கள் எமக்கு முன்னுதாரணமாகின. ஆனந்தமளித்தன.

இருக்கைகள், மேசைகள், அழகுசாதன மேடைகள், தாங்கிகள், புத்தக எந்தாணங்கள் எனப் புதிய கண்டுபிடிப்புக்கள் மிக நன்று. றொகானி, எழிலரசி, சாருஜன், ஜெயதர்சா, எசிந்தாதேவி, சலோமி பிரியதர்சினி, தேனுஜா, சானுஜா, ஜீவேந்திரன், செலா, லத்திகா, யூலிபா, தானுஜன், வினுஜா, மோகனதாஸ் ஆகியோரும் ஏனைய மாணவ படைப்பாளிகளும் பொறுப்பாசிரியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களேயாவர். மேலும் நம் மாதா பராசக்தி வையமெல்லாம் இந்தப் பாடசாலையை வெல்ல வைப்பாள் என்பதை இந்தக் கண்காட்சியை கோடிட்டு வரந்தருகிறது. வெல்க!

# சிறப்பாக இடம்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் புனித சூசையப்பர் வாசாப்பு நிகழ்வு

மன்னார் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தாழ்வுபாடு 'புனித சூசையப்பர் வாசாப்பு' நிகழ்வு தாழ்வுபாடு பங்குத்தந்தை பிலிப்புப்பிள்ளை ஜேசுராஜா ஏற்பாட்டில் அண்ணாவியார் கிறிஸ்ரியன் டயஸ் தலைமையில் புனித வளனார் பாடசாலை மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது.

சுமார் 100 வருடங்களுக்கு முற்பட்ட தென்மோடி கூத்து தாழ்வுபாட்டு பங்கு மக்களால் நடத்தப்படும் குறித்த வாசாப்பு நிகழ்வானது கடந்த 4 வருடங்களின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அன்ரனி விக்டர் சோசை அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் பிரதேச செயலர் கனகாம்பிகை சிவசம்பு, மன்னார் பிரதேச சபை தவிசாளர் என்.முஜாஹிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.














Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போரிஸ் ஜோன்சன் மீது பாலியல் முறைப்பாடு!

லண்டன்,ஒக்.2
பிரிட்டனின் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன் மீது பெண் பத்திரிகையாளர் ஒருவர் பாலியல் குற்றச்சாட்டைச் சுமத்தினார். அண்மையில் போரிஸ் ஜோன்சன் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்த நிலையில் தற்போது இந்தப் பாலியல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் பிரபல பத்திரிகையில் பணியாற்றி வரும் சார்லோட் எட்வர்ட்ஸ் என்ற பெண்ணே போரிஸ் ஜோன்சன் மீது இந்தக் குற்றத்தைச் சுமத்தியிருக்கிறார். 1999ஆம் ஆண்டில் போரிஸ் ஜோன்சன், குறித்த பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றியபோது தன்னிடம் தவறாக நடந்து கொண்டதாக சார்லோட் எட்வர்ட்ஸ் தெரிவிக்கிறார். இந்தக் குற்றச்சாட்டைப் போரிஸ் ஜோன்சன் மறுத்துள்ளார்.

இது 'கேவலமான பொய்' என்று அவர் குறிப்பிட்டார். 'பிரெக்சிட்' விவகாரத்தில் போரிஸ் ஜோன்சனின் பதவி தப்புமா? என்ற கேள்வி எழுந்திருக்கும் நிலையில், அவர் மீது அடுத்தடுத்து ஊழல் மற்றும் பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# அமெரிக்க இராணுவ முகாம் மீது சோமாலியாவில் பெரும் தாக்குதல்

## அல்ஷபாப் ஆயுதக் குழு அதிரடி!

மெகாடிசு,ஒக்.2
சோமாலியாவில் அமெரிக்க இராணுவத்தினர் அமைத்துள்ள முகாம் மீது அல்ஷபாப் ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தினர். குறித்த பயிற்சி முகாம் மீதான இந்தத் தாக்குதலில் அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் சாவுகளின் எண்ணிக்கை குறித்த எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை.





இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
சோமாலியாவின் பாலிடோங்லே நகரில் அமைந்துள்ள குறித்த அமெரிக்க முகாம் மீது ஆயுததாரிகள் பயங்கர குண்டுத் தாக்குதலை நடத்தினர். அதன் பின்னர் அந்தப் பகுதியில் பயங்கர துப்பாக்கிச் சூடு நடந்தது. இதில் அமெரிக்க இராணுவ முகாம் பலத்த சேதம் அடைந்தது. இந்த தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ள அல்ஷபாப் ஆயுதக்குழுவின் தரப்பினர் வெளியிட்டுள்ள அறிக்கையில், குறித்த இராணுவ முகாமின் கதவுகளை மகிழுந்து வெடிகுண்டு மூலம் மோதித் தகர்த்ததாகவும், அதன் பின்னர் தமது போராளிகளை முகாமுக்கு உள்ளே அனுப்பித் தாக்குதல் தொடுத்ததாகவும் தெரிவித்தது.

அதிக பாதுகாப்புடைய குறித்த இராணுவ முகாமுக்குள்ளே தடைகளைத் தகர்த்து எமது போராளிகள் நுழைந்தனர். மிகக் கடுமையான துப்பாக்கிச் சண்டையில் அவர்கள் ஈடுபட்டனர் என்று அல்ஷபாப் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சோமாலியா தலைநகரான மொகாடிசுவின் மேற்குப் பகுதியில் 100 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்த இராணுவ முகாம், அமெரிக்கச் சிறப்புப் படைகள், சோமாலியப் படையினர் மற்றும் உகாண்டா அமைதிப்படையினர் ஆகியோரின் தளமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பனிப் பாறைகள் பிளவடைவது அந்தாட்டிக்காவில் அதிகரிக்கிறது




பூமியின் தென் துருவப்பகுதியின் பனிபடர் பிரதேசமான அந்தாட்டிக்காவில் உள்ள பனிப்பாறைகள் பிளப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்போது பிளவுபட்டுள்ள ஒரு பனிப்பாறையின், அளவு ஆயிரத்து 636 சதுர கிலோ மீற்றர்களாக இருகப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிளவுபடுகின்ற இந்தப் பனிப்பாறைகளால் எதிர்காலத்தில் கப்பல் போக்குவரத்துக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அவை கண்காணிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்துக்கும் இந்தப் பனிப்பாறைகள் பிளவடைவதற்கும் தொடர்பு இல்லை என்றும் பனியடுக்கின் மேற்பகுதிகளில் அடுத்தடுத்து பனிப்பொழிவு ஏற்பட்டு அதன் அளவு பெருகும்போது அதன் கீழ்ப் பகுதியில் உள்ள பாறை பிரிகின்றது என்றும் இது குறித்துத் தெரிவிக்கிறார் பெருங்கடல் சார்ந்த ஆய்வு நிறுவனம் ஒன்றின் ஆய்வாளராகவுள்ள வ்பிரிக்கர்.

# சீனாவின் தேசிய தினத்தன்று ஹொங்கொங்கில் போராட்டம்

ஹொங்கொங்,ஒக்.2
சீனாவின் போராட்டத் தலைவர் மாஓ சேதுங் தலைமையில் நடந்த கொம்யூனிஸ்ட் புரட்சியின் முடிவில் 'சீன மக்கள் குடியரசு' தோற்றுவிக்கப்பட்டது. அதன் 70ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று (ஒக்ரோபர் 1) சீனாவில்; கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இந்தக் கொண்டாட்டங்கள் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் நடைபெறுவதற்காகச் சீனா முழுதும் பல வாரங்களாகப் பாதுகாப்பை பலப்படுத்தி, இணையத்தளத்தில் கண்காணிப்பை அதிகப்படுத்தியுள்ளது சீன அரசு. ஆனால், சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் நேற்றைய தினம் போராட்டங்கள் எழுச்சி பெறுறன. போராட்டக்காராகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். எனினும் கறுப்பு உடை அணிந்த போராட்டக்காரர்கள் பெரும் திரளாகக் கையில் கறுப்புக் குடையுடன், சீனாவுக்கு எதிராகப் பதாகைகளுடன் பேரணியாகச் சென்று சீனத் தேசிய தினத்தன்றில் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.


# கவிழ்ந்தது பஸ் 13 பேர் சாவு!

## தாய்லாந்தில் சோகம்

பாங்கொக்,ஒக்.2
தாய்லாந்தில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பேருந்து ஒன்று கவிழ்ந்ததால் பாடசாலை மாணவர்கள் 13 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகச் சாவடைந்தனர். தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் உள்ள தனியார் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களே இதன்போது சாவடைந்தனர்.

அதிவேகத்தில் சென்றுகொண்டிருந்த பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்ததாலேயே வீதியில் கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில் மாணவர்கள் 13 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகச் சாவடைந்தனர்.

5 பேர் பலத்த காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்...

இந்த மனு 3 நீதிபதிகள் கொண்ட குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சந்திரகுப்தா தெனுவர மற்றும் காமினி விஜயங்கொட ஆகியோரே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலரான கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்வதாகக் கூறி இந்த நாட்டுக் கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுள்ளார் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறையான குடியுரிமைச் சான்றிதழைச் சமர்ப்பிக்காமல் இந்தக் கடவுச்சீட்டை அவர் பெற்றுள்ளார் என்று தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது எனத் தெரிவித்துள்ள மனுதாரர்கள், அந்தக் கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை என்பன சட்டத்துக்கு முரணான விதத்தில் வழங்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அதனால் கோத்தபாய ராஜபக்சவுக்கு கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்குவதைத் தடுக்கும் விதமான உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும் என்றும், இந்த மனு மீதான விசாரணை முடியும் வரையில் அந்தக் கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்துவதைத் தடுத்து இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீர்ப்பு எவ்வாறு வரும் என்று தெரியாத நிலையில் மகிந்த அணியினர் பெரும் குழப்பம் அடைந்துள்ளனர் என்று தெரிய வருகின்றது. வழக்கின் தீர்ப்பு பாதகமாக அமைந்தால் தினேஸ் குணவர்த்தனவை அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்க மகிந்த ராஜபக்ச திட்டமிட்டுள் ளார் என்று அறிய முடிகின்றது.

சமல் ராஜபக்சவின் மகன் சசீந்ரவுக்கு ராஜ யோகம் ஒன்று உள்ளது என்று நம்பும் மகிந்த ராஜபக்ச, சமலை அரச தலைவர் வேட்பாளராகக் கொண்டு வந்தால் நாமலின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்று நினைக்கின்றாராம். மகிந்த ராஜபக்சவின் மனைவி சிரந்தி மேடைகளில் பேசக் கூடியவரல்ல. பசில் ராஜபக்சவும் அமெரிக்கக் குடியுரிமையைக் கொண்டிருந்தவர் என்பதால் மகிந்த ராஜபக்ச தினேஷ் குணவர்த்தனவைக் களத்தில் இறக்கத் திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதற்கிடையில் மைத்திரிபால சிறிசேனவும் வேட்பாளராகக் களமிறக்கும் திட்டத்தைக் கொண்டிருக்கின்றார் என்றும் ஆனால், மகிந்த தரப்பினர் அவர் வருவதை விரும்பவில்லை என்று தெரிய வருகின்றது.

வாசுதேவ நாணயக்கார கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரின் தினேஷ் குணவர்த்தனவுக்கு உள்ளதால், அவரைக் களமிறக்குவது சிறந்தது என்று மகிந்த சிந்திக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது. (எ-22)

## மைத்திரி...

என்று தெரிவிக்கப்பட்டபோதும் என்ன பேசப்பட்டன என்பது தொடர்பில் நேற்றிரவு தகவல் வெளியிடப்படவில்லை.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபீர் காசிம், கட்சியின் செயலர் அகில விராஜ் ஆகியோர் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையிலான கூட்டணியில் இதுவரை இணக்கம் எட்டப்படவில்லை. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தாமரை மொட்டுச் சின்னத்தில் போட்டியிட முடியாது என்பதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பிடிவாதமாக உள்ளார். அதனால் இரு கட்சிகளுக்கும் இடையிலான தேர்தல் கூட்டணி இழுபறி நிலையிலேயே உள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச, தேர்தல் கூட்டணி தொடர்பாகப் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதம் கிடைத்ததை உறுதிப்படுத்திய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தும் எண்ணம் இல்லை என்று கூறியிருந்தார்.

இந்தப் பின்னணியில் நேரடியாகக் களத்தில் இறங்கிய சஜித் பிரேமதாச நேற்று இரவு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (எ)

## வவுனியா...

சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது. பம்பைமடுவில் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ள இராணுவத்தினரே இந்தச் சோதனைச் சாவடியை அமைத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அந்த வீதியில் பயணிக்கும் அநேகமான வாகனங்கள் பதிவு செய்யப்பட்டபின்னரே பயணிக்க அனுமதிக்கப்படுகின்றன . அதனால் அந்தவீதி வழியாகப் பயணிக்கும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை தேசிய பாதுகாப்புத் தொடர்பான விடயமாதலால் ஒளிப்பதிவு எதனையும் மேற்கொள்ளவேண்டாம் என்று இராணுவத்தினர் தடை விதித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் முதல் வடக்கின் பல இடங்களில் வீதிச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு இராணுவத்தினர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் சந்தேகிக்கும் வாகனங்களை நிறுத்திச் சோதனை நடத்துகின்றனர். அத்துடன் வாகனங்களின் இலக்கங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

வடக்கிலும்- கிழக்கிலும் மட்டும் மேற்கொள்ளப்படும் இந்தச் சோதனை நடவடிக்கைகளால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. தமது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது என்று அவர்கள் விசனம் தெரிவித்தனர். (த-110)

## சஜித்துக்கே...

னால் சஜித் இலகுவான வெற்றியொன்றை பெறப் போகிறார்.

இவ்வாறு ராவய பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், மூத்த ஊடகவியலாளரும், அரசியல் ஆய்வாளருமான விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்காலத்தில் வரவுள்ள அரச தலைவருக்குத் தற்போதுள்ள அதிகாரம் கூட இருக்காது. பெயரளவில் ஒரு அரச தலைவர் மட்டுமே. அதை இன்னும் எவரும் விளங்கிக் கொள்ளவில்லை. அனைத்து அதிகாரங்களும் நாடாளுமன்றத்துக்கு இயற்கையாகவே சென்றுவிடும். ஆகக் குறைந்தது ஒரு அமைச்சைக் கூட அரச தலைவர் வைத்திருக்க முடியாது. 19ஆவது திருத்தச் சட்டத்தால் இதுவே நடந்துள்ளது. முன்னர் நாடாளுமன்றம் ஒரு அரச தலைவரைத் தெரிவு செய்தது. இப்போது மக்கள் தெரிவு செய்கின்றனர். அவருக்கு அதிகாரம் மிக மிகக் குறைவு.

இலங்கையின் பொருளாதாரம் மட்டுமல்ல சமூக வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ள தருணம் இது. மாற்றம் ஒன்று தேவையான நேரம். மாற்றுப் போட்டிகள் இருந்தாலும் சஜித் மற்றும் கோத்தபாய ஆகியோர் இடையில்தான் முதன்மைப் போட்டி உள்ளது. கரு அல்லது ரணில் போட்டியிட்டிருந்தால் கோத்தபாயவுக்கு வெற்றிக்கான வாய்ப்புக்கள் இருந்தன. சஜித் ஒரு பெரும் ஆள் இல்லாது போனாலும் தாழ்த்தப்பட்ட மற்றும் ஏழைகளின் நாயகனாக சஜித் மக்களால் பார்க்கப்படுகின்றார்.

இந்தத் தேர்தல் இந்தியாவில் காங்கிரஸுக்கும் மோடிக்கும் நடந்த தேர்தலை ஒத்தது. மோடி மிகவும் கீழ் மட்டத்தில் இருந்து வந்தவர். அவர் தமது பிரச்சினையைத் தீர்ப்பாரா? என்பது எல்லாம் மக்களின் எதிர்பார்ப்பல்ல. தங்களுடைய தரத்தில் ஒருவர் அரசனாகின்றான் என்பதே மக்களின் மகிழ்ச்சியாகின்றது. மோடியைத் தோற்கடிக்க அடிமட்டத்தில் இருந்து ஒருவர் வந்தால் மட்டுமே முடியும்.

சஜித்தின் தந்தை பிரேமதாச அடி மட்ட மக்களுக்கு அதிக சேவை செய்தவராக மக்களிடையே பிரபல்யமானவர். உண்மையிலேயே ஏழைகள் தலைநிமிர்ந்து நிற்கும் பல திட்டங்கள் அவருடையவை. அவற்றால் வாழும் கிராமத்தவர்கள் அதிகமானவர்கள். அந்தத் திட்டங்களே வேறு பெயர்களில் நாட்டில் இப்போது வலம் வருகின்றன. இலங்கையில் பின்தங்கிய சமூகத்தினர் அதிகமாக வாழ்கிறார்கள். இதைவிட சஜித்தை அவர்கள் தமது மீட்பராக நினைக்கிறார்கள். இதனால் சஜித் இலகுவான வெற்றியொன்றை பெறப் போகிறார். அடிமட்ட மக்கள் எனும் போது அது தென் பகுதியில் மட்டுமல்ல வடக்கு-கிழக்கிலும் மலையகத்திலும் கூட இதே நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த நிலை கோத்தபாயவுக்கு இல்லை. ஐ.தே.கவுக்கு உள்ள வாக்குகளை விட அதிக வாக்குகளை பெற சஜித்துக்கு அதிக வாய்ப்பே உள்ளது. இது மகிந்த மற்றும் கோத்தபாய தரப்புக்கும் பெரும் பாதிப்பை உண்டாக்கும்.

இங்கே சஜித் பெரும் தர்சனவாதியா? எதிர்கால சிந்தனை உள்ளவரா? என்பதையெல்லாம் இந்த அடிமட்ட மக்கள் தேடப்போவதில்லை. எங்களில் ஒருவருக்கு வாக்களிப்பதாக வாக்களிப்பார்கள். அதனால் சஜித் வெல்வதற்கான வாய்ப்புகளே அதிகம் என்று கூறியுள்ளார். (எ-22)

## அனைத்தும்...

யப்பட்டிருந்தது. முல்லைத்தீவு நீதிமன்ற உத்தரவை மீறியே உடல் தகனம் செய்யப்பட்டிருந்தது. இந்தக் கைங்கரியத்தை கொழும்பில் இருந்து வந்த ஞானசார தேரர் தலைமையிலான பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவே முன்னின்று நடத்தியது. இது தமிழ் மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்தச் சம்பவத்தின்போது பிள்ளையார் ஆலயத்தின் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகளும் அச்சுறுத்தப்பட்டிருந்தனர்.

நீதிமன்றக் கட்டளையை அவமதித்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும், நீதிமன்றக் கட்டளையை அவமதித்தவர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்ட பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சட்டத்தரணிகளும் சேவைப் புறக்கணிப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாகத் தற்போது முல்லைத்தீவு நீதிமன்றில் பொலிஸாரால் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வழக்கு விசாரணை நடைபெறும் நிலையில் பௌத்த பிக்கு ஒருவரை முன்னிலையாகுமாறு நீதிமன்று உத்தரவும் பிறப்பித்துள்ளது.

இந்தநிலையில் கொழும்பு, கிருலப்பனையில் உள்ள பொதுபல சேனா அமைப்பின் தலைமை அலுவலகத்தில் நேற்று ஞானசார தேரர் செய்தியாளர் சந்திப்பு நடத்தினார். அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முல்லைத்தீவு, நாயாறு விகாரையின் விகாராதிபதியின் பூதவுடலைத் தகனம் செய்வது தொடர்பில் நீதிமன்றத்தில் இரு மணித்தியாலங்களுக்கும் மேலாக விசாரணை நடைபெற்றது. மறுபக்கத்தில் தேரரின் பூதவுடல் அழுகிக்கொண்டிருந்தது. வெகு நேரத்தின் பின்னர் அங்கு பூதவுடலைத் தகனம் செய்வதற்கான பிரதேசத்தைத் தெரிவு செய்யுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. எனினும் அதற்குள் தேரரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டுவிட்டது.

இவையனைத்தும் நடைபெற்று முடிந்துவிட்ட நிலையில் இந்த விடயத்தை அப்படியே விட்டுவிட வேண்டும். இந்த விவகாரத்தால் அங்கு தமிழ் - சிங்கள மக்களுக்குஇடையில்எவ்விதமுரண்பாடுகளும் வெடிக்கவில்லை. தேவையின்றிப் போராட்டங்களை நடத்த வேண்டிய அவசியமில்லை

தமிழ் மக்கள் மத்தியில் பிழையான புரிதலை ஏற்படுத்த சிலர் முற்படுகின்றனர். அதன் ஓர் அங்கமாகவே முல்லைத்தீவு விவகாரம் அமைந்திருந்தது.

இந்தவிடயம் தற்போது இது சர்வதேச ரீதியாகவும் பேசுபொருளாக மாற்றமடைந்துள்ளது. பொலிஸாருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம், நாட்டின் தலைவர்கள், சர்வதேசம் என அனைவருக்கும் பிழையான தகவலொன்றே இந்த விடயம் தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

தங்களது அரசியல் தேவையை பூர்த்தி செய்துகொள்வதற்காகவே விக்னேஸ்வரன் போன்ற தரப்பினர் இவ்வாறு செயற்படுகிறார்கள். அதற்காகவே தமிழர்கள் மனங்களின் தேவையில்லாத விசவிதையை விதைக்கிறார்கள். இது தொடர்பாக ஏன் யாரும் குரல் கொடுக்கவில்லை?. அங்கு சட்டம் எமக்கு எதிராக மட்டும்தான் செயற்படுகிறது. இங்கு வடக்கு - கிழக்குக்கு ஒரு சட்டமும் ஏனைய பிரதேசங்களுக்கு ஒரு சட்டமும்தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தச் சம்பவத்தை அடுத்து, தமிழர்களின் வாக்குகள் இல்லாது போய்விடுமோ என்று அரசியல் வாதிகளுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு இல்லாது போய்விடுமோ என்றுதான் அனைவரும் அஞ்சுகிறார்கள். இந்த கீழ்த்தரமான அரசியல் கலாசாரத்தை நாம் தோற்கடிக்க வேண்டும்.

நாம் கோத்தபாய ராஜபக்சவின் பேச்சைக் கேட்டு செயற்படுகின்றோம் என்று கூறுகிறார்கள். கோத்தபாய ஒன்றும் புத்தர் இல்லை நாம் அவரது பேச்சைக் கேட்க. தமிழர்களுக்கு நாட்டில் எங்கும் வாழ முடியும் என்றால், ஏன் சிங்களவர்களுக்கு அதேபோல் வாழ முடியாது?.

முல்லைத்தீவு விவகாரத்தை, இத்தோடு விட்டுவிடவேண்டும். இதன் ஊடாக தமிழர்களுக்கும் எமக்கும் முரண்பாட்டை ஏற்படுத்த எவரும் முற்படக்கூடாது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





### பெண்களுக்கான கால்பந்தாட்டத்தில் 14,16 வயதுப் பிரிவுகளில்

# தெல். மகாஜனக் கல்லூரி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது

யாழ்ப்பாணம், ஒக்.2
இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 14 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் மின்னொளியில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலய அணி மோதியது. இதில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் 16 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது .

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலய அணி மோதியது. இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(23)





### கரப்பந்தாட்டத் தொடரில்

# வெலிஓயா பி.செ. அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக.2
முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையிலான அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் இரு பிரிவிலும் வெலிஓயா பிரதேச செயலக அணி வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

வெலிஓயா மகாவலி மைதானத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் பெண்கள் பிரிவு, முல்லைத்தீவு மாவட்ட செயலகம் அணியை எதிர்த்து வெலிஓயா பிரதேச செயலக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது. இதில் 2:0 என்ற செற் கணக்கில் வெலிஓயா பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வெலிஓயா பிரதேசசெயலகஅணியை எதிர்த்து மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது. இதில் 2:0 என்ற செற் கணக்கில் வெலிஓயா பிரதேசசெயலகஅணிவெற்றி பெற்றது. (23)

# இந்து இளைஞன் வி.க. இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.2
புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் மின் ஒளியில் இடம் பெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் முதலாவது, இரண்டாவது செற் ஆட்டத்தை ஆவ ரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 25:18 ,25: 15 என்ற புள்ளிகள் அடிப் படையில் கைப்பற்றியது. கடும் போரட்டத்துக்கு மத்தியில் மூன்றாவது, நான்காவது செற் ஆட்டங்களை ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழக அணி 25:23, 27:25 என்ற புள்ளிகள் அடிப் படையில் கைப்பற்றியது.



வெற்றியைத் தீர்மானிக்கும் ஐந்தாவது செற் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணி 15:13 என்ற புள்ளிகள் அடிப் படையில் கைப்பற்றி, 3:2 என்றபுள்ளிகள் அடிப்படையில்வெற்றிபெற்றது. (23)



# கராத்தே போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்.ஒக.2
இலங்கை தேசிய கராத்தே தோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப்போட்டியில் சோட்டோக்கான் கராத்தே அக்கிடமி இன்ரநஷனல் சிறிலங்கா அமைப்பின் மாணவர்கள் 45 பதக்கங்களை சுவீகரித்தனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வட மாகாண கராத்தே போட்டியின் குமித்தே போட்டியில் 7 வயதுப் பெண்களுக்கான குமித்தே போட்டியில் ஆருக் ஷியா தங்கப் பதக்கத்தையும், 8வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் ஸ்ரான்லி பிரனீத் தங்கப் பதக்கத்தையும், 11வயது பெண்களுக்கான குமித்தே போட்டியில் ப.ஆன்ரிவிஷ்ஷா தங்கப் பதக்கத்தையும்,11வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் சதீஸ்குமார் மதுஷன் தங்கப் பதக்கத்தையும், 12வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் சதீசன், தவிசன் தங்கப் பதக்கத்தையும், 12வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் சற்குனேஸ்வரன் சங்கீர்த்தன் தங்கப் பதக்கத்தையும், 12வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் உதயகுமார், நவீன்நித்தீஸ் தங்கப் பதக்கத்தையும், 12வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் ஜோன்ரஜிவ் பியன்பெனோ தங்கப் பதக்கத்தையும்,13வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் ஜெகதீஸ் பிரகாஸ் தங்கப் பதக்கத்தையும், 14வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் சாமினிகியூரி பற்ரிசியன் தங்கப் பதக்கத்தையும், 16வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் அருள் றொபின்சன் தங்கப் பதக்கத்தையும், 8வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் தீபக் ஜெய்ஷாந் வெள்ளிப் பதக்கத்தையும், 8வயது பெண்களுக்கான குமித்தே போட்டியில் நந்தகுமார் பவிஷா வெள்ளிப் பதக்கத்தையும்,9வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் சசிக்குமார் அஸ்வின் வெள்ளிப் பதக்கத்தையும்,12வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் யோய்கிறிம்சன் தமிழ்ச்செல்வன் வெள்ளிப் பதக்கத்தையும்,20வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் பாஸ்கரன் பிரகலாதன் வெள்ளிப் பதக்கத்தையும்,21 வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் திருலிங்கம் பிரியங்கன் வெள்ளிப் பதக்கத்தையும்,7வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் பிரசாந் சுதிப்பிரஷாந் வெண்கலப் பதக்கத்தையும்,7 வயதுப் பெண்களுக்கான காட்டா போட்டியில் ஆருக்ஷியா உதயகுமார் வெள்ளிப் பதக்கத்தையும்,8 வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் தீபக் ஜெய்ஷாந் வெள்ளிப் பதக்கத்தையும்,12 வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் உதயகுமார் நவன் நிதித்தீஸ் வெள்ளிப் பதக்கத்தையும்,12 வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் ஜோந்ரஜிவ் பியன்பெனோ வெள்ளிப் பதக்கத்தையும், 16 வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் அருள்றொபின்சன் ஐங்கரன் பிரகலாதன் வெள்ளிப் பதக்கத்தையும்,7வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் சிவபெருமாள் சிரார்த்தனன் வெண்கலப் பதக்கத்தையும்,10வயது பெண்களுக்கான காட்டா போட்டியில் பாத்திமா அஸ்மா முகமம் அன்வர் வெண்கலப் பதக்கத்தையும்,11வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் சதீஸ்குமார் மதுஷன் வெண்கலப் பதக்கத்தையும்,12வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் யோய்கிரிம்சன் தமிழ்செல்வன் வெண்கலப் பதக்கத்தையும், 12வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் சதீசன் தவிஷன் வெண்கலப் பதக்கத்தையும், 12வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் சற்குனேஸ்வரன் சங்கீர்த்தன் வெண்கலப் பதக்கத்தையும்,14வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் ஜெயசுதன் கலைவர்மன் வெண்கலப் பதக்கத்தையும்,14வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் சாமினிகீயூரி பற்ரீசியன் வெண்கலப் பதக்கத்தையும், 21வயது ஆண்களுக்கான காட்டா போட்டியில் திருலிங்கம் பிரியங்கன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






*100 மீற்றர் ஓட்டத்தில்*

# அமெ. வீரர் கோல்மேன் தங்கப் பதக்கம் வென்றார்

உலக தடகளப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்க வீரர் கோல்மேன் 9.76 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து தங்கம் வென்றதோடு, உலகின் அதிவேக மனிதர் என்ற சாதனைக்கும் சொந்தக்காரர் ஆனார்.

17ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி கட்டாரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தின் இறுதி சுற்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் அமெரிக்காவைச் சேர்ந்த இளம் வீரர் கிறிஸ்டியன் கோல்மேன் 9.76 வினாடியில் பந்தய தூரத்தைக் கடந்து உலகின் அதிவேக வீரர் என்ற பட்டத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

தங்கம் வெல்வார் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட ஜஸ்டின் காட்லின் 2ஆவது இடத்தையே பிடித்தார். கனடாவைச் சேர்ந்த ஆந்த்ரே டி கிராசி 9.90 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

பெண்களுக்கான 10ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் நெதர்லாந்தைச் சேர்ந்த ஹிபான் ஹசன் 30 நிமிடம் 17.62 வினாடியில் கடந்து தங்கம் வென்றார். எத்தியோப்பியாவுக்கு வெள்ளியும், கென்யாவுக்கு வெண்கலமும் கிடைத்தன.

## கால்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.2

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 12 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கந்தபுரம் வாணி வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

கந்தபுரம் வாணி வித்தியாலய அணியை எதிர்த்து அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலய அணி மோதியது. இதில் கந்தபுரம் வாணி வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் முதலியார்குளம் வித்தியாலய அணியை எதிர்த்து பூந்தோட்டம் வித்தியாலய அணி மோதியது. இதில் முதலியார்குளம் வித்தியாலய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது.

மற்றுமொரு போட்டியில் 12 வயதுப் பிரிவினருக்கான ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் முஸ்லிம் மகாவித்தியாலயம் அணி கிண்ணம் வென்றது.

முஸ்லிம் மகாவித்தியாலய அணியை எதிர்த்து பூவரசங்குளம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் முஸ்லிம் மகாவித்தியாலயம் அணி வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து விபுலானந்தாக் கல்லூரி அணி மோதியது. இதில் இரண்டு அணிகளும் எந்தவித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 5 : 4 என்ற கோல் கணக்கில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது. (23)

# நவாலி தென்றல் வி.க. இறுதிக்கு முன்னேறியது

யாழ்ப்பாணம், ஒக்.2

யாழ். மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழகம் மின் ஒளியில் நடத்தும் தாச்சித் தொடரில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் நவலி தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (23)

## அணியின் இலக்குக் காப்பாளராக ரிஷப் பந்த்தான் பொருத்தமானவர்

### கங்குலி தெரிவிப்பு

ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட்டில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் ரிஷப் பந்த்துக்கு கங்குலி ஆதரவு தெரிவித்துள்ளார்.



இந்திய கிரிக்கெட் அணியில் டோனிக்கு மாற்றாக ரிஷப் பந்த் அடையாளம் காணப்பட்டுள்ளார். அதிரடி துடுப்பாட்ட வீரரான அவர் 3 வகையான கிரிக்கெட்டுக்கும் இலக்குக் காப்பாளராக இருக்கிறார். இதற்கிடையே கடந்த சில போட்டிகளில் இவரின் ஆட்டம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. அவர் ஓட்டங்களைக் குவிக்க திணறுகிறார். மேலும் இலக்குக் காப்பாளர் பணியிலும் அவரது செயற்பாடு மோசமாக இருக்கிறது. இதனால் விமர்சனத்துக்கு உள்ளானார்.


தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ரிஷப் பந்த்துக்குப் பதிலாக விர்த்திமான் சஹாவுக்கு வாய்ப்பு கொடுக்க அணித் தலைவர் கோக்லியும், பயிற்சியாளர் ரவி சாஸ்திரியும் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் ரிஷப் பந்த்துக்கு இந்திய அணியின் முன்னாள் வீரர் கங்குலி ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ரிஷப் பந்த் ஆட்டத்தின் மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவர் தொடர்ந்து விளையாடினால்தான் கற்றுக்கொள்வார். இந்திய அணியில் தற்போது இளம் வீரர்கள் அதிகமானோர் உள்ளனர். அவர்களுக்கு அணித் தலைவரின் ஆதரவு மிகவும் அவசியம். அந்த வகையில் ரிஷப் பந்த்துக்கு அதிக ஆதரவு தேவைப்படுகிறது. அவர் அணியில் நுழையும் போது மிகவும் சிறப்பான நிலையில் இருந்தார். என்னைப் பொறுத்தவரையில் இந்திய அணியின் 3 வகையான போட்டிகளுக்கும் ரிஷப் பந்த் தான் பொருத்தமான இலக்குக் காப்பாளராக இருப்பார் - என்றார்.

# எம்.சி.சியின் தலைமைப் பதவியை பொறுப்பேற்றார் சங்கக்கார



லண்டனில் அமைந்துள்ள மேரிலெபோன் கிரிக்கெட் கழகத்தின் தலைவர் பதவியை இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார நேற்று பொறுப்பேற்றார்.

குமார் சங்கக்கார, மேரிலெபோன் கிரிக்கெட் கழகத்தின் தலைவராக மாறும் முதல் பிரித்தானியர் அல்லாத நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த 2012ஆம் ஆண்டில் சங்கக்காரவுக்கு மேரிலெபோன் கிரிக்கெட் கழகம் ஆயுள்கால உறுப்பினர் பதவியை வழங்கியிருந்தது. அத்தோடு, சங்கக்கார இந்த கழகத்தினுடைய உலக கிரிக்கெட் ஆலோசனைக்குழுவின் அங்கத்துவராகவும் இருந்தும் உள்ளார்.

தனது பதவியை பொறுப்பேற்றுள்ள சங்கக்கார, எதிர்வரும் 2020ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதம் வரை அதன் தலைவராகக் கடமையாற்றவுள்ளார்.

மேரிலெபோன் கிரிக்கெட் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த மே மாதம் லண்டனில் லோட்ஸில் இடம்பெற்றது. இதன்போதே தற்போதைய தலைவர் அந்தோனி ரைபோர்ட், எம்.சி.சி கழகத்தின் அடுத்த தலைவராக குமார் சங்கக்காரவை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

மேரிலெபோன் கிரிக்கெட் கழகம் லண்டனின் லோர்ட்ஸில் 1787 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கழகம் கிரிக்கெட் விளையாட்டினுடைய விதிமுறைகளை முதல் தடவையாக உருவாக்கியதோடு, இந்த கழகம் உருவாக்கிய கிரிக்கெட் விதிமுறைகளையே இன்னமும் கிரிக்கெட் சபை பின்பற்றி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பம்

அனலைதீவு, ஒக்.2
அனலைதீவு அருணோதய சனசமூக நிலையமும், அருணோதயா விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் தீவக கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை வியாழக்கிழமையும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (9)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1608 சீட்டிழுப்பு திகதி 01.10.2019
வெற்றி இலக்கங்கள் 31 47 51 53 X
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.38, 416, 604 /=
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
செம்மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 03.10.2019 திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 01.10.2019 வெற்றி வாரம் 2634 வர்ணம் சிகப்பு
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 09 11 34 36
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3.486.052/=
02.10.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1050
சீட்டிழுப்பு திகதி 2019.09.30 திங்கட்கிழமை
U 03 25 40 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,401,652/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல.: 748
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.01
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ.50,000,000/-
சுப்பர் ஜக்பொட் வெல்லப்பட்டுள்ளது ரூ. 55,930,760/-
வெற்றி இலக்கங்கள் 02 37 56 72 ஆங்கில எழுத்து Q
SEASON
விசேட வெற்றி இல. 9377
தங்க ஆபரண தொகுதிக்கான விசேட இலக்கம் 204791
ரூ. ஒரு இலட்சம் பரிசுக்கான விசேட இலக்கம் 841184
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

31 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
தோற்றம் 13.03.1946
மறைவு 02.09.2019



அமரர் செல்லையா கணபதிப்பிள்ளை
மானிட வாழ்வு போதுமென்று இறைவன் அழைத்தானே
எங்கள் பரிதவிப்பு தெரியவில்லையா
உங்கள் நினைவு நெஞ்சிருக்கும்வரை நிலைத்திருக்கும்
நாள்கள் கடந்தாலும் ஆண்டுகள் கடந்தாலும் ஆறாது எம் துயரம்
எங்கள் குடும்பத் தலைவர் கடந்த 02.09.2019 அன்று சிவபதமடைந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்கள், உறவினர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை துண்டுப் பிரசுரமாகவும், பதாகை மூலமாகவும் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இரங்க லுரை ஆற்றிய அன்பர்களுக்கும் மேலும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
உயிர் உள்ளவரை உம் நினைவில் நாம் இருப்போம்
மனைவி, பிள்ளைகள்.
ACH/690(11.17)



ஆர்ஜென்ரீனா அணி வீரர் மெஸ்ஸி ரசிகர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தனது ஜேர்சியை ரசிகர்களிடம் கையளிக்கும் காட்சி.

# இன்றைய ஆட்டம்

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் அரச தலைவர் தங்க கிண்ணத்துக்கான 23 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று புதன்கிழமை புத்தூர் வளர்மதி, புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (23)

# ஹர்திக் பாண்டியாவுக்கு அறுவை சிகிச்சை



ஹர்திக் பாண்டியாவின் முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயத்துக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட இருப்பதால் அவரால் நீண்ட குறுகிய சில காலங்களுக்கு விளையாட முடியாத நிலை ஏற்படலாம்.

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர், சகலதுறை ஆட்டக்காரர் ஹர்திக் பாண்டியா கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் டுபாயில் நடைபெற்ற ஆசிய கிண்ணத் தொடரின் போது முதுகுப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதற்கு சிகிச்சையும் மேற்கொண்டிருந்தார். எனினும் அந்த வலி தொடர்ந்தும் இருந்ததால் தற்போது இடம்பெற்று வரும் தென்னாபிரிக்கா தொடரிலும் இருந்தும் விலக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மீண்டும் சிகிச்சை மேற்கொள்ளப்பட இருப்பதால் அவர் நடைபெற இருக்கும் பங்களாதேஷ் தொடரில் விளையாடமாட்டார் எனக் கூறப்படுகிறது.

ஒருவேளை அறுவை சிகிச்சை மேற்கொண்டால் சுமார் ஐந்து மாதங்கள் வரை அவரால் விளையாட முடியாது - எனக் கூறப்படுகின்றது.

# சாரா ரெய்லர் ஓய்வு பெற்றார்

இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியின் இலக்குக் காப்பாளர் சாரா ரெய்லர் கடந்த வெள்ளிக்கிழமை கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.


இவர் 2006 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணிக்கு அறிமுகமானார். இவர் ஒருநாள், டெஸ்ட், ரி-20 என 226 போட்டிகளில் ஆடி 6,533 ஓட்டங்களை எடுத்தார்.

இவர் 2009ஆம் ஆண்டு, 2017ஆம் ஆண்டு ரி-20, மற்றும் ஒருநாள் உலகக் கிண்ணங்களை அணிக்கு வென்று கொடுத்தார். அதனை விட மூன்று ஆஷஸ் வெற்றிகளிலிருந்து வெற்றியாளர்களின் பதக்கங்களை அவர் பெற்றுள்ளார். தனிப்பட்ட முறையில், அவர் வரையறுக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் நான்கு முறை ஐ.சி.சி பெண்கள் கிரிக்கெட் வீரராக இருந்தார். இவரது ஓய்வு அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.



# உலகின் தலைசிறந்த இலக்குக் காப்பாளர் சகா

## விராட் கோக்லி புகழாரம்



மூன்று வகை கிரிக்கெட்டுக்கும் ரிஷப் பந்த்தை நீண்ட கால இலக்குக் காப்பாளர், துடுப்பாட்ட வீரராக உருவாக்க முயற்சி எடுத்து வருகிறோம். அவருக்கு போதுமான அளவு வாய்ப்புகள் வழங்கப்படும் என்று இந்திய அணி நிர்வாகம் தெரிவித்தது.

கப்டன் விராட் கோலி, தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோர் ரிஷப் பந்த்துக்கு ஆதரவு தெரிவித்து வந்தனர். இதனால் மேற்கிந்தியத்தீவுகள் தொடரில் அவர் இலக்குக் காப்பாளராக நியமிக்கப்பட்டார். ஆனால் ரிஷப் பந்த்தால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி-20 தொடரிலும் அவர் சிறப்பாக விளையாடவில்லை. இதனால் அவர் மீது விமர்சனம் எழும்பியது. இந்த நிலையில் இன்றைய தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ரிஷப் பந்த்துக்குப் பதிலாக விருத்திமான் சகா இணைக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து கோக்லி தெரிவிக்கையில்;

சகா உடற்தகுதி பெற்று விளையாடத் தயாராக உள்ளார். அவர் எங்களுடன் இந்த தொடரைத் தொடங்க இருக்கிறார். அவருடைய இலக்குக் காப்பாளர் திறமையை ஒவ்வொருவரும் பார்த்திருப்பீர்கள். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் துடுப்பாட்டத்திலும் சிறப்பாக விளையாடியுள்ளார். என்னைப் பொறுத்த வரையில் அவர் உலகின் சிறந்த இலக்குக் காப்பாளர்- என்றார்.

பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண் பணியாளர் தேவை.
076 564 6282
(CS 28418)(14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.